

# பழங்கால பண்பாடும்
# பழங்குடிகள் பண்பாடும்

அரசாங்கப் பொருட்காட்சிச் சாலை, சென்னை.

# பழங்கால பண்பாடும் பழங்குடிகள் பண்பாடும்

(பொருட்காட்சிச் சாலையின் வரலாற்று முன்னிலை, மானிட வகை இயல், தொழிற் பண்பாடு, மனித உயிரியல் முதலிய பிரிவுகளைக் கொண்ட மானிட வியல் பகுதிக்கு ஓர் துணை நூல்).

சீ. ஜே. ஜெயதேவ், M. A., L. T.
மு. இரகுபதி, M. A., M. A.

வெளியீடு :
அருங்காட்சியகங்களின் முதன்மை ஆணையர்,
அரசு அருங்காட்சியகம்,
சென்னை-8
1999.

முதற் பதிப்பு : 1962
மறு பதிப்பு : 1999

© அருங்காட்சியகங்களின் முதன்மை ஆணையர்
அரசு அருங்காட்சியகம், சென்னை – 8.

விலை : ரூ.35.00

அச்சிட்டோர்:

மடிப்பாக்கம் எழுதுபொருள் மற்றும் பதிவேடு
உற்பத்தியாளர் தொழிற் கூட்டுறவு சங்கம் (வ–து)
சென்னை –81.

## உள்ளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| முன்னுரை | i |
| வரலாற்றுக் காலத்திற்கு முற்பட்ட பண்டைப் பொருட்கள் | 1 |
| பழைய கற்காலம் | 3 |
| இடை கற்காலம் | 4 |
| புதிய கற்காலம் | 5 |
| தென் இந்தியாவில் வெண்கல காலம் | 6 |
| சிந்துநதி கற்-செம்பு காலம் | 7 |
| இந்தியாவின் இரும்பு காலம் | 9 |
| திருநெல்வேலியில் முதுமக்கள் தாழி | 9 |
| செங்கற்பட்டு ஈமத்தாழிகள் | 10 |
| கடப்பையிலுள்ள செம்மறியாட்டின் உருகொண்ட ஈமத்தாழி | 11 |
| நீலமலை கற்குத்துக்கள் | 11 |
| பிரமகிரியின் கல்வட்டக் கல்லறை | 12 |
| மலபாரில் பருக்கின் கற்குடைவுகள் | 13 |
| பிரமகிரியின் பண்பாடு | 14 |
| தென் இந்தியாவில் ரோமானியர் | 15 |
| சரித்திரகால ஆயுதங்கள் | 16 |
| தென் இந்திய பழங்குடிகளின் தொழிற் பண்பாடு | 17 |
| தென் இந்திய பழங்குடிகள் | 23 |
| ஆஸ்திரேலிய பழங்குடிகளின் பண்பாடு | 32 |
| அமெரிக்க பழங்குடிகளின் பண்பாடு | 35 |
| ஆப்பிரிக்க பழங்குடிகளின் பண்பாடு | 37 |
| பௌதிக மானிடவியல் | 41 |

# முன்னுரை

மனித வரலாறு தாவரங்கள், விலங்குகள் போன்று பரிணாமத்தால் மாறுபாடுகள் அடைந்துகொண்டு வந்திருக்கிறது. மனிதன் மற்ற உயிரினங்களைப்போல் பரிணாம விதிகளுக்கு உட்பட்டிருக்கிறான். மனித வரலாறு மற்ற உயிரினங்களைப் போல் உயிரியல் (Biology) விதிகளுக்குமட்டுமேயன்றிச் சமூக அமைப்பு, பண்பாடு, இவைகளுக்கும் உட்பட்டிருக்கிறது. மனித வரலாறு இருவகைப்படும். அவை மனிதத் தொல்லுயிரியல் (Human Palaeontology) மனித உயிரியல் (Human Biology). மனிதன் பரிணாமத்தில் தோன்றியதிலிருந்து இதுவரைக்கும் அடைந்த மாறுபாடுகளை ஆராய்வது மனிதத் தொல்லுயிரியல். மனிதன் தற்போதைய உடலமைப்பில் அவன் உயிரியல் விதிகளுக்குட்பட்டு எப்படி இருக்கிறான் என்பதை ஆராய்வது மனித உயிரியல். மனித வரலாறு எழுத்து வாயிலாக இல்லாத பழங்கால வரலாற்றை வரலாற்றிற்கு முற்பட்ட தொல்பொருளியல் (Prehistory or Prehistoric Archaeology) என்பர். இந்த நீண்ட காலத்தின் சான்றுகளிற் அழிந்தது போல் மற்ற எஞ்சிய பாகங்கள் இருவகைப்படும். மனித உடம்பிலுள்ள எலும்புகள், பற்கள் போன்ற உயிர் பொருள்களும், (Organic materials) பழமைக்கு ஏற்றவாறு பாசிலாதல் (Fossilization) என்ற மாறுபாடுகள் அடைந்திருக்கும் பொருள்களும் ஆகும். இவ்வித மனித உடலுறுப்புக்களைக்கொண்டு மனிதன் பரிணாமத்தில் ஏற்பட்ட மாறுதல்களை விளக்குவது மனிதத் தொல்லுயிரியல். மனிதன் மனிதனாகத் தோன்றிய காலத்திலிருந்து, அதாவது பத்து லட்சம் ஆண்டுகளுக்கு முன்னிருந்து அவன் செய்து உபயோகித்த பொருள்களை (Artifacts) விளக்குவது, வரலாற்று முன்னிலை (Prehistory) அல்லது தொல் பொருளியல் (Archaeology) எனப்படும். இவ்விரு அறிவியல்களும் மனிதன் பழங்காலத்தில் எப்படி இருந்தான், என்ன செய்தான் என்னும் இரு வினாக்களுக்கும் போதிய சான்றுகளைக் கொண்டு ஒன்றுக்கொன்று பதிலளிக்கின்றன. மேலும், இவை தற்போது மனிதன் எப்படி இருக்கிறான் என்பதையும், தற்போது என்ன செய்கிறான் என்பதையும் தொடர்ச்சியாக விளக்கும். மனிதனின் தற்காலத்திய இவ்விரு இயல்களும் முறையே மனித உயிரியல் அல்லது பௌதிக மானிடவியல் என்றும் (Physical Anthropology) சமூக அல்லது பண்பாட்டு மானிடவியல் (Social or Cultural Anthropology) என்றும் சொல்லப்படும்.

மனிதன் பரிணாமத்தால் அடைந்த சில தேர்ச்சிகளால் இயற்கைப் பொருள்களைக் கைக்கொள்வதோடு, செயற்கைப் பொருள்களையும் செய்து கையாண்டு வந்தான். இதன் விளைவாகத்தோன்றியதுதான் மனிதனின் பண்பாடு (Calture.) மனிதன் மனிதனாக பத்து இலட்சம் ஆண்டுகளுக்கு முன்பு தோன்றியபோது, அவன் எளிய பண்பாட்டை உடைய வனாக இருந்தான். கல், எலும்பு, கொம்பு, மரம் முதலியவற்றால் கருவிகள் செய்து பயன்படுத்தினான். இயற்கையில் கிடைக்கும் காய், கனி, கிழங்குகளை தின்றும், வேட்டையாடிய உயிர்களை புசித்தும், குகைகளிலும் மலைச் சரிவுகளிலும் வசித்தும் வந்தான். மரத்தின் உராய்வினால் நெருப்புண்டாக்கினான். விலங்குகளின் தோல்களை, ஆடையாகவும், இறைச்சியை உணவாகவும், கொழுப்பை விளக்கெரிக்கும் நெய்யாகவும், எலும்புகளைக் கருவிகளாகவும் பயன் படுத்தினான். இயற்கைத் தாவரங்களிலிருந்து விவசாயம் பழகியும், காட்டு விலங்குகளை வசப்படுத்தி அவைகளின் உழைப்பையும், உணவுப் பொருள்களையும் பெற்றான். இயற்கைப் பொருள்களைக் கொண்டு பண்பாட்டிற்கு ஏற்றவாறு இருப்பிடம் அமைத்துக் கொண்டான். பழங்கற்காலத்தில் உணவுப் பொருள்களைச் சேகரித்தும் வேட்டையாடியும் பிழைத்து வந்த மனிதன், புதிய கற்காலத்தில் விவசாயத்தால் உணவு உற்பத்தியும் வீட்டு விலங்குகளின் பண்ணையும், பானை பாத்திரங்கள் செய்தலி லும், நெசவு மூலம் ஆடைகளைத் தயாரித்தலிலும் தேர்ச்சி யுற்றான்.

நைல், யூப்ரட்டீஸ், சிந்து போன்ற பேராறுகளின் பள்ளத் தாக்குகளில் புதிய கற்கால மனிதன் உணவுத் தொழிலின் தேர்ச்சியால் மிக்க உணவு தயாரித்து எதிர்காலத்திற்குச் சேமித்து வைக்கும் நிலைமை ஏற்பட்டது. மிக்க உணவு உற்பத்தியினால் ஒரு குடியிலுள்ள மனிதர்களெல்லாம் உணவு உற்பத்தியில் ஈடுபடவேண்டியதில்லாமல் போய்விட்டது. இதன் விளைவாகப் பல திறன்பட்ட தொழில்கள் அபிவிருத்தி அடைந்தன. புதிய கற்காலத்திய சமூக அமைப்புகள் சிறிய கிராமங்களாகவும் தம் தேவைகளைத் தாமே பூர்த்தி செய்து கொள்ளக்கூடியவையாகவும் இருந்தன. தொழில் வளர்ச்சி, போக்குவரத்து, வணிகம் அதிகரிக்க நாகரிகம் ஏற்பட்டது. பலதரப்பட்ட கொள்கைகளும் பண்பாடுகளும் உடைய மக்கள் ஒன்றுகூடி நெருங்கிப் பழகிப் பலதரப்பட்ட தொழில் களைச் செய்வதனால் சமுதாய வளர்ச்சியும் நாகரிகமும் உண்டாயின. உலோகங்களைக் கையாளுதலும், எழுத்துப்

பிரதிகள் மூலம் குறிப்புகள் வைத்தலும், அரசியல், பொருளாதாரம், தொழில்கள் மூலம் சமூகப் பிரிவுகள் ஏற்படுத்தலும் நாகரிகத்தின் அடிப்படைகள். கணிதம், வானவியல், போர் முதலியன நாகரிகங்களின் சீரிய அடையாளங்கள். இவ்விதச் சீரிய பண்பாடுடைய சமூகங்கள் பெரிய ஆற்றுப் பள்ளத்தாக்குகளில் உண்டாயிருந்தும் அவைகள் வளர்ச்சியும் வீழ்ச்சியும் அடைந்து இருக்கின்றன. இவ்விதப் பண்டை நாகரிகங்களின் எஞ்சியபாகங்களைப் புதைப் பொருள் ஆராய்ச்சியால் அவைகளைக் கையாண்ட மானிடர்களின் சமூக வாழ்க்கை, பண்பாடு, நாகரிகம் இவைகளை உருவாக்கப் படுத்துவது தொல்பொருளியலாகும்.

பண்பாட்டு அல்லது சமூக மானிடவியல் (Cultural or Social Anthropology) மனித சமூகத்தின் தோற்றம், அமைப்பு, குணுதிசயங்கள், வளர்ச்சி, வீழ்ச்சி, பரிணுமம், பரவுதல் இவைகளை விளக்கும். மனிதனுடைய சமூகவாழ்க்கைக்குப்பண்பாடு அடிப்படையானது. மானிட வர்க்கமும் விலங்குகளும், பொது உடலமைப்பிலும் இயற்கைத் தேவைகளிலும் ஒத்திருக்கின்றன. உணவு, இருப்பிடம், கலவி ஆகிய அடிப்படையான இயற்கைத் தேவைகளை விலங்குகளும் மானிட சமூகமும் பூர்த்தி செய்துகொள்ளுகின்றன. ஓரினத்திலுள்ள பிராணிகள் இத்தேவைகளை ஒரேவிதமாக அடையும். இவைகள் பிராணிகளின் இயற்கை உணர்ச்சிகளுக்கும், சூழ்நிலைக்கும் ஏற்றவையாக இருக்கும். ஆயினும் இவைகள் மனிதர்களிடத்தில் மட்டும் சமூகத்தின் பண்பாட்டிற்கும், சமூக அமைப்பிற்கும் ஏற்றவாறு மாறுபடும். பண்பாடும் சமூக அமைப்பும் மனிதனின் சூழ்நிலையை ஒட்டி வளர்ச்சி அடைந்திருந்த போதிலும் மனிதன் மட்டுமே தன் சூழ்நிலையைத் தன் தேவைகளுக்கு ஏற்றவாறு மாற்றி அமைத்துக் கொள்ளும் ஆற்றல் உடையவனுயிருக்கிருன். பழங்குடிகளும் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திய மக்களும் இயற்கை உணவுப் பொருள்களைச் சேகரித்தல், வேட்டையாடுதல், விலங்குகளை வளர்த்தல், நாடோடி விவசாயம் செய்தல் இவை போன்ற பலதரப்பட்ட பண்பாடுகளைப் பின் பற்றி வாழ்ந்துள்ளனர். பண்பாடு என்பது ஒரு சமூகம் தன் வாழ்க்கையை நடத்தும் முறை. பண்பாடுகள் சமூகங்களின் வளர்ச்சி, தேர்ச்சி, மலர்ச்சிக்கேற்றவாறு எளியவையாகவும், சீரியவையாகவும் உண்டாயிருக்கலாம். மானிடவியல் பண்பாடுள்ள குடிகள், பண்பாடற்ற குடிகள் என்று கொள்வதில்லை. தனித்து வாழும் அந்தமானியர், ஆஸ்திரேலியர் போன்ற எளிய பழங்குடிகளுக்

கும்.நாகரிகமடைந்த எல்லா சமூகங்களுக்கும் பண்பாடு உண்டு. பண்பாட்டின் வளர்ச்சியே நாகரிகத்திற்கு அடிப்படை. மாறுபட்ட பண்பாடுடைய குடிகள் ஒருவருடன் ஒருவர் நெருங்கி பழகுவதனுலும், ஒன்றுகூடி நிரந்தர வாழ்க்கையை நடத்துவதனுலும் நாகரிகங்கள் உண்டாகின்றன. தனித்து வாழும் எளிய பண்பாடுடைய பழங்குடிகள் நாகரிகம் அடைவதில்லை. குறைந்த எண்ணிக்கையும் ஒரேவிதமான எளிய பண்பாடும் உடைய சமூகங்கள், மக்கள் தொகை அதிகமாகவும் பண்பாடு விரிவடைந்தும் உள்ள சமூகங்களின் சந்திப்பினுலும் கலப்பினுலும் நசிந்துப் போய் விடுகின்றன; அல்லது அவைகளின் பண்பாடு சீர்குலைந்து முற்போக்குள்ள சமூகங்களின் பண்பாட்டில் கலந்து மறைந்து போகலாம். ஏனைய பிராணிகளைப் போல் மனிதன் பிறக்கும் போது ஒரு விலங்காகவே இருக்கிருன். ஆயினும் அச்சமூகத்தின் பழக்க வழக்கங்கள், சட்ட திட்டங்கள், கட்டுப்பாடுகள், உரிமைகள், விதி விலக்குகள் எல்லாம் ஒன்று சேர்ந்த சமூகப்பண்பாடு அவனை அச்சமூகத்தைப் பின்பற்றும்படி செய்கின்றன. மனிதன் தான் பிறந்து வளரும் சமூகத்தின் பண்பாட்டைப் பயிலுகிருன். மனித சமூகத்தில் ஒருவன் விலங்கு போன்று பிறந்து, வளர்ந்து, இனவிருத்தி செய்து இறத்தல் இல்லை. ஒவ்வொரு பருவத்திலும் அப்பருவ வகுப்பிற்கு ஏற்ற அறிகுறிகளாகிய சின்னங்களைப் பெற்றும், அவைகளுக்கேற்ற சடங்குகளில் ஈடுபட்டும், கடமைகளையும், உரிமைகளையும், நடவடிக்கைகளையும் அனுசரித்தும், சமூக ஒருமைப் பாட்டை நிலைநிறுத்தியும் இருக்க வேண்டியிருக்கிருன். பெயரிடல், முடியெடுத்தல், காது குத்தல், சோறூட்டுதல், கல்வி கற்பித்தல், பூணூல் போடுதல், மணம், கிருகஸ்தம், வானப்பிரஸ்தம், சன்னியாசம் முதலிய சடங்குகள் மனிதனுடைய இயற்கைப் பருவ நிலைகளைச் சமூக வாயிலாகக் கட்டுப்படுத்தி அங்கீகாரம் செய்வனவாகும். இவ்வித நிலைகளுக்கு ஏற்ற நிலை, மதிப்பு, உரிமை, கடமை இவைகளையெல்லாம் சமூகம் தனி மனிதனைப் பின்பற்றச் செய்கிறது. இவ்வித நடவடிக்கைகளால் சமூகத்தின் உறுப்பினர்கள் இறந்துவிட்ட போதிலும் சமூகத்தின் பண்பாடு மட்டும் நிலைத்திருக்கிறது. ஆயினும் பல சமூகப் பழக்க வழக்கங்களும் பண்பாட்டின் அம்சங்களாக மாறுபாடு அடைந்தும் வருகின்றன. இவைகள் வளர்ச்சியும் மறுமலர்ச்சியும் அடைவதையும், சிலவற்றில் சிதைவும் வீழ்ச்சியும் அடைவதையும் காண்கிருேம். மனிதன் தன் சமூகத்தின் உறுப்பினனுகத் தான் கற்றவைகளைத் தன் சந்ததியாருக்கும் தன் இனத்தவர்

களுக்கும் கற்பிப்பதையே பண்பாடு எனலாம். இவ்விதம் சமூக வாயிலாகக் கற்றுக்கொண்டு பிறருக்குக் கற்பித்துக் கொடுக்கும் கற்றுப்பயிலும் நடத்தையே பண்பாடாகும்.

வரலாற்று முன்னிலை கால பண்பாட்டையும், வரலாற்றுக் கால பழங்குடி பண்பாட்டையும், எடுத்துக் காட்டுவதே "பழங்கால பண்பாடும், பழங்குடி பண்பாடும்" என்னும் இப்புத்தகத்தின் நோக்கமாகும். மக்களை நாகரிக மக்கள், அநாகரிக மக்களெனப் பிரிப்பது போல், பண்பாடுள்ளவர்கள், பண்பாடற்றவர்களென பிரிப்பது தவறு என்பதையும் இப் புத்தகத்தில் தெளிவாக எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. மேலும் பழங்குடி மக்கள் சிந்தனை, செயல், கல்வி, தொழில், கலை, ஆடை அணிகள், இன்ப வாழ்வு ஆன பல துறைகளில் முன்னேறியுள்ளனர்—முன்னேறிக்கொண்டு வருகின்றனர் என்பதையும் எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.

சி. ஜே. ஜெ.

மு. இ.

சு. ரங்கமணி, இ.ஆ.ப.
அருங்காட்சியகங்களின் முதன்மை ஆணையர்

அரசு அருங்காட்சியகம்.
சென்னை - 600 008

# முன்னுரை

மனித வரலாறு தாவரங்கள், விலங்குகள் போன்று பரிணாமத்தால் மாறுபாடுகள் அடைந்துகொண்டு வந்திருக்கிறது. மனிதன் மற்ற உயிரினங்களைப் போல் பரிணாம விதிகளுக்கு உட்பட்டிருக்கிறான். மனித வரலாறு மற்ற உயிரினங்களைப் போல் உயிரியல் (Biology) விதிகளுக்கு மட்டுமேயன்றிச் சமூக அமைப்பு, பண்பாடு, இவைகளுக்கும் உட்பட்டிருக்கிறது. மனித வரலாறு இருவகைப்படும். அவை மனிதத் தொல்லுயிரியல்(Human Palaeontology) மனித உயிரியல் (Human Biology) மனிதன் பரிணாமத்தில் தோன்றியதிலிருந்து இதுவரைக்கும் அடைந்த மாறுபாடுகளை ஆராய்வது மனிதத் தொல்லுயிரியல். மனிதன் தற்போதைய உடலமைப்பில் அவன் உயிரியல் விதிகளுக்குட்பட்டு எப்படி இருக்கிறான் என்பதை ஆராய்வது மனித உயிரியல். மனித வரலாறு எழுத்து வாயிலாக இல்லாத பழங்கால வரலாற்றை வரலாற்றிற்கு முற்பட்ட தொல் பொருளியல்(Prehistory or Prehistoric Archaeology) என்பர். இந்த நீண்ட காலத்தின் சான்றுகளிற் அழிந்தது போல் மற்ற எஞ்சிய பாகங்கள் இருவகைப்படும். மனித உடம்பிலுள்ள எலும்புகள், பற்கள் போன்ற உயிர் பொருள்களும் (Organic Materials) பழமைக்கு ஏற்றவாறு பாசிலாதல் (Fosailization) என்ற மாறுபாடுகள் அடைந்திருக்கும் பொருள்களும் ஆகும். இவ்வித மனித உடலுறுப்புக்களைக் கொண்டு மனிதன் பரிணாமத்தில் ஏற்பட்ட மாறுதல்களை விளக்குவது மனிதத் தொல்லுயிரியல். மனிதன் மனிதனாகத் தோன்றிய காலத்திலிருந்து, அதாவது பத்துலட்சம் ஆண்டுகளுக்கு முன்னிருந்து அவன் செய்து உபயோகித்த பொருள்களை (Artifacts) விளக்குவது, வரலாற்று முன்னிலை (Prehistory) அல்லது தொல் பொருளியல் (Archaeology) எனப்படும். இவ்விரு அறிவியல்களும் மனிதன் பழங்காலத்தில் எப்படி இருந்தான், என்ன செய்தான் என்னும் இரு வினாக்களுக்கும் போதிய சான்றுகளைக் கொண்டு ஒன்றுக்கொன்று பதிலளிக்கின்றன. மேலும், இவை தற்போது மனிதன் எப்படி இருக்கிறான் என்பதையும், தற்போது என்ன செய்கிறான் என்பதையும் தொடர்ச்சியாக விளக்கும். மனிதனின் தற்காலத்திய இவ்விரு இயல்களும் முறையே மனித உயிரியல் அல்லது உடற்கூறு மானிடவியல் என்றும் (Physical Anthropology) சமூக அல்லது பண்பாட்டு மானிடவியல் (Social or Cultural Anthropology) என்றும் சொல்லப்படும்.

வரலாற்று முன்னிலை கால பண்பாட்டையும், வரலாற்றுக் கால பழங்குடி பண்பாட்டையும், எடுத்துக் காட்டுவதே "பழங்கால பண்பாடும், பழங்குடி பண்பாடும்' என்னும் இப்புத்தகத்தின் நோக்கமாகும். மக்களை நாகரிக மக்கள் அநாகரிக மக்களெனப் பிரிப்பது தவறு என்பதையும் இப்புத்தகத்தில் தெளிவாக எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. மேலும் பழங்குடி மக்கள் சிந்தனை, செயல், கல்வி, தொழில், கலை, ஆடை அணிகள் போன்ற பல துறைகளில் முன்னேறியுள்ளனர் - முன்னேறிக் கொண்டு வருகின்றனர் என்பதையும் எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.

சென்னை-8
24-2-1999

(S. Rangamani, I.A.S.)

# பழங்கால பண்பாடும் பழங்குடிகள் பண்பாடும்

## வரலாற்றுக் காலத்திற்கு முற்பட்ட பண்டைப் பொருட்கள்.

நூறு ஆயிரம் ஆண்டுகட்கு முன்பிருந்து வரலாற்றுக் காலம்வரை, இந்திய ஆதி மனிதனின் வாழ்க்கை பொருட்காட்சியின் வரலாற்று முன்னிலே பகுதியில் வரிசையாக வைக்கப்பட்டுள்ளன. இதில் கற்காலம், உலோகக் காலம், இரும்பு காலங்களில் ஆதிமனிதன் உபயோகித்த பற்பல கருவிகளைக் காணலாம். 1878-ல் பொருட்காட்சியின் தலைமையதிகாரியாய் இருந்த சர்ஜன் ஜெனரல் பிட்டி (G. Bidie) மானிடவியலே, தொல் பொருளியல் பொருட்களைக் கொண்டும், மானிட வர்க்கத்தின் பண்பாட்டை விளக்கும் பொருட்களைக் கொண்டும் ஒரு தனிப் பகுதியாக நிறுவினார். இவற்றில் காணப்படும் பழங் கற்காலக் கருவிகள், புதிய கற்காலக் கருவி கள், புராதனப் பானைகள், ஆபரணங்கள், மணிகள், போர் ஆயுதங்கள், உழவுக் கருவிகள், பாத்திரங்கள், இரும்புகால புதையிடங்களில் சவப் பானைகளிலும், கற்கிடைகளிலும் உபயோகித்தச்சடங்குப் பொருட்கள், தென் இந்தியரின் பண்பாட்டை உணர பெரிதும் உதவி செய்கின்றன.

வரலாற்றுக் காலத்திற்கு முற்பட்ட புராதனப் பொருட்கள் பொருட் காட்சி அரங்கின் பின்புறத்திலுள்ள கட்டிடத்தின் கீழ் தளத்திலும், புதுவாயில் கட்டிடத்தின் முதல் தளத்திலும் வைக்கப்பட்டுள்ளன. கீழ் தளத்திலுள்ள மிக முக்கியமானதும், பிரசித்தி பெற்றதுமான பொருட்கள் தொல் பொருளியல் வல்லுநர்கள் சேர்த்ததும், தொகுத்ததும் ஆகும் இவர்கள் பிரீக்ஸ் (J.W. Breeks), புட் (R.B. Foote), ரே (A. Rea), ஆவர். மொஹஞ்சதாரோவிலும், ஹரப்பாவிலும் கண்டெடுத்த மாதிரிப் பொருட்கள் முதல்தளத்தில் வைக்கப்பட்டுள்ளன. புட் என்பவர் 1901-ல் பிரீக்ஸ் தொகுப்புடன் கார்ட்யூ (Cardew), ரே (Rea), இன்னும் மற்றவர் களின் தொகுப்புகளையும் ஒன்றாகச் சேர்த்து புத்தகமாக வெளியிட்டார். இப்புத்தகத்தில் உள்ளவையே இப் பொருட்காட்சியின் வரலாற்று காலத் திற்கு முற்பட்ட பண்டைப் பொருட்களாகத் திகழ்கின்றன. புட் நாற்பத்து மூன்று ஆண்டுகள் மத்திய அரசாங்க நிலவியல் துறையில் (Geological survey of India) பணியாற்றியபோது பொழுதுபோக்காக சேகரித்த இப் பொருட்களை ரூ. 40,000-க்கு இப் பொருட்காட்சிக்காக 1904-ல் சென்னை அரசாங்கம் வாங்கியது. புட் அவர்கள் மேற்கண்ட பொருட்களை 1914-ல் தொகுத்துடன் 1916-ல் 'காலமும், பரப்பும்—குறிப்புகள்', என்ற தலைப்பில் தொடர்ச்சி யாகவும் பிரசுரித்தார். 1915-ல் தொல்பொருள் வல்லுநர் ரே ஆதிச்ச நல்லூர் முதுமக்கட் தாழிகளையும், பெரும்பையார் கல்வட்ட கல்லறை களையும் தோண்டி எடுத்து, ஆராய்ச்சி செய்த வரலாற்றையும் தொகுத்தார். இத்துடன் கிருஷ்ணசாமி (Krishnaswami, V.D.), அய்யப்பன் (Aiyappan, A.), ஆகியவர்களின் தென் இந்திய கற்காலப் பண்பாட்டை விளக்கும் தொகுப்பு களையும் ஒன்றாகச் சேர்த்தால் வரலாற்றுக் காலத்திற்கு முற்பட்ட புராதனப்

பொருட்களின் பெரும் தொகுப்பு, இந்த ஒரே பொருட்காட்சியில்தான் இருக்கிறது. ஆகவே இந்தியாவிலும், வெளிநாடுகளிலும் உள்ள பண்டை வரலாற்று வல்லுநர்கள் படிக்கவும், குறிப்பெடுக்கவும், ஆராய்ச்சிச் செய்யவும் இங்குள்ள தொகுப்புகள் நீண்டகாலமாக மிகவும் பயன்பட்டு வருகிறது. மேற்கூறிய பண்டை பொருள்களின் தொகுப்புகள் இந்தியா வின் பெரும்பான்மையான பரப்பின் தொல்பொருளை விளக்கும். உதாரண மாக, சிந்துநதி நாகரிகம் மார்ஷல் முதலியோர்களால் கண்டறிவதற்கு முன்பே, இத் தொகுப்பில் கூர்ஜரம் போன்ற இடங்களில் இந் நாகரிகத் தின் சீரிய அம்சங்களைக் காணலாம்.

மேலும், இப் பண்டைப் பொருள்களின் தொகுப்புகள் இந்தியாவில் மட்டுமே அல்லாமல் உலகத்திலுள்ள பெரும்பான்மையான அன்னியநாடு களிலிருந்தும் பண்டம் மாற்றும் முறையில் கொணரப்பெற்று இக்காட்சிச் சாலையில் அமைந்திருக்கிறது.

இவ்விரு வெளிநாடுகளின் தொல் பொருளியலை விளக்கும் கற்கால கருவிகள் இங்கிலாந்து, பிரான்ஸ், டென்மார்க், எகிப்து, தென் ஆப்பிரிக்கா, மலேயா, ஜாவா, சீனு, ஜப்பான், அமெரிக்கா முதலிய நாடுகளிலிருந்து கிடைத்தவை. இவைகள் உலக முழுமையும் கற்கால மனிதர்களுடைய பண்பாடு எவ்விதமிருந்ததென்பதையும், எவ்விதம் நாளடைவில் இவ்வித பண்பாடுகள் தேர்வடைந்து பண்டை நாகரிகங்களின் எழுச்சிக்கு ஆதாரமா யிருந்தனவென்பதையும் விளக்குகின்றன.

## பழைய கற்காலம்

கற்காலத்தில் கற்கருவிகளை மனிதன் செய்து உபயோகித்தான் என்பது ஒரு நூற்றுண்டிற்கு முன்பு செய்த ஆராய்ச்சிகளின் மூலம் நிரூபிக்கப்பட்டு விட்டது. கற்காலத்தில் மனிதன் கற்களை மட்டுமேயன்றி மரம், எலும்பு, கொம்பு முதலிய பலவிதமான இயற்கைப் பொருட்களைக் கொண்டு ஆயுதங்களும், கருவிகளும் செய்தும், உபயோகித்தும் வாழ்ந்து வந்தான். இவ்விதமானப் பொருள்களில் தொல்பொருள் ஆராய்ச்சியாளருக்கு இவை களில் எஞ்சியவை மட்டும் கிடைத்துள்ளன. இதனுல் இக் காலத்தைக் கற் காலம் என்கிறேும். கற்காலத்தில், மனிதன் உபயோகித்தக் கற்கருவிகள் கடினக் கற்களால் ஆனவை. அவைகள் மற்றக் கற்களின் உதவியால் செதுக்கப்பட்டு, கூருகவும் வெட்டும் முனையுடையதாகவும் ஆக்கப்பட்டவை. அவைகளின் மேற்புறங்கள் கரடுமுரடாகவே விடப்பட்டன. நிலவியலின் படிவங்களையும், அவைகள் காட்டும் சீதோஷ்ண நிலை மாற்றங்களையும், அக்காலத்துப் பிராணிகளின் எலும்புகளையும் கொண்டு கற்காலத்தைக் கணக்கிடலாம். தென் இந்தியாவின் பழைய கற்காலம் சுமார் 125,000 லிருந்து 500,000 ஆண்டுகளான கூறப்படுகிறது. அக்காலத்தில் மனிதன் வேடுவனுகவும், நாடோடியாகவும் திரிந்துக்கொண்டு, பிராணிகளை வேட்டை யாடியும், கிழங்குகளை தோண்டி எடுத்தும், காய்கனிகளை புசித்தும் தன் தேவைகளை பூர்த்திச்செய்தான். அப்போது அவன் உபயோகித்த கற்கருவிகள்

கடினமாகவும், கரடுமுரடாகவும், சுத்தமில்லாமல் செதுக்கப்பட்டதாகவும் இருக்கின்றன. பழைய கற்காலத்தில் இறந்தவர்களை, அவர்கள் உபயோகித்த கற்கருவிகள், ஆடை ஆபரணங்களுடன் சடங்கு முறையில் அடக்கம் செய்யும் வழக்கம் இருந்து வந்தது. பல இடங்களில் பழைய கற்காலக் கருவிகள் ஏராளமாக சரளைப் (Laterite) படுக்கைகளில் கிடைத்துள்ளன. அக்கருவிகளின் மேல் படிந்துள்ள தடித்த பொருட்கள் அக்கருவிகள் பல்லாயிரம் ஆண்டுகட்கு முன்பே செய்தவை என்பதை விளக்குகிறது. மேலும் இந்தியாவில் பல்லாயிரம் ஆண்டுகட்கு முன்பு அற்றுப்போன பிராணிகளின் பாவில் (Fossil) களுடன் இக் கருவிகளும் சேர்ந்துக் காணப்பட்டதால், அவைகளின் காலம் மிகப் பழமையானது என்பது தெளிவடைகிறது. ஃபிளின்ட் (Flint) என்னும் கல், கற்கருவிகள் சுத்தமாகச் செய்ய எளிதாக இருப்பினும், தென் இந்தியாவில் இது அரிதாகையால், பொதுவாக எல்லாக் கருவிகளும் சாதாரணமாகக் கிடைக்கும் குவார்ட்சைட்டில் (Quartzite) செய்யப்பட்டுள்ளன. ஐரோப்பாவில் ஃபிளின்ட் அதிகம் கிடைத்தக் காரணத்தால், அங்கு கண்டெடுத்தக் கருவிகள் ஃபிளின்டில் செய்தவைகளாக உள்ளன.

பழைய கற்காலக் கருவிகளில் அதிகமாக கிடைத்தவை கைக்கோடரிகள். இவை பொருத்தமான கூழாங்கற்களின் மேற்பக்கத்திலும் கீழ் பக்கத்திலும் வேறு கற்களால் அடித்து சில வில்லைகளை (Flakes) உடைத்து அகற்றி செய்யப்பட்டவை. இவ்விதக் கோடாரிகள், இரண்டு பக்கங்களோடும், மேற்புறம் குறுகியும் அடிப்புறம் அகன்றுமிருக்கும். இவைகளில் செதுக்காமல் விடப்பட்ட பாகத்தில் கூழாங்கல்லின் சுய வெளிப்புறத்தை அடிப்பாகத்தில் காணலாம். இவைகளுக்கு கைப்பிடி பொருத்தாமல் கைகளாலேயே பழங் கற்கால மனிதர்கள் உபயோகித்ததால், கைக்கோடரி (Hand-axe) எனப் பெயர் வந்தது. இவ்வித கைக் கோடரிகள் முதலில் பிரான்சில் கண்டெடுக்கப்பட்டன. கைக்கோடரிகள் பிறகு உலகெங்கும் பழங் கற்கால ஸ்தலங்கள் உள்ள இடங்களிலெல்லாம் கிடைத்துள்ளன. பாஞ்சாலத்தில் சோன் (Soan) நதி பள்ளத்தாக்கில் கிடைத்த பழங் கற்காலக் கருவிகள் சிறிய வட்டமான கூழாங் கற்களாலானவை. இவ்விதக் கற்களிலிருந்து இரண்டு மூன்று வில்லைகளை (Flakes) செதுக்கி எடுத்துவிட்டு கூழாங் கற்கருவிகளாக (Pebble tools) உபயோகித்தனர். இவைகளில் பெரிய கூழாங்கற்களை, மேலும் அதிகமாகச் செதுக்கி, வெட்டும் (Chopper) கருவியாகவும் உபயோகித்தனர். இவ் வெட்டும் கருவி, பாஞ்சாலத்திலும், தென் இந்தியாவிலும் மட்டுமின்றி தென் கிழக்கு ஆசியா பூராவிலும் பரந்து கிடக்கிறது.

பழைய கற்காலத்தின் கற்கருவிகளில் மற்றொரு வகை பிளக்கும் கோடரி (Cleaver) என்பது. இவைகளை சென்னைப் பிரதேசத்து பிரத்தியோகமான கற்கருவிகள் எனக்கருதலாம். இது நீண்ட சதுரவடிவாகவும், தட்டையாகவும், அகலமான கோடாரி முனையை முன் பக்கத்திலும் கையில் பிடிக்கும் பின் பாகத்தை (butt) பின் பக்கத்திலும் கொண்டது. இதன் கூரிய முனையின் இரு புறங்களும் இரண்டு சமதளங்களையுடையதுமின்றி,

இரண்டு விளிம்புகளை உடைத்தெடுத்ததால் உண்டானதாகும். இவ்வித பிளக்கும் கருவிகள் கூழாங்கற்களிலிருந்து செதுக்கி எடுத்தப் பகுதிகளைக் கொண்டு செய்தவை. நிபுணர்கள் என்ற இவ்வித பிளக்கும் கருவிகள் குவார்ட்சைட்டில் (Quartzite) தான் செய்ய முடியும். பிளின்டில் செய்ய இயலாது. ஆகவே ஆப்பிரிக்காவிலும், இந்தியாவிலும் இவ்வித கருவிகள் அதிகமாகக் காணலாம். இவற்றின் முக்கிய அம்சம், இதன் விசேஷ அமைப்பாகும். பிரெஞ்சு புரட்சியில் விசேஷமாக சிரச்சேதம் செய்வதற்கு கிலோடின் (Guillotine) என்னும் ஒரு வித கத்தியை உபயோகித்தார்கள். சென்னையில் பிரத்தியேகமாகக் கிடைத்த கருவிகளில் இவ்வித கிலோடின் அமைப்புள்ளதும் ஒன்று. தொல் பொருள் வல்லுநர் ராபர்ட் புரூஸ் புட் (Robert Bruce Foote) 1863-ல் முதன் முதலில் கண்டுபிடித்த கற்கால கருவி, இச்சென்னை கிலோடின் அமைப்பை உடையது. இக்கருவி இந்திய தேசத்திலேயே முதன் முதலாக கண்டெடுக்கப்பட்ட பழங் கற்கால கருவியாதலின் இது பண்டைய வரலாற்றுக்கு முந்திய காலத்தின் சரித்திர ஆராய்ச்சியில் ஒரு முக்கிய திருப்பு முனையை ஏற்படுத்தியிருப்பதால், இது சென்னை பொருட்காட்சியின் ஓர் முக்கிய காட்சிப்பொருளாகக் கருதப் படுகிறது.

பழங் கற்காலத்தின் இரண்டாவது பகுதியில் சிறிய அமைப்புள்ள கைக் கோடாரிகளும் (Ovates) இதர கருவிகளும் செய்யப்பட்டுள்ளன. கருவிகளின் பாகங்கள், முக்கியமாக ஓரங்கள் ஒழுங்காக செதுக்கப்பட்டும் முனைகள் கூருக ஆக்கப்பட்டும் உள்ளன. செதுக்கி எடுத்த பெரிய துண்டுகளில் சுரண்டும் கருவிகள் (Scrapers) செய்யப்பட்டன. இவைகளின் வெட்டும் பாகம் முன்குவிந்தும், எதிர்பாகம் குழிந்தும் இருக்கின்றன. இவைகளை கற்கால மனிதன் வேட்டையாடி கொன்ற விலங்குகளின் தோலை உரிப்பதற்கு ஏற்ற கருவிகளென்று கருதுகின்றனர்.

## இடை கற்காலம்

கற்கால மனிதன், பழைய கற்காலத்தின் இறுதியில் அகேட் (Agate), சால்சிடோனி (Chalcedony), செர்ட் (Chert), கார்னீலியன் (Carnelian), ஜாஸ்பர் (Jasper), ஆப்சிடியன் (Obsidian), குவார்ட்ஜ் (Quartz) முதலிய அபூர்வமான கற்களை செதுக்கிய துண்டுகளைக்கொண்டு சிறிய ஆயுதங்களும், கருவிகளும் செய்யத் தொடங்கினான். இக்கருவிகளை வரிசையாக ஓர் கைப்பிடியிலமர்த்தி கொடுவாட்களாகவும், அரிவாட்களாகவும் உபயோகித்தான். இக்கருவிகள் உருவில் சிறியதாக இருப்பதால், இவைகளை சிறிய கருவிகள் அல்லது நுண்ணிய கருவிகள் எனப்படுகின்றன. இவைகள் எவ்வாறு செய்யப்பட்டன என்பது இவைகளை செதுக்கி எடுத்த உருண்டை கற்களில் உள்ள செதுக்கு அடையாளங்களால் தெரிந்துகொள்ளலாம். இவ்வித உருண்டை கற்கள் கற்கருவிகளாக உதவாமற்போனபோதிலும் இவைகளின் உதவியால் சிறிய கற்கருவிகள் செய்யும் முறைகள் விளங்குகிறது. இச்சிறிய கருவிகள் பிளேட் (Blade), ப்யூரின் (Burin), லூனேட்

(Lunate), முக்கோணம் (Triangle) போன்ற உருவங்களில் ஏராளமாக இந்தியாவில் அனேக இடங்களிலும் காணப்படுகிறது. இதன் காலம் கி. மு. 10,000 ஆகும். இச்சிறிய கருவிகள் பழைய கற்காலத்திற்கும், புதிய கற்காலத்திற்கும் இடையில் கிடைத்ததால், இதனை இடை கற்காலமென கூறுகிறோம். இக் கருவிகள் புதிய கற்காலத்திலும் காணப்படுவதால், பழைய கற்காலத்திற்கும் புதிய கற்காலத்திற்கும் இடையில் தொடர்ந்து தொடர்பு இருந்ததென்பது தெரிகிறது.

## புதிய கற்காலம்

புதிய கற்காலத்தில் கரடுமுரடான கற்கருவிகளை செதுக்கியதோடு நில்லாமல் அவைகள் தேவைக்கேற்றவாறு தேய்த்து வழவழப்பாகவும் செய்யப் பட்டன. கற்கோடரிகளும், ஆட்ஸ்களும் (செதுக்கும் கருவி) நல்ல தோற்றமுள்ளவைகளாகவும், வழவழப்பாகவும் செய்யப்பட்டதுடன், வெட்டும் முனையும் கூர்மையாக ஆக்கப்பட்டது. பல்லாயிர வருடங்கள் கற் கருவிகள் செய்து தேர்ச்சி பெற்றதனால் புதிய கற்காலத்தில் சிறந்த கற் கருவிகளைச் செய்ய கற்கால மனிதர்கள் பழகிக் கொண்டனர். வழவழப்பான கற்கோடரிகள் பழங்கற்கால கருவிகளை விட விசேஷமாக பல இடங்களில் பரந்து கிடைந்தமையால் புதிய கற்காலத்தில் பண்டை மனித இனம் தொகையில் அதிகரித்தமையை நாம் உணருகிறோம். இக் காலத்தில் மனிதர்கள் மரம் அல்லது எலும்பு கைப்பிடியை கோடரிக்கு உபயோகித்தனர். தற்கால பழங்குடிகளில் அனேகர் வழவழப்பான கற்கோடரியின் உபயோகத்தை உணராத காரணத்தால் விண்ணுலகத்திலிருந்து வந்த இடிக் கருவிகளெனக் கருதி, அவைகளை வணங்குகின்றனர். குறுக்கு பகுதியில் உருண்டை வடிவம் கொண்ட கனமான கைக் கோடரி முதல் அகன்ற கூரான முனைகளைக் கொண்ட உளி போன்ற கருவிகள் வரை புதிய கற்கால செல்ட்டுகள் (celts)என்னும் கோடரிகள் பற்பல விதங்களில் உள்ளன. இவைகள், கடின பாறைகளான டையோரைட் (diorite)-டிலும், பஸால்ட் (Basalt)-டிலும், சில சமயங்களில் முதல்தரமான சந்தன கற்களிலும் செய்யப்பட்டுள்ளன. வழவழப்பான கோடரிகள் செய்ய படிப்படியான முறைகள் கையாளப்பட்டன. முதலில் ஒரு நல்ல கற்பாறை துண்டை தேர்ந்தெடுத்து, அதற்கு செதுக்கல் மூலம் சாதாரண செல்ட் உருவம் கொடுக்கப்பட்டது. பிறகு செதுக்கியதில் ஏற்பட்ட கோணல்களை தட்டி ஒழுங்குப்படுத்தப்பட்டது. இப்பொழுது கரடுமுரடான பாகங்களை கற்களைக் கொண்டு நன்றாக தேய்த்து, வழவழப்பாகச் செய்து, கைப்பிடியும் பொருத்தப்பட்டது. புதிய கற்காலத்து கோடரியின் வெட்டும் முனை அகலமாகவும், எதிர் முனை கூராகவும் இடைபாகம் தட்டை உருளை வடிவமாகவும் காட்சியளிக்கிறது. புதிய கற்கால மனிதன் உணவு சேகரிக்கும் பழங் கற்கால மனிதனைப் போல் வாழாமல் உணவு உற்பத்தி செய்யும் புரட்சியை உண்டு பண்ணினான். இப்புரட்சிக்கு அடிப்படையானவை உழவுத் தொழிலும் ஆடுமாடுகளை வீட்டுவிலங்குகளாக பழக்கி பயன் பெற்றதே ஆகும். இவ் விரு விசேஷ மாறுதல்களுக்கும் அடிப்படியாக இருந்தத

மேற்கண்ட புதிய கற்கால செல்ட் என்னும் கருவியாகும். இதனால் புதிய கற்கால மனிதன் காடு நிலந்திருத்தி விலங்குகளை வசப்படுத்தி ஏரில் பூட்டி கோதுமை, நெல் போன்ற தானியங்களை விளைவித்தும் நிரந்தரமாக இருப்பிடங்களை அமைத்துக்கொண்டு கிராம வாழ்க்கையை அடிகோலி வாழ்ந்தும், நாகரிகத்திற்கு வேண்டிய உபரிபெருக்கையும் தேடிக் கொண்டான்.

வெண்கல காலத்தில் முதன் முதலில் செய்த உலோகக் கருவிகள் மேற்கூறிய புதிய கற்கால கருவியை ஒத்திருக்கின்றன. தானியங்களை அரைக்க பயன்பட்ட அம்மிகல், சுத்திகல், குழவுகல் எல்லாம் புதிய கற்காலத்தைச் சார்ந்தவை. புதிய கற்காலத்தில் ஆதிமனிதனின் வாழ்வில் பல முன்னேற்றங்கள் ஏற்பட்டமையால், அக்காலத்தை புதிய கற்கால புரட்சி என அழைக்கின்றனர். உணவை தேடும் நிலையிலிருந்து உணவை உற்பத்தி செய்யும் நிலைக்கு அவன் சென்ற முன்னேற்றம் இன்றளவும் நம் சமூக, பொருளாதார வாழ்வின் அடிப்படையாக அமைந் திருக்கிறது. 10,000 ஆண்டுகட்கு முன்பு தொடங்கிய இவ் வாழ்க்கையில் தான் மனிதன் நிரந்தர வாழ்க்கை, விவசாயம், மிருகங்களைப் பழக்குதல், மண்பாண்டங்களைச் செய்து, உபயோகித்தல் போன்ற பற்பல புரட்சிகரமான மாறுதல்களைச் செய்ய தெரிந்துக்கொண்டான். இதற்கு தேவையான ஆதாரங்களை இந்தியாவில் தோண்டியெடுக்கப்பட்ட புதிய கற்கால கருவி கள் தருகின்றன.

மண்பாண்டங்கள் சக்கரத்தின் உதவியில்லாமல் செய்யப்பட்டன. இவை களின் உருவம் இயற்கைப் பொருட்களில் செய்த குடுவைகளை, சங்குகளை, கொம்புகளை ஒத்துள்ளன. புதிய கற்காலத்தின் வாழ்வு அதிகமாக தென்னிந்தியாவிலும், மத்திய இந்தியாவிலும் இருந்ததை அங்கு அதிக மாக கண்டெடுக்கப்பட்ட பொருட்கள் விளக்குகின்றன. புதிய கற்காலத்து பண்பாட்டின் நிலைக்களனாக விளங்குவது இந்தியாவிலேயே, தென்னிந்தியா விலுள்ள பெல்லாரிதான். இந்தியாவின் புதிய கற்காலம் கி. மு. 6000 முதல் 4000 வரையாகும்.

## தென் இந்தியாவில் வெண்கல காலம்

தென் இந்தியாவில் முதன் முதலில் தோண்டியெடுக்கப்பட்ட பண்டைய வரலாற்று இடங்களில் புதிய கற்காலத்து அல்லது அதை தொடர்ந்த செம்பு அல்லது வெண்கல பொருட்கள் ஒன்றுகூட கிடைக்கவில்லை. நமக்கு கிடைத்த வெண்கல பொருட்களெல்லாம் சவப்பானைகளுடன் மணிகளுடனும் இரும்புச்சாமான்களுடனும் கிடைத்தவை. இவை ஆரம்ப இரும்பு காலம் அல்லது கற்கிடைகாலத்தவை. உதாரணமாக இவைகள் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள ஆதிச்சநல்லூர் முதுமக்கள் தாழிகளிலும், நீலமலை கல்குத்துகளிலும் கண்டெடுக்கப்பட்டவை. புதிய கற்காலத்திற்கும், இரும்பு காலத்திற்கும் இடையில் வெண்கல காலம் இருந்ததென்று 1946 வரையில் தெரியவில்லை. இதனால் புதிய கற்காலத்திற்கு பிறகு ஆரம்ப

இரும்புகாலம் தொடர்ந்து வந்ததாக இது வரையில் கருதிவந்தனர். ஆனால் சமீபத்தில் மராட்டியிலும், மைசூரிலும், ஐதராபாத்திலும் கண்டுபிடிக்கப் பட்ட வெண்கல சாமான்கள் ஆரம்ப இரும்பு காலத்திற்கு முற்பட்டவையாக இருப்பதால், செம்பு வெண்கல உலோகக் கருவிகள் இரும்பு கண்டுபிடிக்கும் முன்பே உபயோகத்தில் இருந்தன என்பது நிலைநாட்டப்பட்டது. நாசிக் ப்ரமகிரி, கல்லூர் முதலிய இடங்களில் புதிய கற்கால த்தின் கடைசி கட்டத்தில் தோன்றிய வெண்கல கருவிகளுடன் கற்கருவிகள், சிந்துநதி நாகரிகத்தில் பழக்கத்தில் இருந்ததுபோல் இருந்து வந்தன. ஆகவே தென் இந்தியாவின் பண்டை வரலாற்றில் வெண்கல காலம் இடம்பெறு கிறது. இவ்விடங்களில், அகலமானதும், தட்டையானதுமான செம்புக் கோடாரிகள், சிறிய கற்கருவிகளுடனும், வண்ணப் பாண்டங்களுடனும், சில சமயங்களில் வழவழப்பான கற்கோடாரிகளுடனும் காணப்பட்டன. இக்கற் செம்பு கால பண்பாடு, மேற்கு—மத்திய—தென் இந்தியாவில பரவியிருந் தாலும், இவை சிந்துநதியின் கற—செம்பு கால பண்பாடுடன் தொடர்பு கொண்டதாகத் தெரியவில்லை.

தென் இந்தியாவில் கற்—செம்பு கால மக்கள், களையும் நாரும் சேர்ந்த தரையை கொண்ட மண் குடிசைகளில் வசித்து வந்தனர். தங்களை கொடிய மிருகங்களிடமிருந்து தற்காத்துக்கொள்ள, சுற்றிலும் அரண் அமைத்திருந்தனர்.

## சிந்து நதி கற்-செம்பு காலம்

தற்காலத்தில் உலகெங்கும் உள்ள பழங்குடிகள் எழுதப் படிக்க தெரி யாத நிலையில் இருந்தும் உணவுப் பொருள்களை சேகரிப்பதும், விலங்குகளை பழக்கி பண்ணைகளும், உழவுக்கு உபயோகிப்பதும் நாடோடி அல்லது நிரந்தர விவசாயம் செய்வதுமாக வாழ்கின்றனர். இவர்களெல்லாம் புதிய கற்கால பண்பாட்டை உடையவர்களெனலாம். இதற்கு மேம்பட்டப் பண்பாடே நாகரிகமாகும். நாகரிகங்களுக்கு சில முக்கிய அம்சங்கள் உள்ளன. இவைகளை சிந்து, யுப்ரேடிஸ், நைல்நதி பள்ளத்தாக்குகளில் இருந்த பண்டை நாடுகளில் காணலாம்.

ஏறத்தாழ 5,000 ஆண்டுகட்கு முன்பு எகிப்தியரும், சுமேரியரும், உயர்ந்த உன்னதமான கூடகோபுரங்கள் கட்டி, மண்குடில்களில் வசித்து வந்த காலத்தில், சிந்து நதியில் உயரிய பண்பாடுகொண்ட ஓர் நாகரிகம் தழைத்து வந்தது. இதனால் இந்தியாவை 'மனித நாகரிகத்தின் தொட்டில்' என அழைக்கின்றனர். இதன் அடையாளங்கள் பாகிஸ்தான் பூராவிலும் பரவி கிடக்கிறது. அவைகளில் புகழ்பெற்றவை ஹரப்பாவும், சிந்துவிலுள்ள மொஹஞ்சதாரோவும் ஆகும். தறபோதைக்காட்டிலும் அப்போது சிந்துவிலும், பலுசிஸ்தானத்திலும் அதிக மழை பெய்த காரணத்தால், அதிக மக்கள் அங்கு வசித்துவந்தனர். இங்கு கண்டெடுக் கப்பட்டுள்ள மொஹஞ்சதாரோ நகரம் அளவில் ஒரு சதுர மைல் பரப்பைக் கொண்டிருந்தாலும், ஆரம்ப காலத்தில் இதைவிட அதிக பரப்பு கொண் டிருக்கவேண்டுமெனக் கருதப்படுகிறது.

சிந்துநதி நாகரிக மக்கள், அழகானதும், அகலமானதும், சுத்தமானதுமான சாலைகளையும், நடைபாதைகளையும் கொண்ட பெரிய நகரங்களில் வாழ்ந்து வந்தனர். கண்டெடுக்கப்பட்டுள்ள மொஹஞ்சதாரோ நகரம், அதன் நகர அமைப்பை நமக்கு நன்கு விளக்குகிறது. சில தெருக்கள் 30 அடி அகலத்தில் கிழக்கு மேற்காகவும், தெற்கு வடக்காகவும் போடப்பட்டுள்ளன. ஒரு மனிதன் தாராளமாக நடந்துச் செல்லக்கூடிய சலதாரைகள் பூமியின் அடியில் கட்டப்பட்டுள்ளன. வீடுகள் சுட்டச் செங்கற்களால் கட்டி, மண்பூச்சு செய்யப்பட்டுள்ளன. வீடுகள் இரண்டு அல்லது மூன்று தளங்களும் பெரிய முற்றங்களும் கொண்டதாக இருக்கின்றன. அங்கு கற்களால் கட்டப்பட்ட பெரிய நீராடும் அறைகள் உள்ளன. மக்கள் தங்கள் தானியங்களை (கோதுமை, பார்லி) பெரிய மண்பாண்டங்களிலிட்டு, அவரவர்களின் வீட்டிற்கு அடியில் புதைத்து பாதுகாத்து வந்தனர். அவர்கள் உபயோகித்த பெரிய செங்கற்களும், பானைகளும், அதிலிருந்த கோதுமையும் காட்சியில் வைக்கப்பட்டுள்ளன.

இச்சிந்துநதி நாகரிகம் பாகிஸ்தானில் மட்டுமேயல்லாமல் வடமேற்கு இந்தியாவில் ராங்பூர், பிக்கானிர், ரூபர், லோதால் முதலிய இடங்களில் பரவி இருக்கின்றது.

புதிய கற்காலக் கருவிகளுடன் செம்பு, வெண்கல கருவிகள் சிந்துநதி நாகரிகத்தில் உபயோகிக்கப்பட்டு வந்தமையால் இது கற்–செம்பு கால நாகரிகம் (Chalcolithic culture) என வழங்கப்படுகிறது. இவைகள் இம்மக்களின் உயர்ந்தப் பண்பாட்டை விளக்குகிறது. அவர்கள் தங்கம், வெள்ளி, செம்பு, தந்தம், கிளிஞ்சல், எலும்பு, கார்னீலியன் போன்றவைகளில் வேலை செய்யவும், சிற்பம், மணி செய்தல், நூல் நூற்றல், நெய்தல் போன்ற தொழில்களையும், தெரிந்து வைத்திருந்தனர். மண்பாண்டங்களையும், கிளிஞ்சல்களையும், குடைந்தெடுத்த கற்களையும் வீட்டுப் பாத்திரங்களாக உபயோகித்தனர். சரியான எடைகள் வழவழப்பான கற்களில் செய்யப்பட்டன. சிறிய எடைகள் தசாம்ச முறையிலும் உள்ளன. சிந்துநதி மக்கள் தங்கள் பொருட்களையும் எண்ணங்களையும், பல்வேறு சிறுபடங்களின் மூலம், சதுரமான கற்களில் பொறித்து முத்திரைகளாக உபயோகித்தனர். அம்முத்திரைகளில் காண்டா மிருகம், யானை, காளை, யாளி, தேவதைகள், தாவரங்கள், மரங்கள் முதலிய உருவங்களைக் காணலாம். சிந்துநதி எழுத்துக்களிலிருந்து பிராமியும், பிராமியிலிருந்து இந்தியாவின் மற்ற மொழிகளும் தோன்றியதாகக் கூறப்படுகிறது. சிந்துநதியில் இன்றுவரை எவ்வித நாணயமும் காணப்படாமையால் இந்த முத்திரைகள்தான் நாணயங்களாக உபயோகப்படுத்தப்பட்டிருக்குமென்று தொல்பொருள் வல்லுநர் T. N. ராமச்சந்திரன் கருதுகிறார். மேலும், ஆரம்பகால இந்து மதத்தின் முக்கிய அம்சங்களான ஆலமரமும் சிவ பசுபதியும் இங்கு அதிகமாகக் காணப்படுவதால் சிந்துநதி நாகரிகம் வேதகால பண்பாட்டைச் சேர்ந்தது எனவும், நீண்ட உருண்டை வடிவப் பாத்திரங்கள், சோமபானம் அருந்தும் சடங்குப் பொருளெனவும், பெரிய குளியலறை அசுவமேதயாகம் நடத்துபவரின் சடங்கு குளியலுக்காக

கட்டப்பட்டதெனவும் கருதுகிறார். மனித உருவ வழிபாட்டில் அம்மை உருக்கொண்ட மண்பொம்மைகளும், விலங்கு உருவ வழிபாட்டில் காளையும், யாளியும், காண்டாமிருகமும் ஆகும். மேற்கூறிய வழி பாட்டிற்குரிய மண்பொம்மைகள் அதிக அளவில் நீண்ட காலமாக சிந்து நதி நாகரிகத்தில் காணப்படுவதால் ஹரப்பாவும், மொஹஞ்சதாரோவும், மெக்கா, காசி போன்ற யாத்திரை ஸ்தலமாக இருந்திருக்கலாம் என்றும் கருதச்செய்கிறது.

## இந்தியாவின் இரும்பு காலம்

இந்தியாவின் இரும்பு காலம் மிகப் பழமை வாய்ந்ததாகக் கருதப் படுகிறது. அங்கு, உருக்கல் (Crucible) முறையில் திருச்சி மாவட்டத்தில் கையாளப்பட்டது என்பதற்கு ஏற்ற சான்றுகள் உள்ளன. தென் இந்திய பூர்வீகக் குடிகளுக்கு பண்டைக் காலத்தில் இரும்பு உருக்கும் தொழில் நன்றாகத் தெரிந்திருந்தது. அதே காலத்தில் பானை செய்யும் தொழிலும் அதன் உச்ச நிலையை அடைந்திருந்தது.

தென் இந்தியாவில் கல்குத்து, கல்லறை, நடுக்கல், கற்திடை, முதுமக்கள் தாழி, ஈமத்தாழி முதலிய சவ அடக்கங்கள் பரவி கிடக்கின்றன. இவைகளில் காணக்கிடைத்தப் பொருட்களைக் கொண்டு தென் இந்தியாவின் முதாதையர் களுடைய சவ அடக்கத்துடன் தொடர்புகொண்ட பழக்கவழக்கங்களை நாம் அறிகிறோம். அக்காலத்து கல்லறைகள் பின்வருமாறு: திருநெல்வேலி யிலும், கோயம்புத்தூரிலும் உள்ள முதுமக்கள் தாழி (Urn burials), தென் ஆற்காடு, செங்கற்பட்டு மாவட்டங்களிலுள்ள ஈமத்தாழி (Sarcophagi), வட ஆற்காடு மாவட்டத்திலுள்ள நடுக்கல் (Dolmens), மைசூரிலுள்ள கல்லறை (Stone chambers) மற்றும் கேரளாவிலுள்ள தொப்பிக்கல், குடைக்கல் கல்லறைகள் (Hat stones and umbrella-stones). இவ்வடக் கங்களில் முதல் சவ அடக்கத்தோடாவது, அல்லது இரண்டாவது எலும்பு அடக்கத்தோடாவது பொம்மை உருவங்கள், மட்குடுவைகள், உலோகப் பாத்திரங்கள், உபயோகித்த ஆயுதங்கள், ஆபரணங்கள், ஆபரணக்கற்கள், மணிகள் போன்றவையும் நெல், அரிசிப் போன்ற உணவுப் பொருட்களையும் அடக்கம் செய்தனர். இப்பழைய பழக்கங்களும், வழக்கங்களும இக் காலத்து பூர்விக பழங்குடிகளிடத்தில் அதிகமாகக் காணப்படுவதால், நம்மிடத்தில் இரும்பு கால பழக்க வழக்கங்கள் உள்ளன என்றால், அது மிகையாகாது.

## திருநெல்வேலியில் முதுமக்கள் தாழி

திருநெல்வேலி பட்டினத்திற்கு தென்கிழக்காக தாமிரபரணி ஆற்றுக்கு தெற்காக 12 மைல் தொலைவில் 114 ஏகராக்கள் பரப்புகொண்ட ஒரு இடுகாடு இருக்கிறது. இதுவே உலகத்தின் பெரிய மயானமாகும். இவ் விடத்தில் புதைக்கப்பட்ட முதுமக்கள் தாழிகள் உருவில் முட்டை வடிவமும், அகன்ற வாயும், குறுகிய அடிபாகமும் கொண்டவை. இவை ஆயிரக்கணக்கில் இங்கு கிடைத்துள்ளன. ஒவ்வொரு தாழியும் 6 அடி

இடைவெளிவிட்டு, 3 முதல் 12 அடி ஆழம் வரை புதைக்கப்பட்டிருக்கிறது. இவைகளில் காணப்பட்டப் பொருட்கள், பல அளவுகளையும் உருவங்களையும் கொண்டவை.

இங்கு கிடைத்த ஆபரணங்கள் பலவகைப்படும். அவற்றில் முக்கோணம், இடைவெட்டக் கோடுகளின் வரைவுகள் கொண்ட மெல்லிய தங்கத் தகட்டில் புள்ளிகளிட்டு அலங்கரித்த நெற்றிப்பட்டங்கள் ஒருவகையாகும். இவை இறந்தவரின் நெற்றியில் கட்டப்பட்டன எனக் கருதப்படுகிறது. இவ்வித நெற்றிப்பட்டங்கள் கட்டுவது இன்றளவும் தென்னிந்தியரின் திருமண விழாக்களில் ஒரு சடங்காக இருக்கிறது. புதுமணத் தம்பதிகளின் நெற்றியில், வயதிலும், அறிவிலும் மூத்தவர்கள் இப்பட்டத்தைக் கட்டுவது, திருமணமானவர்கள் என்பதைக் குறிக்கவும், இனி புதிய நிலையும், அதிக பொறுப்பும் கொண்டவர்கள் என்பதை உணர்த்தவுமாகும். மற்ற ஆபரணங்கள் வெண்கலம், கிளிஞ்சல், எலும்பு போன்றவைகளில் செய்த வளையல்கள், கடகங்கள், மோதிரங்கள் ஆகும். எருமைகள், செம்மறி ஆடுகள், சேவல்கள், புலிகள், மான்கள், யானைகள், பறக்கும் பறவைகள் போன்றவை வெண்கலத்தில் செய்யப்பட்டுள்ளன. வெண்கலத்தினால் செய்த மெல்லிய வடிகரும் குவளைகளில் வடித்துவாரங்கள் இடைவிட்ட கோடுகள் போலவும், முழுவட்டம், அரைவட்டம் போலவும் பல விதங்களில் காணப்படுகின்றன. இவைகள், பெரிய கனமான வெண்கலப் பாத்திரங்களுக்கு மூடிபோல் அமைந்துள்ளன. மொட்டுகள் நிறைந்த பூங்கொத்துகளில் சிறிய பறவைகளும், விலங்குகளும் இணைக்கப்பட்டுள்ளன. இவை சடங்குப் பொருட்களாக கருதப்படுகிறது. சவக்குழிகளில் காணக்கிடைத்த இரும்புப் பொருட்கள்—போர்க்கருவிகளும், உழவுச் சாமான்களும் ஆகும். இக்கருவிகள் சவத்தைச் சுற்றிலும் கீழ்நோக்கிய நிலையில், இறந்தவரின் சுற்றத்தார் அல்லது உறவினர்கள் துக்கத்தில் புதைத்ததுபோல் காணப்படுகிறது. அதில் காணும் பானைகள் தென்னிந்தியரின் சுற்றிடைகளில் காணப்பட்டப் பானைகளைப்போல் சிகப்பும், கருப்பும் கலந்த நிறத்தில் இருக்கின்றன. இவற்றில் பெரும்பாலானவை சாயாமல் நிற்க கீழே வளையங்களும் மேற்புறத்து வாயை மூட புள்ளிகளால் அலங்கரித்த வெகு நேர்த்தியான மூடிகளுடன் பொருத்தப்பட்டுள்ளன.

தாழிகளில் காணக்கிடைத்த மனித எலும்புகள், தென் இந்தியர்கள் 2,500 ஆண்டுகட்கு முன்பு எவ்வினத்தைச் சேர்ந்தவர்கள் என்பதை அறிய உதவுகின்றன. இங்கு கண்டெடுக்கப்பட்ட எண்ணிறந்த மண்டை ஓடுகளில் இரண்டு ஆஸ்திரேலியர் இனத்தையும், ஆறு மத்தியதரை கடலினத்தையும் ஒன்று ஆல்பைன் இனத்தையும் சேர்ந்தவை. இவ்வினங்களினால் தென் இந்தியாவில் இன்றுபோல் அன்றும் பல இனத்தவரின் நேரிடைத் தொடர்பு இருந்தது என்பதை அறிகிறோம்.

## செங்கற்பட்டு ஈமத்தாழிகள்

செங்கற்பட்டு மாவட்டத்தில் பல ஆண்டுகட்கு முன்பு அநேக சற் சின்னங்களை தோண்டியெடுத்தனர். அச்சின்னங்கள் மலையைச் சுற்றியுள்ள தனிக அல்லது பாறை பாங்கான இடங்களில், மலை அடிவாரக்கிலிருந்து

சிறிது தூரத்தில் வைக்கப்பட்டுள்ளன. இக்கல்வட்டங்கள் ஒவ்வொன்றும் 8 அடி முதல் 60 அடி விட்டம் வரை சுற்றிலும் பெரிய கற்பாறைகளைக் கொண்டிருக்கிறது. ஒவ்வொரு கல்வட்டத்தின் நடுவிலும் ஒரு முது மக்கள் தாழி அல்லது ஈமத்தாழி தரையிலிருந்து 2 அடி முதல் 7 அடி ஆழம் வரை வைக்கப்பட்டுள்ளன. இந்த ஈமத்தாழிகள் வரலாற்றுக்கு முற்பட்ட கால பழம்பொருட்கள் கூடத்தில் வைக்கப்பட்டுள்ளன. இதன் அமைப்பு வட்ட வடிவ மூலைகள் கொண்ட செவ்வகம் போலவும், நீராடும் தண்ணீர் தொட்டிப் போலவும் காட்சியளிக்கிறது. இவற்றின் இருமருங்கிலும் உள்ள இரண்டு அல்லது மூன்று வரிசை கால்கள், நடுவே குடைந்தெடுத்த கூம்பின் உருவில் உள்ளன. இவ்வீமத்தாழிகளின் மேற்பாகம், மேற்குவிந்த மூடிகளால் மூடப்பட்டுள்ளன. இந்த ஈமத்தாழிகள், சென்னைக்கு அருகிலுள்ள பல்லாவரத்திலும் கண்டெடுக்கப்பட்டன. ஆனால் இவை களுக்கு இரண்டு வரிசை கால்கள்தான் இருந்தன. இவ்வீமத்தாழிகளில் மனித எலும்புகளுடன் கல், இரும்பு, சங்கு முதலிய சாமான்களும், ஆபரணங்களும், சிறு பானைகளும் இருந்தன.

மலையாளத்திலிருந்து கொணர்ந்த பெரிய முட்டை வடிவ மண்தட்டுகள் காட்சியில் வைக்கப்பட்டுள்ளன. ஈமச்சடங்குகளின்போது இறந்தவர்களின் ஆவிக்கு வட்டியல் படைக்கும் பாத்திரமென இவைகள் கருதப்படுகின்றன. இவற்றில் ஒன்றுக்கு கால்களே இல்லாமலும், மற்றொன்றுக்கு குட்டையான கால்களும் இருக்கின்றன. இவைகள் கால்கள் கொண்ட பல்லாவர ஈமத்தாழியின் படிப்படியான மாற்றத்தை நமக்கு உணர்த்துகிறது.

## கடப்பையிலுள்ள செம்மறியாட்டின் உருகொண்ட ஈமத்தாழி

ஆதிச்சநல்லூர் பொருட்களின் கூடத்து நுழைவாயிலின் பக்கத்தில் உள்ள சுட்ட களிமண்ணால் ஆன ஈமத்தாழி, கடப்பை மாவட்டத்திலுள்ள சங்கவரம் என்ற இடத்தில் தோண்டியெடுக்கப்பட்டது. இவ்வதிசய மிருகம் போன்ற ஈமத்தாழி, ஆறு கால்களைக் கொண்டதாயினும், ஒரு செம்மறி ஆட்டின் உருவைக் கொண்டுள்ளது. பொருட்காட்சிச் சாலையினர் தோண்டி யெடுக்கும்போது, இந்த ஈமத்தாழியைச் சுற்றிலும் சிறு பானைகளும், இரும்பு கருவிகளும் கிடைத்தன. இவ்வீமத்தாழி தனித்த முறையில் காட்சி அளித்தாலும், இது பல்லாவரத்து ஈமத்தாழி மாதிரியே நீராடும் தொட்டிபோல் செய்யப்பட்டுள்ளது. கால்கள் இரண்டு வரிசையாக உயர்ந்தும், மேல் மூடி ஒன்றாக இல்லாமல் பல இணைப்புகளுடன், தலை தனியே பிரித்து எடுக்கும் முறையில் அமையப் பெற்றிருக்கிறது.

## நீலமலை கற்குத்துக்கள்

தொதுவர் வசித்துவரும் பல புனித மலைகளில் கற்குத்துகள் காணப் படுகின்றன. ஒவ்வொரு கற்குத்தும் ஒரு தனிவிதமான சவ அடக்கத்தை கொண்டிருப்பதுடன், சுற்றிலும் ஆழ் கிணறுப் போன்ற கல்குத்துகளைக்

கொண்டிருக்கிறது. இக் கல்குத்துகளை கண்டுபிடித்தவர் பிரிக்ஸ் (J. W. Breeks). இவரின் குறிப்புகளை, தொகுத்து இப் பொருட்காட்சிக்காக வெளியிட்டவர் புட் (R. B. Foote). இக் கற்குத்துக்களிலுள்ள பானைகள், நீண்ட வடிவமும், குவளைகள் அழகான மூடிகளையும் கொண்டுள்ளன. இம் மூடிகளில் (Grotesque) மனித உருவங்களும், பிராணிகளின் உருவங்களும் பிடியாகப் பொருத்தப்பட்டுள்ளன. இம் மூடிகளில் அதிகமாக இருப்பதுஎருமையின் உருவமும், குதிரை சவாரி செய்யும் மனிதனின் உருவமுமாகும். இரும்புச் சாமான்கள்: அம்பு முனைகள், கோடரிகள், ஈட்டி முனைகள், தூண்டில் முட்கள், கத்தி முனைகள், உளிகள், பிச்சுவாக்கள், மணிகள், விளக்குகள், கிலுகிலுப்பைகள், கத்திரி, மண்வெட்டி முதலியன. செம்பு சாமான்கள்: வளையல்கள், மோதிரங்கள், கண்மை தீட்டும் கம்பி, சீசா முதலியன.

வெண்கல கிண்ணங்களில் காணப்படும் வேலைப்பாடு மிக நேர்த்தியானது. ஒரு முட்டை வடிவுக்கொண்ட வெண்கல கிண்ணத்தில் சித்தரித்துள்ள தாமரை மொட்டு, இலை முதலியன நம்மை வியக்கச் செய்கிறது. இக் கிண்ணம் ஒரு மேடையின்மீது வைக்கப்பட்டுள்ளது. இதன் காலம் கி. மு. 800 என்றாலும் இது 5,500 ஆண்டுகட்கு முன்பு சுமேரியாவில் 'உர்' என்னும் இடத்தில் செய்த தங்கக் கிண்ணத்தை உருவிலும், வேலைப்பாட்டிலும் ஒத்துள்ளது. ஒரு வளைந்த சாணைக்கல்லும், ஒரு கதைக் கல்லும் (mace head) நீலமலையில் கிடைத்த கற் கருவிகளாகும். இவைகளுடன் தட்டையான கார்னீலியன் மணிகளும், உருளையான அகேட் மணிகளும், உருண்டையான தங்க மணிகளும் கிடைத்துள்ளன.

## பிரமகிரியின் கல்வட்டக் கல்லறை

மைசூரிலுள்ள பிரமகிரியில் தோண்டியெடுக்கப்பட்டதைப் போன்ற மாதிரி கல்வட்டக் கல்லறை இங்கு வைக்கப்பட்டுள்ளது. இது முழுவதும் கல்லினால் கட்டப்பட்ட கல்லறையாகும். இக்கல்லறை 5' × 6' அளவுள்ள நான்கு கற்பலகைக் கொண்டு அமைக்கப்பட்டிருக்கிறது. இந்த நான்கு கற்பலகைகளும் செங்குத்தாக ஒன்றோடு ஒன்று ஸ்வஸ்திக் வடிவில் பொருத்தப்பட்டுள்ளன. நீண்டச் சதுர கற்பலகை ஒன்று நான்கு செங்குத்து கற்களின் தரையாகவும், மற்றொன்று இதன் மேல் மூடியாகவும் பொருத்தப்பட்டுள்ளன. இம் மேல்மூடி பூமியின் தரைமட்டத்தை விட கீழே இருக்கிறது. நான்கு செங்குத்து கற்பலகையில், கிழக்கிலுள்ளதில் 2 அடி விட்டமுள்ள ஓர் துவாரம் இருக்கிறது. இத் துவாரத்தின் வழியாக சவப்பானைகள், இரும்புச் சாமான்கள், மணிகள் முதலியன உள்ளே கொணரப்பட்டு, கீழே கிடத்தியுள்ள கற்பலகையின் மீது வைக்கப்பட்டுள்ளன. இப்பொருட்களின் மேல் 6 அங்குல உயரத்திற்கு மண்ணைப் பரப்பிவிட்டு, அதன் மேல் இரண்டாவது தடவை அடக்கம் செய்யப்படும் மனிதரின் நீண்ட எலும்புகளும், மண்டை ஓடுகளும், துவாரம் வழியாகக் கொணரப்பட்டு, அம்மண் பரப்பு மீது நடுவில் சில பானைகளுடன் வைக்கப்பட்டுள்ளன. இத்துவாரம் மூலமாக மண்ணை அப்பொருட்களின்

மீது கொட்டி கல்லறையை நிரப்பி அத்துவாரத்தை மற்றொரு கற்பலகை கொண்டு மூடப்பட்டுள்ளது. இக்கல்லறைகளைச் சுற்றிலும் ஒன்று அல்லது இரண்டு வட்டங்களாகக் கருங்கற்களைக் கொண்டு சுவர் அமைக்கப்பட்டுள்ளது. கல்லறையின் மேல்பாகம் தரை மட்டத்திலிருந்து 3 அடி மேலே இருப்பதுடன் கற்களும் மண்ணும் குவிந்த மேடை இருக்கிறது. 20 அடி விட்டத்திற்கு இக்கல்லறையைச்சுற்றிலும் இடைவெளி விட்டு விட்டு 4 அடி அளவுள்ள கருங்கற்கள் நடப்பட்டுள்ளன. இக்கற்களின் பாதி பாகம் பூமியின் அடியில் புதைந்தும் மற்றப்பாதி வெளியில் தெரிந்து கொண்டும் இருப்பதால், இக் கல்வட்டத்தின் நடுவில் கல்லறை உள்ளது என அறிய முடிகிறது.

## மலபாரில் பருக்கின் கற்குடைவுகள்

சரளைப் பாறைகளில் செவ்வக செங்குத்து பள்ளங்கள் வெட்டப்பட்டுள்ளன. அவற்றின் நேர் எதிரில் நீண்டசதுரமான ஓர் நுழைவாயில் தரைமட்டத்திற்கு மேலே வெட்டப்பட்டுள்ளது. இக்குகை அர்த்த கோள வடிவமாக (hemispherical) உள்ளது. இக்குகையில் மனித எலும்புகளுடன், பானைகள், குறிப்பாக நான்கு கால்களைக் கொண்ட பானைகள், மணிகள், இரும்புச் சாமான்கள் முதலியன வைக்கப்பட்டுள்ளன. இக்குகையைச் சுற்றிலும் கற்களால் உயர்ந்த மேடைகள் அமைக்கப்பட்டுள்ளன. அதன் மேல் அடைப்பானும், பக்கவாட்டில் உள்ளே செல்ல படிக்கட்டுகளும் அமைக்கப்பட்டுள்ளன. இப் படிக்கட்டுகள் கீழ் தளம் வரை செல்லுகின்றன. இவ்வித கல்லறையைச் சுற்றி வெளியில் கல்வட்டம் காணப்படுகிறது.

இந்தியாவின் இரும்புகால் கல்லறைகள் பெரும்பாலும் கல்வட்டக் கல்லறைகளையே ஒத்துள்ளன. இரும்பு கருவிகளும், சக்கரத்தில் செய்த கருப்பு, சிகப்பு நிறங்களுள்ள பானைகளும், கல்வட்டக் கல்லறை காலத்தின் முக்கிய அம்சங்களாகும். இக் கல்வட்ட கல்லறையிலுள்ள அடக்கங்களின் 3 அம்சங்களாவன: முதலாவதாக, இறந்தவர்களின் ஆண்டு சடங்குகளில் அவர்களின எலும்புகளை எடுத்து இரண்டாவது முறை அடக்கம் செய்வது; இரண்டாவதாக, இறந்தவர்களின் எல்லா எலும்புகளையும் எடுத்து அடக்கம் செய்யாமல் குறிப்பிட்ட சில எலும்புகளை மட்டும் எடுத்து அடக்கம் செய்வது; மூன்றாவதாக, தனிமனிதனின் எலும்புகளை அடக்கம் செய்யாமல் அனேகரின் எலும்புகளையும் அடக்கம் செய்வது. இவ்வித வழக்கங்கள் தற்காலத்தில் அனேக பழங்குடிகளிடைக் காணலாம். உதாரணமாக, கோளத்தில் அட்டபாடி மலைகளில் வசிக்கும் முதுகரிடை இறந்தவர்களை சுடலை என்னும் 'இடுகாட்டில் அடக்கம் செய்து விடுகிறார்கள். ஒவ்வொரு அடக்கத்தின் தலைப் புறத்திலும் ஒரு கல்லை நடுகிறார்கள். ஐந்து, பத்து அல்லது இருபது ஆண்டுகளுக்கு ஒரு முறை நீத்தார் வழிபாடு விழா நடத்தி அவர்களுடைய எலும்புகளில் வலது தாள்வாய் எலும்பு அல்லது வலது கால் எலும்பை எடுத்து மறுபடியும் மாளிகை அல்லது மச்சு என்னும் கல்லறையில் வைக்கிறார்கள். இவ்வித பழக்கங்கள் இந் நாட்டில் இன்னும் அனேக பழங்குடிகளிடையே காணலாம் (அஸ்ஸாமிலுள்ள நாகர்

ஒரிசாவிலுள்ள போண்டோக்கள், கதபர்கள், கோதாவரி தீரத்திலுள்ள கோயர்). பழங்கால மக்களின் பழக்கவழக்கங்களில் பெரும்பாலானவை நாளடைவில் மறைந்துவிட்டபோதிலும், அவைகளை அநேகமானஅப் பழங்குடிகளிடையே காணலாம்.

## பிரமகிரியின் பண்பாடு

தென் இந்தியாவில் தொல்பொருளியலாளர் 1945 வரையில் கற்காலம் வெண்கலகாலம், இரும்புகாலம், சரித்திரகாலம் என்னும் பிரிவுகளை விளக்கியிருந்தும இவைகளுக்கு திட்டமான காலவரையறுக்க முடியவில்லை. கால வரம்புகளை நிர்ணயிப்பதற்கு வேண்டிய திட்டமான வரம்புகள் இல்லாமலிருந்தது. புதுச்சேரிக்கு அருகில அரிக்கமேடு என்னுமிடத்தில அகழ்ந்தெடுக்கப்பட்ட ரோமானிய தொழிற்சாலைகளிலும் வர்த்தகசாலைகளிலும் கிடைத்த பொருட்கள் இந்தியருக்கும், ரோமானியருக்கும், கி.மு., கி.பி முதல் நூற்றாண்டில் விசேஷமாக நடந்துவந்த கடல் வாணிபத்தை விளக்கியது. ரோமர்கள் சரித்திரத்திலிருந்தும், அரிக்கமேடு, பிரமகிரி, கொண்டபூர், மாஸ்கி முதலிய தென் இந்திய பழங்கால ஸ்தலங்களின் புதைபொருட்களின் அம்சங்களாலும் தென் இந்திய தொல்பொருளியலில் திட்டமான கால வரம்புகள் ஏற்பட்டுள்ளன. இவைகளில் மைசூரிலுள்ள பிரமகிரி பிரதானமானது.

பிரமகிரியின் பண்பாடு 3 அடுக்குகள் கொண்டவை. (1) ஆரம்ப கற்செம்புகால பண்பாடு (Chalcolithic) (2) கல்வட்ட கல்லறைகால பண்பாடு (Megalithic) (3) ஆந்திர பண்பாடு (Andhra).

ஆரம்ப கற்-செம்புகால பண்பாடு கி. மு. 10-வது நூற்றாண்டிலிருந்து கி. மு. 5-வது நூற்றாண்டு வரை பரவியுள்ளது. வழவழப்பான கற்கோடரிகள், சிறு கற்கத்திகள், கையால் செய்த மண் பாண்டங்கள் எல்லாம் இப்பண்பாட்டின் அறிகுறிகள். கற்கோடரிகள் டிராப் (Trap) பாறையில் வழவழப்பாக செய்ததாகவும், கைப்பிடி முனை கூரியதாகவும், இடைப்பாகம் முட்டை வடிவமாகவும் இருக்கிறது. இக் கற்கோடரிகளுடன் ஜாஸ்பர் (Jasper), பிளிண்ட் (Flint), அகேட் (Agate) போன்ற கற்களில் செய்த சிறிய கருவிகளும் காணக்கிடைத்துள்ளன. கையால் செய்த பானைகள் சாம்பல் நிறத்திலும், உருண்டை வடிவிலும் உள்ளன. அடியிலுள்ள அடுக்குகளில் சித்திர வண்ணவேலைப்பாடுகள் கொண்ட பானைகள் கிடைத்துள்ளன. நீண்ட சதுர வீடுகளும், புதைமிடங்களும், இப்பண்பாட்டின் காலத்தவை.

கல்வட்ட கல்லறை பண்பாட்டின் காலம் கி. மு. 500 முதல் கி. மு. 100 வரையாகும். இக்காலத்தில் இரும்பை பயன்படுத்தினர். அதிகமாகக் கிடைத்த இரும்பு அரிவாட்கள், கருவிகள், ஈட்டிகள், அம்புத் தலைகள், உளிகள முதலியன, இரும்பை பல விதங்களில் அம்மக்கள் உபயோகித்தனர் என்பதை தெரிவிக்கிறது. இவைகளுடன் காணப்பட்ட வழவழப்பான கற்கோடரிகளும், சிறிய கருவிகளும், பழைய பண்பாட்டின் தொடர்ச்சியை எடுத்துக் காட்டுகிறது. இக்காலத்து பானைகள், கருப்பு அல்லது கருப்பும்,

சிகப்பும் கலந்து உள்ளன. இவைகள் மெதுவாக சுழற்றப்பட்ட சக்கரத்தில் செய்தவை என்பது தெளிவாகத் தெரிகிறது. வீடுகள் தொடர்ந்து மரத்திலேயே கட்டப்பட்டுள்ளன. இக்காலத்து கல்வட்ட கல்லறை இருவகைப் படும். 1. கல்லறைத் தாழி. 2. குழித் தாழி. கல்லறைத் தாழியின் மாதிரி காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது.

ஆந்திர பண்பாட்டின் காலம் கி. மு. 100 முதல் கி. பி. 300 வரையாகும். பானைகளில் காணப்படும் குறுக்கு நெடுக்குக் கோடுகள் இப்பண்பாட்டின் முக்கிய அறிகுறி. இக்காலத்தில் பானைகள் வேகமாகச் சுழலும் சக்கரங்களில் செய்தவை, சில சமயம் உப்பினால் உட்பக்கம் கண்ணாடி மெருகு கொடுக்கப்பட்டிருக்கும். ஆந்திர பண்பாட்டின் ஆரம்ப காலத்தில் உட்பக்கம் புள்ளிகள் கோடுகளால் அலங்கரிக்கப்பட்ட ரூலெட்டட் (Rouletted) பானைகள் கிடைத்துள்ளன. இக் காலத்தில்தான் முதன் முதல் கண்ணாடி வளையல்கள் தோன்றின.

புதுச்சேரியின் அருகிலுள்ள அரிக்கமேட்டில் உள்ளூர் பானைகளுடன் இத்தாலியிலிருந்து இறக்குமதி செய்த பானைகளும் காணப்பட்டன. இது அரிக்கமேடு பண்பாட்டின் காலத்தை நிர்ணயிக்கப் பயன்பட்டது. பிரமகிரி மாஸ்கி, அமராவதி பண்பாடுகளும், அரிக்கமேடு பண்பாட்டை ஒத்திருந்ததால் அவற்றின் கால வரம்புகள் நிர்ணயிக்கப்பட்டன. இதிலிருந்து தென் இந்திய தொல் பொருளியலில் கற்காலம் முதல் சரித்திர காலம் வரையில் உள்ள பண்பாடுகளும் அவைகளின் கால அளவைகளும் தெளிவுற்றன.

## தென் இந்தியாவில் ரோமானியர்

பண்டைய இந்தியா ரோமாபுரி, வெனிஸ், ஆகிய நாடுகளுடன் வாணிப தொடர்பு கொண்டிருந்தது என்பதற்கு, தென் இந்தியாவில் புதைப் பொருளாக கிடைத்த ரோமர்களின், வெனீஷியர்களின் நாணயங்கள் பெரிதும் உதவிபுரிகின்றன. இந்நாணயங்களில் பெரும்பாலானவை இப் பொருட்காட்சியில் உள்ளன. புதுச்சேரியின் அருகிலுள்ள அரிக்கமேட்டில் கிடைத்த பொருட்கள், ரோமாபுரி மற்றும் பல மேலை நாடுகளுடன் இந்திய வாணிபம் கி. மு. முதல் நூற்றாண்டு முதல் கி. பி. முதல் நூற்றாண்டு வரை உச்ச நிலையிலிருந்தது என்பதற்கும், அந்நாடுகள் தென் இந்தியாவிலிருந்து ஆடைகள், அணிகள், வாசனைப் பொருட்கள், கண்ணாடி மணிகள், விலையுயர்ந்த கற்கள், முத்துகள், சாயப் பொருட்கள் முதலியவைகளை இறக்குமதி செய்துகொண்டு, அவற்றுக்கு ஈடாக தங்கத்தையும், மத்திய தரைகடல் மதுவை இருபிடிகள் கொண்ட ஆம்போரே (Amp orae) என்னும் பெரிய ஜாடிகளில், ஏற்றுமதி செய்தனர் என்பதை அறிகிறோம். பிற்காலத்தில் வந்த போர்த்துகீசியர், டச்சுக்காரர், ஆங்கிலேயர் தங்கள் வியாபாரத்தை நிலைநாட்ட எப்படி முதன் முதலில் இந்தியக் கடற்கரைகளில் தங்கள் தளங்களையும் தொழிற்சாலைகளையும் அமைத்து, நகரங்களை விருத்தி செய்தார்களோ அதேபோல் 2,000 ஆண்டுகளுக்கு

முன்பு ரோமானியரும் தங்கள் தொழிற்சாலைகளையும் நிலையங்களையும் கடற்கரைகளில் அமைத்து அவைகள் நகரங்களாக பெருகுவதற்கு உதவி புரிந்தனர்.

அரிக்கமேட்டில் இதுவரையில் கண்டுள்ள மற்றொரு முக்கியத்துவம் என்னவென்றால், இங்குதான் முதன் முதலில் அசோக பிராமிலிபியில் தமிழ்மொழியில் எழுதப்பட்ட பானை ஓடுகள் கண்டெடுக்கப்பட்டன. அரிக்கமேட்டில் அரிடைன் (Arritine), ரூலட் (Roulette), ஆம்போரா (Amphorae) என்னும் பானைகளுடன், அதே காலத்தில் செய்யப்பட்ட இந்திய பானைகளும் கலந்து கிடைப்பதற்கு முன்பு, இந்திய வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தை உறுதியாக நிர்ணயிக்க முடியவில்லை. மேற்கூறிய இத்தாலிய பானைகள் செய்தவர்களின் இடமும், காலமும், பெயரும், வரலாறும் இத்தாலியில் சரித்திர வாயிலாக இருந்தமையாலும், இந்திய பானைகள் செய்தவர்களின் வரலாறு இல்லாமையினாலும், அரிக்கமேட்டில் கிடைத்த இத்தாலிய பானைகளைக் கொண்டு முதன் முதலில் தென் இந்திய பண்பாட்டின் காலத்தை நிர்ணயிக்க முடிந்தது. அரிக்கமேட்டின் காலத்தை நிர்ணயிக்க முடிந்தமையால் அத்துடன் தொடர்புக் கொண்ட பிரமகிரி, மாஸ்கி, அமராவதி போன்ற பல தென் இந்திய புதைபொருள் ஆராய்ச்சி இடங்களின் பண்பாட்டு காலத்தையும் நிர்ணயிக்க முடிந்தது.

இந்தியாவின் வரலாற்றுக் காலமாகிய கி. மு. 6-வது நூற்றாண்டு முதல் கி. பி. 20-ம் நூற்றாண்டு வரையுள்ள நாணயங்கள் காட்சியில் வைக்கப் பட்டுள்ளன. அவற்றுடன் வரலாற்றுக் காலத்தின் கற்சிலைகளும், வெண்கலச் சிலைகளும், செப்புத்தகட்டு குறிப்புகளும் உள்ளன.

## சரித்திரகால ஆயுதங்கள்

நுழைவாயிலின் எதிரில் தஞ்சாவூர் ஈட்டிகள் வரிசையாக கவருடன் இணைந்தாற்போலவும் அதன் அருகில் சீனாவிலிருந்து அபினி போரின் வெற்றிச்சின்னமாக கொணர்ந்த இரண்டு பெரிய வெண்கலமணிகளும் வைக்கப்பட்டுள்ளன. போர்க்கருவி கூடத்து நுழைவாயிலில் ஸ்பானியர் உடற்கவசமும் தலைகவசமும், போர்க்கருவிகளும் வைக்கப்பட்டுள்ளன. இவைகளுடன் சென்னையிலிருந்து சென்ற ஜெனரல் ட்ரேபரின் (General Draper) யுத்தசேனை மணிலாவைக்கைப்பற்றியதன் சின்னமாகக் கொணர்ந்த பெரிய பீரங்கிகள், முன் ஆடலரங்கு கட்டிடத்தைச் சுற்றிலும் வெளியில் வைக்கப்பட்டுள்ளன. முதல் அறையிலுள்ள மற்ற சிறிய போர்க்கருவிகளும், பீரங்கிகளும் மணிலா, மைசூர், தரங்கம்பாடி முதலிய இடங்களிலிருந்து போரின் வெற்றிச்சின்னங்களாகக் கொணரப்பட்டவை.

புராதன துப்பாக்கிகள், உடற்கவசங்கள், கைத்துப்பாக்கிகள், ப்ளண்டர்பஸ் மஸ்கெட்டுன், ரிவால்வர்கள், பிஸ்டல்கள் முதலியன ஆங்கிலேய கிழக்கிந்தியக் கம்பெனியார் உபயோகித்தவை, அல்லது போரில் கைப்பற்றப் பட்டவையாகும். அழகிய தங்கம் பதிக்கப்பட்ட இரண்டு துப்பாக்கிகள் தஞ்சாவூர் சரபோஜி மகாராஜாவிற்கு ஆங்கிலேய கிழக்கிந்தியக் கம்பெனியார்

பரிசாக அளித்தனர். அவை தனியாக இரண்டு கண்ணாடிப் பெட்டிகளில் வைக்கப்பட்டுள்ளன. மிக்க வேலைப்பாடுகள் பொருந்திய வெடிமருந்து பாத்திரங்கள் பார்ப்பதற்கு மிகக் கவர்ச்சியான பொருட்கள். அவற்றில் வரிசையாக போர்க்கோடரிகள், அம்புகள், இரும்பு குண்டுகள் இணைக்கப்பட்டுள்ளன. சீன தேசத்து இரும்புத்தொப்பிகளும், கற்குண்டுகளும், தனியாக கண்ணாடிப் பெட்டிகளில் வைக்கப்பட்டுள்ளன. தரையில் பலவிதமான சிறு பீரங்கிகள், துப்பாக்கிகள், குண்டுகள், இரும்பு கவசங்கள் முதலியன வைக்கப்பட்டுள்ளன.

இரண்டாவது போர்க்கருவிகள் அறையில் தஞ்சாவூர் அரண்மனையிலிருந்து கொணர்ந்த போர்க்கருவிகள் வைக்கப்பட்டுள்ளன. அவைகள் : கத்திகள் பிச்சுவாக்கள், வெட்டும் கத்திகள், ஈட்டிகள், கேடயங்கள், அம்புகள் அங்குசங்கள் முதலியன. அநேக கருவிகளில் யாளி, மகரம் கிளிப்போன்ற உருவங்கள், அழகிய வேலைப்பாடுடன் செதுக்கப்பட்டுள்ளன. இங்குள்ள பீரங்கிகளில் இரண்டு மிகப்பழமையானவை. இவைகள் முதன்முதலில் பீரங்கிகள் எப்படி செய்யப்பட்டன என்பதை நமக்கு விளக்கும். முதலில் நீண்ட இரும்புக் கம்பிகளைச் சுற்றிலும் இரும்பு வளையங்களைப் பொருத்தி, அவற்றை ஒன்றுடன் ஒன்றைப் பற்றவைத்து இணைத்து பீரங்கியைச் செய்தனர். இவற்றில் ஒன்று சேலத்தில் அட்டப்பாடியிலும், மற்றொன்று கடப்பா மாவட்டத்திலும் புதைபொருளாக கிடைத்தவை. இவைகள் போர்த்துகீசியரால் 14-ம் நூற்றாண்டில் கொணரப்பட்டவை என்று நம்புகிறார்கள். பிற்காலத்தில் பீரங்கிகள் செய்யும் முறை மாறுதலடைந்தது. இரும்பை நன்றாக உருக்கி, ஒரே குழாயாக வார்த்து எடுக்கும் முறை கையாளப்பட்டது.

மேலும் பல முக்கியமான கவர்ச்சி பொருட்கள் இவ்வறையில் உள்ளன. அவை இருபக்கமும் திருப்பக்கூடிய எஃகு வில்கள் தஞ்சாவூர் மகாராஜா கையெழுத்திட்ட அம்புகள், சிவாஜி உள்ளங்கையில் மறைத்துவைத்து அப்சல்கானைக் கொன்ற புலிநகங்கள் ஆகும்.

## தென் இந்திய பழங்குடிகளின் தொழிற் பண்பாடு

இங்குள்ள தென் இந்திய பழங்குடிகளின் தொகுப்புகள் அவர்களின் தொழில்பண்பாடு, வாழ்க்கையின் நிலை முதலியவற்றை எடுத்துக் காட்டுகிறது. இத் தொகுப்புகளை முதன் முதலில் இந்தப் பொருட் காட்சிச் சாலைக்காக டாக்டர் எட்கர் தர்ஸ்டன் (Dr. Edgar Thurston) என்பவர், பழைய சென்னை மாகாணத்தை 1894-ல் சுற்றி மானிடவியல் ஆராய்ச்சி செய்து, அக்குறிப்புகளை 1909-ல் 'தென் இந்திய சாதிகளும் பழங்குடிகளும்' என்ற தலைப்பில் புத்தகமாக வெளிக்கொணர்ந்தார். இத்தொகுப்பை முதல் தளத்திலுள்ள தனி அறையில (புதியதாகச் செய்யப்பட்ட கண்ணாடிப் பெட்டிகளில்) காணலாம். தென் இந்திய பழங்குடிகளான தொதுவர், கோடர், குரும்பர், இருளர், மலசர், மன்னன், முதுவன், காணிகாரர், செஞ்சு, லம்பாடி, சோரர், கொண்டர், கோயர், போன்றவர்களின் தொழிற்பண்பாட்டை அவர்கள் செய்து

கையாண்டு வரும் பொருட்களைக் கொண்டு இங்கு விளக்கப்பட்டிருக்கிறது. அவை ஆடை ஆபரணங்கள், தொண்டும்-வேட்டையாடும்-விவசாயம் செய்யும் கருவிகள், தீ உண்டாக்கும் கருவிகள், வாத்திய இசைக் கருவிகள், சமய சடங்குப் பொருட்கள் முதலியன. மேலும் எழுத்தாணிகள், இசைக் கருவிகள், கடவுளின் காணிக்கைப் பொருட்கள், மலையாள மந்திரப் பாவைகள், நிழலாட்டம், கதகளி நாடக உருவங்கள், தென் இந்தியப் பண்பாட்டை விளக்க இங்கு காட்சிப் பொருளாக வைக்கப்பட்டுள்ளன.

## கிராமக் கலையும் கைத்தொழிலும்

பூர்வீகக் குடிகளின் பொருட்களைத் தவிர மற்ற தொகுப்புகளில் உள்ள பொருட்கள், நெருப்பு உண்டாக்கும் கருவிகள், ஆபரணங்கள், வாத்திய இசைக் கருவிகள், எழுத்தாணிகள், ஓலைச் சுவடிகள், மந்திர பாவைகள் சமய சடங்கு பொருட்கள், காணிக்கை பொருட்கள், யமதர்பார், பாற்கடல் கடைதல், விஷ்ணுவின் அவதாரங்கள் முதலிய புராண கதைகளை விளக்கும் பொம்மைகள் ஆவன. தஞ்சாவூர், கொண்டபள்ளி பொம்மைகளும், தென் கன்னடத்தி பூத ஆசிரமங்களிலுள்ள பித்தளை பொம்மைகளும், கஞ்சம் மாவட்டத்திலுள்ள பழங்குடிகளான கொண்டர்களின் சமய சடங்கு பித்தளை பொம்மைகளும், ஒரிசாவிலுள்ள மீன்பிடிப்போர் வழிபடும் மண், மர உருவங்களும், தஞ்சாவூரின் களிமண்ணால் செய்த கிராம தேவதைகளும் கிராமக் கலையை எடுத்துக்காட்டுகின்றன. கேரளாவின் கதகளி ஆட்டமும், பாவைக் கூத்தும், ஆந்திராவின் பொம்மலாட்டமும், தென் இந்திய நாடகக் கலையில் முக்கிய இடம் பெற்றுவந்தவை. இவைகளும் பொருட்காட்சிச் சாலையில் வைக்கப் பட்டுள்ளன.

## தீ உண்டாக்கும் கருவிகள்

மரத் துண்டுகளை ஒன்றுடன் ஒன்று உராய வைத்தும், சக்கி முக்கிக் கற்களை இரும்பு துண்டுகளுடன் தட்டியும் நெருப்பு உண்டாக்கும் பழக்கம் கற்காலத்து பழங்குடிகளிடம் காணப்படுகிறது. மரத் துண்டுகளின் துணைக் கொண்டு பழங்குடிகள் மூன்று முறைகளில் நெருப்பை உண்டாக்குவர். இவை துளைக்கும் முறை, உராயும் அல்லது அறுக்கும் முறை, நெருப்பு பிஸ்டனில் காற்றடைக்கும் முறை.

பேரனத்திலுள்ள நாயாடிகளும், நெல்லூரிலுள்ள எனாதிகளும், மிக எளிதான துளைக்கும் முறையில் நெருப்பை உண்டாக்குகிறார்கள். இதற்கு தேவையானவை இரண்டு நீண்ட குவிந்த மரக்கட்டைகள்தான். ஒரு கட்டையில் நேரான உருளையைப் போன்ற குழிவுகளை ஏற்படுத்திக் கொள்ளவேண்டும். இக் கட்டையை, குழிகள் மேல் நோக்கிய நிலையில் ஒருவன் தன் இரண்டுக் கால்களைக் கொண்டு பூமியில் நன்றாக அழுத்திக் கொள்ளவேண்டும். இப்பொழுது மற்றொரு மரக்கட்டையின் உருண்டையான முனையை செங்குத்தான நிலையில முதல் கட்டையின் குழியில பொருந்த

வைத்து அக்கட்டையை மத்து கடைவதுபோல் இரண்டு உள்ளங்கைகளைக் கொண்டு திருகவேண்டும். நெருப்புப் பிடிக்க நெருப்புப் பொறிகளால் பற்றக்கூடிய மிக மிருதுவான பஞ்சுகளைக் கடைவாயில் வைக்கவேண்டும். இவ்வித பஞ்சுகளை துளைச் செய்த பனைகொட்டைகளில் ஈரமடையாமல் பத்திரமாக அடைத்து வைத்துக்கொள்வர்.

இரண்டாவது முறையில் இரண்டு கட்டைகளும், கெட்டியாகவும், தடிப்பாகவும் இருக்கவேண்டும். குழிகளுள்ள ஒரு கட்டையை கீழே பூமியில் கிடத்தி, கால்களால் ஒருவன் நன்றாக மிதித்துக்கொள்ள, மற்றொருவன் மற்றொரு கட்டையை அக்கட்டையின் மேல் செங்குத்தாக கீழேயுள்ள கட்டையின் குழிகள் ஒன்றில் பொருந்த வைத்து, தச்சன் துளைப் போடுவது போல், கயிறு கொண்டு மேல் கட்டையை வேகமாகச் சுழற்றுவான். அச்சமயத்தில் கீழ் கட்டையை மிதித்திருப்பவன் பாதி தேங்காய் ஓட்டை செங்குத்தான கட்டைமேல் குவித்து உள்ளங்கையால் அழுத்தி தாங்கிப் பிடிப்பான். இதனால் நெருப்பு உண்டாகும்.

மலாயாவில் சில பூர்வீகக் குடிகள் நெருப்பை காற்றின் அழுத்தத்தைக் கொண்டு, நெருப்பு பிஸ்டன் மூலம் உண்டாக்குகின்றனர். திருநெல்வேலி மாவட்டத்தில், ஆதிச்சநல்லூரில் தோண்டி எடுக்கப்பட்ட இரும்பு பொருட்களில், இரும்பு நெருப்பு பிஸ்டன்கள் இருந்தன என்பது குறிப்பிடத்தக்கது. நெல் உமியை நெருப்பு பற்றும் மிருதுவான பொருளாக உபயோகித்தனர் என்பது ஓர் இரும்பு பிஸ்டனில் இருந்து கண்டுபிடிக்கப்பட்டது. பூர்வீகக் குடிகள் மிக சாதாரணமாக சிக்கி முக்கி கற்களையும் இரும்பு துண்டுகளையும் ஒன்றுடன் ஒன்றை மோதச் செய்து நெருப்பை உண்டாக்கினர்.

கேரளத்திலுள்ள பணியர் என்னும் பழங்குடிகள் நெருப்பை உராயும் முறையில் உண்டாக்குகின்றனர்.

## ஆபரணங்கள்

பொருட்காட்சிச் சாலையில் சேகரித்து வைக்கப்பட்டுள்ள பழங்குடிகளின் நகைகளும், கிராமவாசிகளின் ஆபரணங்களும், பலவித பொருட்களைக் கொண்டு பல ரகங்களில் செய்யப்பட்டவை. ஆனைமலை காடர்கள், மரக் கட்டைகளாலும், தாழை ஓலை சுருள்களாலும் செய்யப்பட்ட வட்ட வடிவமான காதணிகளை அணிகின்றனர். இவர்களில் பெண்கள் மூங்கிலின் அழகிய சித்திர வேலைபாடுகள் அமைந்த சீப்புகளை கொண்டையின் பின்புறத்தில் அணிகின்றனர். அதிக ஆபரணங்கள் அணிந்துள்ள பழங்குடி தெலிங்கானத்தில் வாழும் லம்பாடியர்தான். இவர்கள் பித்தளை, தந்தம் முதலிய பொருட்களில் செய்த பல வளையங்கள், கடகங்கள், கழுத்தணிகள், கையணிகள், வளையல்கள் முதலியவைகளுடன் காட்சியளிப்பர். நீலமலை தொதுவர்கள் தடித்த பித்தளை ஆபரணங்களை அணிகின்றனர். மேலும்

கீடற்சோழி தொங்கட்டங்களைக் கொண்ட ஆடைகளை அணிகின்றனர். கோடர்கள் தங்கள் அணிகளை இரும்பினால் செய்கின்றனர். வண்ணக் கண்ணாடி மணிகள், மரக்கட்டை, நார், தேங்காய் ஓடு, மூங்கில் முதலிய பொருட்களை பழங்குடி மக்கள் ஆபரணங்கள் செய்ய அதிகமாக உபயோகிக்கின்றனர். கேரளத்திலுள்ள செருமர்களும், பணியர்களும், நாடோடிகளாக வாழும் குரவர்களும், கண்ணைக் கவரும் வண்ண மணிகளில் ஆன கழுத்தணிகளை அதிகமாக உபயோகிக்கின்றனர். கோவை மலசர், கேரள முதுகர் போன்ற கிராமவாசிகளும், பூர்வீகக் குடிகளும, அலுமினியம், பித்தளைப் போன்ற இலேசான உலோகங்களில் காப்பு, வங்கி, ஒட்டியாணம் செய்து அணிகின்றனர். பழங்குடிகளின் அணிகளும், ஆபரணங்களும், விலை மதிப்பில் மிகக் குறைவாக இருந்தாலும், அப்பொருட்கள் அவர்களின் கலை ஆர்வத்தையும், திறமையையும், முன்னேற்றத்தையும் எடுத்துகாட்டுகின்றன. ஆனல் கிராமவாசிகளும், நகரவாசிகளும், தங்கள் சேமிப்பை தங்கம், வெள்ளி உயர்ந்த ரகக் கற்களைக் கொண்ட நகைகளாக வைத்துள்ளனர். இப்பொருட்காட்சிச் சாலையிலுள்ள நகைகளும், ஆபரணங்களும், அவைகளை அணிபவர்களின் இடத்திற்கு தக்கவாறும், அணிந்துக் கொள்ளும் வகுப்பிற்கு ஏற்றதாகவும், பொருளிலும் அமைப்பிலும் வேறுபட்டுள்ளன என்பதைக் கவனிக்க வேண்டும். கேரளாவிலுள்ள மாப்பிள்ளை (Moplah) என்ற முகம்மதியர் தங்கள் கழுத்தணி, இப்பணி பல தொங்கட்டங்கள் கொண்ட காதணி முதலியவற்றை பெரும்பாலும் வெள்ளியினுல் செய்துக்கொள்கின்றனர். நம்பூதிரி பிராமணர்களும், சிரியன் கிறிஸ்தவர்களும், திருமணம் முதலிய திருவிழா காலங்களில் அணிந்துக் கொள்ளும் தங்க நகைகளும் காட்சியில் வைக்கப்பட்டுள்ளன.

## எழுத்தாணிகள்

பனை ஓலைச் சுவடிகளில் இரும்பு எழுத்தாணிக்கொண்டு எழுதுவது ஒரு சிறந்த கலையாகும். இக் கலை பண்டை இந்தியாவில் தழைத்திருந்தது. சுமார் 2,000 ஆண்டுகட்டு முன்பு இந்தியாவில் எழுதிய எல்லா காப்பியங்களும் எழுத்தாணியால் எழுதி, நன்குக பாதுகாக்கப்பட்டுவந்தன. அதனுல் அவைகளை இன்றும் நம்மால் காண முடிகிறது. சில முக்கியமான பத்திரங்கள் மூங்கில் தண்டின் மீது எழுதப்பட்டன. காகிதத்திற்குப் பதிலாக துணி முதலியன உபயோகித்தனர். துணி மீது கரி பூசி, அதன் மேல் மாக்கல் எழுத்தாணிக் கொண்டு எழுதினர். இவ்வித ஓலைச்சுவடிகள், மூங்கில் பத்திரங்கள், கரி பூசிய துணி தாள்கள் காட்சியில் வைக்கப்பட்டு உள்ளன.

பல அற்புத வேலைபாடுகளுடன்கூடிய எழுத்தாணிகள் பொருட்காட்சிச் சாலையில் வைக்கப்பட்டிருக்கின்றன. சிலவற்றில் ஒரு பக்கம் எழுத்தாணியாகவும், எதிர் பக்கம் ஓலையை வெட்டும் கத்தியாகவும் இருக்கும். இது போன்ற பல உருவங்கள் கொண்ட எழுத்தாணிகளையும் காட்சியில் காணலாம். எழுத்தாணிகள் மட்டுமல்லாமல் பொருட்காட்சியில் நாணல் குழாய்களால் செய்து உபயோகித்த பேனுக்களையும் காணலாம்.

## வாத்திய இசைக் கருவிகள்.

இங்கு காணப்படும் தென் இந்திய வாத்தியக் கருவிகளை முக்கியமாக தந்திகள் (நாம்புகள்) மூலம், காற்றின் மூலம், கொட்டுதல் மூலம் உபயோகிப்பவை என மூன்று வகைகளாகப் பிரிக்கலாம். காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளவைகளில் கீழே குறிப்பிட்டவை மிக முக்கியமானவை. தென் இந்திய இலக்கண இலக்கியங்களில் வரும் யாழ் என்னும் இசைக் கருவி: இது தற்போது உபயோகத்தில் மறைந்துவிட்டது. இவ்விதக் கருவியை பர்மியர்கள் இப்போதும் உபயோகிக்கின்றனர். இதற்கு சவுன் (Saun) என்று பெயர். இதன் குவளை, படகு போன்று இருக்கும். இதற்கு தந்திகள் உண்டு. மற்றொரு முக்கிய இசைக் கருவி பஞ்சமுக வாத்தியம். இதற்கு ஐந்து முகங்கள் உண்டு. இது வெண்கலத்திலான பெரிய முரசு. இது கோயில் இசை விழாக்களில் பக்க வாத்தியங்களோடு உபயோகிக்கப்படும். மற்றொரு முக்கியமானதும், தற்போது மிக பிரசித்தி பெற்று வருவதுமானது வில்லடி வாத்தியம். இது ஒரு நீண்ட வில்லை யொத்தது. அதன் நாணில் கிட்டத்தட்ட 12 மணிகளும் இடையில் ஒரு பானையும் கட்டி ஒரே சமயத்தில் பல மனிதர்கள் இதை மீட்டுவர். புள்ளுவன் குடம் என்பது கேரளாவிலுள்ள குறி சொல்லும் புள்ளுவர் என்னும் குடிகள் 'பாம்பன் துள்ளல்' எனனும் நாகக் கடவுளை வணங்கும் பொருட்டு வாசிக்கும் இசைக் கருவியாகும். இது ஒரு நரம்பும், கொட்டும் பானையும் சேர்ந்த கருவியாகும்.

## இறைவனுக்கு காணிக்கைப் பொருட்கள்

ஆண்டவனுக்கு அற்பணித்த பொருட்களில், கணுக்காலையும் கருத்தையும் கவரககூடியது மிகப் பெரிய இரண்டு தோல் செருப்புகள். இவை, மாதிகர் என்னும் தெலுங்கு சக்கிலியர்கள் திருப்பதி வேங்கடேசுவர பெருமாளுக்கு காணிக்கையாகச் செலுத்தியவை. கண், காது, வாய், கை, கால் போன்ற பல அங்கங்களின் உருவைக் கொண்டுள்ள வெள்ளிப் பொருட்கள் பக்தர்களால் தங்களின் நோய் தீர்ந்தபிறகு வேண்டுதலுக்கேற்ப கடவுளுக்கு காணிக்கைச் செலுத்தியவை. இங்கு காணப்படும் காணிக்கைப் பொருட்கள் இந்தியாவிலும், வெளிநாடுகளிலும் உள்ள இந்து, முஸ்லிம், கிறிஸ்தவர் ஆலயங்களில் காணிக்கைப் பொருளாகச் செலுத்தியவை. நாட்டில் பஞ்சம், பட்டினி, நோய் முதலிய கொடிய வியாதிகள் வராமல் இருக்கவும் விளைச்சல்களும், கால்நடைகளும் பாதிக்கப்படாமல் இருக்கவும், கண்டத்திலுள்ள பூத ஆலயத்தில் களிமண்ணிலும், பித்தளையிலும் செய்த புலி, சிறுத்தை, யானை, காட்டுப்பன்றி முதலிய உருவங்களை காணிக்கைப் பொருளாகச் செலுத்துகின்றனர். இவைகளையும் காட்சியில் காணலாம்.

## மலையாள மந்திரப் பாவைகள்.

கேரளாவிலுள்ள மாப்பிள்ளை மந்திரவாதிகள் பேய், பிசாசு, ஆவி முதலியவற்றை அகற்றுவதில் கெட்டிக்காரர்கள் என கருதப்படுகிறார்கள். ஒரு பெண்ணிற்கு பேய் அல்லது பிசாசு பிடித்துள்ளது எனக் கருதப்

பட்டால் அம்மந்திரவாதி மரக்கட்டையில் செய்த ஒரு பெ பொம்மைக்கு மந்திரத்தின் மூலம் அவ்வாவியை மாற்றிவிடுகிறா மாற்றப்பட்ட அவ்வாவி அம் மரக்கட்டையுடன் ஐக்கியமாவதற்கு மந்திரங்க உச்சரித்துக்கொண்டே பல ஆணிகளை அம் மரப்பெட்டியில் செலுத் கிறான். பிறகு அம் மரப்பொம்மை கடலில் எறியப்படுகிறது. இவ்வா கடலில் எறியப்பட்ட உருவங்களில் மூன்று கேரளக் கடற்கரையில் ஒதுக்க பட்டன. அம்மூன்று பொம்மைகளும் காட்சியில் வைக்கப்பட்டுள்ளன அவற்றில் ஒன்று பெண் உருவம். இவ்வுருவம் ஓர் அகலமான மரப்பலகை யில் வரையப்பட்டிருக்கிறது. மற்ற இரண்டில், ஒன்று பெண் உருவம் இது உண்மையான மனித உயரத்தைக் கொண்டுள்ளது. ஆனால் அதன் உடல் முழுவதும் பல ஆணிகள் அறையப்பட்டுள்ளன. மூன்றாவது மிகச் சிறிய உருவம்.

## கதகளி உருவங்கள்

கேரளத்தில் உற்பத்தியான நாடகங்களில் கதகளி மிக முக்கியமானது. அதில் பங்குபெறும் நான்கு முக்கியமான குணச்சித்திரப் பாத்திரங்கள் மரப் பாவைகளாகச் செய்து கண்ணாடிப்பெட்டியில் வைக்கப்பட்டுள்ளன. இவற்றில் முதலாவது பச்சையெனப்படும் சாத்வீக குணச்சித்திரம். இது இதிகாசங்களில் வரும் தருமன், அர்சுனன் போன்ற நேர்மை வழியைப் பின்பற்றும் பெரிய வீரர்களின் பாத்திரம்.

இரண்டாவது கத்தி எனப்படும் இராஜச குணச்சித்திரம். இதுவும் இதிகாசங்களில் வரும் துரியோதனன், இராவணன் போன்ற ராஜ கம்பீரமும் தற்பெருமையும், ஏகாதிபத்திய குணமும் கொண்ட அரசர்களின் பாத்திரம்.

மூன்றாவதாக தாடி எனப்படும் தாமச குணச்சித்திரம். இதுவும் இதிகாசங்களில் வரும் பகாசூரன், துச்சாதனன் போன்ற குறுகிய நோக்கும், கொடூர புத்தியும் கொண்ட பாத்திரம்.

நான்காவதாக, ஸ்திரீ எனப்படும் பெண்பாகம். இதுவும் காப்பியங் களில் வரும் ருக்மணி, தமயந்தி போன்ற நற்குணங்களும் நற்பண்புகளும் கொண்ட அரச வம்சத்தைச் சார்ந்த பெண்பாத்திரம். இது எல்லா நாடகத் திற்கும் பொருந்தும்படியான ஒரேவிதக் குணத்தைக் கொண்டதாகும். காட்சியில் வைக்கப்பட்டிருக்கும் அவ்வுருவங்கள் நாடகத்தில் வரும் பாத் திரங்களின் ஆடை அணிகளையும் முகவசீகரத்தையும் குறுநிசயங்களையும் விளக்குகிறது.

இந்த நாடகத்தின் முக்கியம் என்னவென்றால் நாடக பாத்திரங்கள் சம்பாஷணையே இல்லாமல் முகபாவத்தின் மூலமும், செய்கைகளை நடனத்தின் மூலமும் விளக்குகின்றனர். இத்துடன் பின்பாட்டும் வாத்திய இசையும் இணைகிறது.

## நிழலாட்டம்

### (தோல்பொம்மை–பொம்மலாட்டம்–பாவைக்கூத்து)

பேசும் நிழற்படம் வருவதற்கு முன்பு, தென் இந்திய கிராமங்களில் மக்கள் நிழலாட்டங்களைக் கண்டு களித்து வந்தனர். இந்த நிழலாட்டம் தஞ்சையில் மராட்டியர் ஆட்சியின் போது உன்னத நிலையில் இருந்ததாகத் தெரிகிறது. இங்கிருந்துதான் இவ்வாட்டம் மலையாளம், மைசூர், ஆந்திரம், ஜாவா, சீனா, இந்தோ–சீனா நாடுகளுக்கு பரவியதாகவும் கருதப்படுகிறது.

கேரளாவில் நடத்தப்படும் நிழலாடடத்திற்கு பாவைக்கூத்து என்று பெயர். இப்பாவைக் கூத்தில் நிழற்படம் வெண்மையும் கருமையுமாகக் காட்சியளிக்கும்.

மைசூரிலும், ஆந்திராவிலும் நடத்தப்படும் நிழலாட்டத்திற்கு பொம்மலாட்டம் என்று பெயர். இப்பொம்மைகள் மெல்லிய தோலில் மிக அழகான வண்ணங்கள் தீட்டப்பட்டு செய்யப்பட்டிருப்பதால், நிழற்படம் வண்ண நிறத்தில் காட்சியளிக்கும்.

தஞ்சையில் இன்று இந்த நிழலாட்டம் (பொம்மலாட்டம்) தட்டையான பொம்மையாக இல்லாமல் முழு உருவில் நிலைத்து நிற்கின்றன.

ஜாவாவிலுள்ள வயாங் உராங் என்ற ஆட்டம் தென் இந்திய நிழலாட்டங்களின் பல அம்சங்களைக் காட்டுகிறபடியால் தென் இந்திய நிழலாட்டம் நம்மைச் சுற்றியுள்ள பல நாடுகளில் பரவிக்கிடந்தது என்பதை எடுத்துக் காட்டுகிறது. இந்தோ–சீனாவிலிருந்து இங்கு வந்த நிழற்படங்கள் குறிப்பிடத்தக்கவை. இவை அங்கோர்வாத் கோயில், கும்பகர்ணன், தாடகை, சடாயு, அப்சரஸ்த்ரி, மகாரிஷி போன்ற காட்சிகளும், கதாபாத்திரங்களும் கொண்டதாகும். இந்த நிழலாட்டம் சீனாவிற்கும் பரவியிருப்பது குறிப்பிடத்தக்கது.

நிழலாட்டத்தில் இதிகாச கதைகளை நாடகமாக்கிக் காட்டுகின்றனர். இதில் வரும் கதாபாத்திரங்கள், தட்டையான தோலினால் ஆனவை. இப்பாத்திரங்களின் உருவம் வெண்மையான திரையில் பின்பக்கத்தில் வைக்கப்பட்டுள்ள விளக்கின் ஒளியால் முன்பக்கத்தில் தெரியும். இவ்வுருவங்களை முதலில் தோலில் பொருத்தமாக வெட்டி, துவாரங்கள் செய்து பிறகு அத்தோலுருவின் கை, கால், தலை முதலியவைகளை மெல்லிய குச்சியால் கட்டி அக்குச்சியின் உதவியால் நாடகத்தை நடத்துபவன் விளக்கின் பின்புறமிருந்துகொண்டு அவ்வுருவங்களை ஆட்டுவிப்பான். பின்புறமிருந்து அவ்வாட்டத்துடன் கூறப்படும் பாட்டும், வசனமும், நாடகத்தை விறுவிறுப்பாகச் செய்கிறது.

## தென் இந்திய பழங்குடிகள்

உலகிலுள்ள நிலப்பகுதிகள் அனைத்தும் ஒரே அமைப்புடையன அல்ல. பனி நிலமும், தமிழ் நிலமும், வெவ்வேறு நிலைமையுடையனவாகும்—ஆகவே, அந்நிலத்தின் தட்ப வெட்ப நிலைக்கேற்ப மக்களுடைய உணவு—உடை—இல்லம்—வாழ்க்கை—நாகரீகம்—பழக்க வழக்கங்கள்—பண்பாடு முதலியன அமைவது இயல்பு.

நிலப்பகுதிகளை ஐவகையாகப் பிரிக்கின்றனர். அவை குறிஞ்சி, முல்லை பாலை, மருதம், நெய்தல் ஆவன. தென் இந்திய பூர்வீகக் குடிகளின் வாழ்க்கைத் தரமும், பண்பாடும் இவ்வைந்து நிலங்களுக்கேற்ப பிரிக்கப் பட்டிருக்கிறது.

குறிஞ்சி.—மலையும், மலையைச் சார்ந்த இடமும் ஆகும். இங்கு மக்கள், உயிரினங்களை வேட்டையாடி உண்டு வாழ்கின்றனர். இவர்களின் ஆடை இலைகள், தழைகள், மரப்பட்டைகள். குறிஞ்சி நிலம் பெரும்பாலும் காடுகளாயிருப்பதால், உணவுப் பொருட்கள் பயிரிடுவது அரிது. கிழங்கு, தேன், காய், கனி, இறைச்சி முதலியன இவர்களின் உணவுப் பொருட்கள்.

முல்லை.—காடும், காட்டைச் சார்ந்த புல்வெளியும் ஆகும். இங்கு வாழும் மக்கள் ஆடுமாடுகளை மேய்த்து நீர்வளம் உள்ள இடத்தில் வரகு, சாமை போன்றவற்றைப் பயிரிடுகின்றனர். அருகிலுள்ள மருத நிலத்தில் பால், தயிர், வெண்ணை போன்றவற்றை விற்று, தமக்கு வேண்டிய உணவுப் பொருட்களையும், ஆடை அணிகளையும் வாங்கி வருகின்றனர்.

மருதம்.—இது ஆற்றுப் பாய்ச்சலுள்ள வயலும், வயலைச் சார்ந்த இடமும் ஆகும். இது நாகரிக வளர்ச்சி பெற்ற இடம். இங்கு, நிலத் திற்கேற்ப பலவிதப் பயிர்களை பயிர் செய்து தானியங்களைச் சேர்த்துவைத் துக்கொள்வர்.

நெய்தல்.—கடலும், கடலைச்சார்ந்த இடமுமாகும். இங்கு வாழ்பவர் கடலில் கலம் செலுத்தி மீன் பிடிக்கின்றனர். முத்துக் குளித்தலும், சங்கெடுத்தலும், உப்பு தயாரித்தலும் இவர்களின் பிற தொழில்கள்.

பாலை.—இது விளைவு ஒன்றும் இல்லாத வறட்சியான பகுதியாகும். இங்கு பயிரிட முடியாது. ஆகவே மக்கள் வழிப்பறி செய்தும், பிறநிலங் களில் களவு செய்தும் வாழ்வது இயற்கை. இவ்வாறு ஒருநில மக்களைக் கள்வர்களாக்குவதும் அந்நிலத்தின் அமைப்பேயாகும்.

## ஆனைமலை காடர்கள்

கோவையின் ஆனைமலையில் வசித்துவரும் காடர்கள்தான் இந்தியாவின் மிகப் பழமையான பழங்குடிகள். இவர்களின் மக்கள்தொகை இப்பொழுது 700 ஆகும். இவர்களின் எண்ணிக்கை வெகுவேகமாக குறைந்து கொண்டு வருகிறது. இவர்கள் மலையாளம் கலந்த கொச்சைத் தமிழ்மொழியைப் பேசுகின்றனர். இவர்களின் வாழ்க்கைத் தரமும், பண் பாடும் குறிஞ்சி நிலத்தைச் சேர்ந்தது. இவர்களுக்கு விவசாயம் தெரியாது. வீட்டில் நாயைத் தவிர எந்தப் பிராணியையும் வளர்ப்பதில்லை. கிழங்கு, தேன், காய், கனி முதலியன இவர்களின் உணவுப் பொருட்கள். யானை பிடிப்பதிலும், மரம் ஏறுவதிலும் வல்லவர்கள். காடர்களின் வாழ்க் கையில் பல அதிசயமான பழக்கங்கள் உண்டு. காடன் தன் மனைவிக்கு மிக்க நுண்ணிய வேலைப்பாடுடன், தானே தயாரித்த ஒரு சீப்பைப் பரிசளிக்க,

அவள் அதை தன் கொண்டையில் அலங்காரப் பொருளாக அணிந்து கொள்வாள். இவ்விதச் சீப்புகள் காட்சிப் பொருளாக வைக்கப்பட்டுள்ளது. புது கினியில் (New Guinea) உள்ள நீக்கிரிடோக்கள் (Negro-toes) இதே மாதிரியான மூங்கில் சீப்புகள் செய்து உபயோகிக்கின்றனர்.

காடர் இனத்தில் வயது வந்த ஆணும் பெண்ணும் தங்கள் முன் வரிசைப் பற்களை செதுக்கியோ அல்லது அராவியோ கூர்மையாகச் செய்துகொள்கின்றனர். இம்மாதிரி செய்வதால், இவர்களின் அழகு பன்மடங்கு அதிகரிக்கிறது எனக் கருதுகின்றனர். காடர்களின் மற்றொரு பழக்கம், மருமகனும், மாமியாரும் ஒருவரையொருவர் நேரிடையாகப் பார்க்கவோ, பேசவோ கூடாது என்பது. இது விலகியிருத்தல் அல்லது கட்டுப்பாடுள்ள நடத்தை (Avoidance) எனப்படும்.

**கேரள மலைவாசிகள்.**—காணிகாரர், மன்னான், முதுவன், மலை அரையன், உள்ளாடன், புலையன், முதலியோர் கேரளத்தின் மலைவாசிகள். இவர்களில் பெரும்பாலோர் வேடுவர்களும், புன விவசாயிகளும் ஆவர். இவர்களின் குடிசைகள் மூங்கிலினாலும், தாழைகளினாலும், வீட்டுப் பாத்திரங்கள் மூங்கிலினாலும் ஆனவை. இவர்கள் உபயோகிக்கும் அம்பு இருவகைப்படும். அவை கூர்மை முனையுடையவை, உருண்டை முனையுடையவை. கூர்மை முனையுடையவை பிராணிகளையும், பறவைகளையும் கொல்லுவதற்கும், மொட்டம்பு எனப்படும் உருண்டை முனையுடையவை அவற்றைத் தாக்கி மூர்ச்சிக்க செய்வதற்கும் உபயோகிக்கின்றனர். பூமியிலுள்ள கிழங்குகளைத் தோண்டியெடுக்கவும், புன விவசாயம் செய்யவும் கூரிய மரக்கொத்துக் கோல்களை உபயோகிக்கின்றனர். எலியைப் பிடிக்க விற்பொறியை உபயோகிக்கின்றனர். இவர்கள் வண்ணக் கண்ணாடி மணிகளுடனும், உலோக மணிகளுடனும், தேங்காய் ஓடு, பாய்நார் முதலியவைகளிலான ஆபரணங்களை உபயோகிக்கின்றனர். காடர்களைப்போல் இவர்கள் நீண்ட சதுர வடிவம் கொண்ட வீடுகளைக் கட்டிக்கொள்ளுகின்றனர். சில சமயங்களில் வீடுகளை மரங்களின்மீது அமைத்துக்கொள்ளுகின்றனர்.

தண்ட புலையர்களில் ஓர் விசித்திரப் பழக்கம் உள்ளது. அதாவது ஒரு பெண் வயதுக்கு வந்து விட்டால், 'தண்ட' என்னும் நாணற்புல்லினாலான ஆடையை அணியச் செய்வர்.

பழங்குடிகளில் உள்ளாடன் இனத்தவர்தான் துப்பாக்கியிலுள்ள 'குதிரை' அமைப்புடைய குறுகிய வில்லை உபயோகிக்கின்றனர். 'ஹார்பூன்' என்பது பெரிய திமிங்கலம், சுறாப்போன்ற கடற் பிராணிகளை வேட்டையாடும் கருவி. இது மேற்கூறிய வில்லின் அமைப்பை ஒத்தது.

கேரளத்தின் சில பழங்குடிகள் சிறு பிராணிகளையும், மீன்களையும் வேட்டையாட ஊதுகோல் குழைகள் அல்லது ஊதுகோல் துப்பாக்கிகளை (Blow guns) உபயோகிக்கின்றனர். இத் துப்பாக்கியிலுள்ள முன் துவாரத்தில் கூரிய அம்பு முனையை வைத்து, பின் துவாரத்தை, வாயில் பொருத்தி வேகமாக ஊதினால் காற்று வேகம் ஊசியை உந்தித் தள்ள, அது எதிர்ப்பட்டப் பொருளின்மீது வேகமாக தைத்துக்

கொள்ளும். மலாயாவிலுள்ள செமாங் சாகையினரும், போர்னியோவிலுள்ள கென்ய கெட்டா பழங்குடியினரும் விஷம் தோய்ந்த ஊசியை இந்த ஊதல் துப்பாக்கியில் உபயோகிக்கின்றனர்.

**நீலமலை தொதுவர்.**—இவர்கள் நீலமலையிலுள்ள வடுகர், கோடர், குரும்பர், இருளர் போன்ற பழங்குடிகளுடன் வாழ்ந்து வருகின்றனர். தொதுவர் காடும் காட்டைச் சார்ந்த புல்வெளியிலும் வசிப்பதால் எருமைகளைக்கொண்டு பால்பண்ணை ஏற்படுத்தி, அதன் மூலம் வரும் வருவாயைக் கொண்டு வாழ்கின்றனர். இவர்கள் வசிக்கும் நீலமலை ஐரோப்பியரின் வாசஸ்தலமாக இருந்ததினால், தொதுவரின் பெயர் உலக முழுமையும் தெரிந்திருக்கிறது. தொதுவர்களில் ஆண்கள் உயரமாகவும், எடுப்பாகவும், நீண்ட மூக்குடன் அழகாக இருப்பர்; பெண்கள் சாதாரணமாக இளம் தோற்றத்துடன் இருப்பர். ஆண்கள் மர கைத் தடிகளில் சித்திர வேலைப்பாட்டையும், பெண்கள் துணிகளில் பூ வேலைப்பாடுகளையும் மிக நேர்த்தியாகச் செய்கின்றனர். இவர்களின் ஆடையை 'புத்குளி' என்பர். இவர்கள் வசிக்கும் மாதிரி குடிசையும், அணிந்து கொள்ளும் கனமான பித்தளை ஆபரணங்களும் விசேட கைத்தடிகளும், பிணத்துடன் எரிக்கும் கதைகளும், போலி எருமைக் கொம்புகளும், பணப்பையும், சோழிகளால் அலங்கரிக்கப் பட்ட பெட்டியும் காட்சியில் வைக்கப்பட்டுள்ளன. தொதுவப் பெண் தாய்த்தன்மை எய்யும்போது, வில்லையும் அம்பையும் சடங்குப் பொருளாக அவளுக்கு அளிப்பவனே அவளுக்குப் பிறக்கும் குழந்தைக்கு தந்தை யாகக் கருதப்படுகிறான்.

**கோடர்கள்.**—இவர்கள் கைத்தொழிலில் சிறந்தவர்கள். இவர்களின் எண்ணிக்கை சுமார் 1,200 ஆகும். இவர்களுக்கு தட்டான், தச்சன், கருமான், சக்கிலி, குயவன் போன்றவர்களின் தொழிலுடன், கயிறு திரித்தல், குடைகள் தயாரித்தல் முதலியவும் தெரியும். இவர்கள் நிலத்தையும் பண்படுத்தி பயிரிடுகின்றனர். இவர்கள் எருமை இறைச்சியைத் தின்பதால், தொதுவர் இவர்களைத் தீண்டத்தகாதவர்களாகக் கருதிவந்தனர். தொதுவர் மாமிச உணவை உட்கொள்வதில்லை. தொதுவர் ஈமச் சடங்குகளில் பலி கொடுக்கும் எருமைகளை கோடர்களுக்கு கொடுத்து விடுவர். ஆகவே, கோடர்கள் தொதுவர்களுக்கு தாழ்ந்தவர் என இதுவரையில் கருதப்பட்டு வந்தனர். இப்போது கோடர்கள் தங்களை சமூகத்தில் தாழ்ந்தவராக கருதும் பழக்க வழக்கங்களைக் கைவிட்டு முன்னேற்றம் அடைந்து வருகின்றனர்.

கோடர்கள் உருவிலும் சில பழக்க வழக்கங்களிலும் தொதுவரை ஒத்துள்ளனர். கோடர்கள் உபயோகித்த சிறு 'சுற்றும் சக்கரம்' காட்சியில் வைக்கப்பட்டுள்ளது. இதற்கு 'டூர்னட்' (Tournette) என்று பெயர். இது மண்பாண்டங்கள் செய்யும் கருவியாகும். கோடர்களின் இரும்புக் கோடரிகள், செதுக்கும் கருவிகள், ஈட்டிகள் போன்ற ஆயுதங்களும், வளையல், கழுத்தணி போன்ற ஆபரணங்களும் காட்சியில் வைக்கப் பட்டுள்ளன.

**குரும்பர்.**—மலையாளத்திலும், நீலமலையிலும் உள்ள குரும்பர் புன விவசாயம் செய்பவர்கள்; மைசூரிலும் பெல்லாரியிலும் உள்ள குரும்பர் இடையர்கள்; ஊராலி குரும்பர்கள் பானையையும், உலோகப் பொருட்களையும் செய்பவர்கள். குரும்பர்களில் மிகப் பழமையானவர்கள் காடு குரும்பர், ஜேன்குரும்பர், வெட்டு குரும்பர் ஆவர். இவர்கள் காடுகளில் கிடைக்கும் கிழங்கையும், தேனையும் வேட்டையாடிய மிருகங்களையும் கொண்டு வாழ்கின்றனர். இவர்கள் தாங்கள் வசிக்கும் இடத்திற்கு ஏற்றாற்போல், தமிழ், கன்னடம், மலையாளம் போன்ற மொழியைப் பேசுகின்றனர். தென் இந்தியாவிலேயே மலபாரில் வைநாட் தாலுகாவிலுள்ள ஊராலி குரும்பர்கள்தான் சக்கரம் இல்லாமல் கையினால் குடையும் முறையில் பானைகளைச் செய்கின்றனர். சக்கரம் இல்லாமல் பானைகள் செய்யும் முறைகள் உலகில் அந்தமானியர், நாகர்கள் போன்ற சில பழங்குடிகளிடையேயும், அமெரிக்க பழங்குடிகளிடையேயும் காணப்படுகிறது.

**இருளர்.**—இவர்களின் நிறம் கருப்பு. இவர்கள் மலையாளம், நீலமலை மாவட்டங்களில் வாழ்கின்றனர். இவர்கள் காட்டிலாக்காக்களில் கூலியாட்களாகவும், ஊழியர்களாகவும், அல்லது காட்டுப் பொருட்களைச் சேகரித்தல் போன்ற வேலைகளைச் செய்தும் வருகின்றனர். இவர்கள் பிற்பட்ட வகுப்பைச் சேர்ந்திருந்தாலும், தரக்குறைவான தொழில்களில் ஈடுபட்டிருந்தாலும், தென் ஆற்காடு, வட ஆற்காடு, செங்கற்பட்டு மாவட்டங்களில் முன்னேற்றம் அடைந்து வருகின்றனர். மலையாளத்திலுள்ள இருளர்கள், கட்டையுடன் கட்டையை உராசியும், சக்கிமுக்கி கற்களை மோதியும், நெருப்பு உண்டாக்குகின்றனர். இவர்கள் எலியை பிடிக்க வில்பொறியை உபயோகிக்கின்றனர். இவர்களின் மிகப் பிரியமான உணவு, கருங்குரங்கின் இறைச்சி. இருளர் ஆந்திராவிலுள்ள ஏனாதிகளையும், செஞ்சுகளையும் உருவில் ஒத்துள்ளனர். தற்போது இருளர்கள் தங்கள் காட்டு வாழ்க்கையை விடுத்து, நகர்வாழ் பகுதிகளில் குடியேறத் தொடங்கிவிட்டனர்.

**மலசர்கள்.**—கோவையிலுள்ள மலசர்கள், கொச்சி பூராவிலும், பரவியுள்ளனர். இவர்கள் முகவெட்டிலும், அமைப்பிலும், ஆனைமலையில் வசிக்கும் காடரைப்போல் ஆஸ்திரேலியர் இனத்தைச் சேர்ந்தவர்கள். இவர்கள் காப்பித் தோட்டங்களில் வேலைச் செய்வதுடன் காடர்களைப் போல் யானையைப் பிடிப்பதிலும், பழக்குவதிலும் வல்லவர்கள். இவர்கள் இறந்துபோன விலங்குகளின் இறைச்சியை உண்பதால் சமூகத்தில் தாழ்ந்தவராகக் கருதப்படுகின்றனர். இவர்களின் எண்ணிக்கை சில நூறுகளே ஆயினும், அவை குறைந்துக்கொண்டே வருகிறது. இவர்களின் ஆபரணங்கள் பித்தளை அல்லது இதர மட்ட உலோகங்களில் செய்தவை. அவை காட்சியில் வைக்கப்பட்டுள்ளன.

**செஞ்சுக்கள்.**—ஆந்திர பிரதேசத்திலுள்ள நல்லமலையில் தெளிவிய தெலுங்குமொழி பேசும் பழங்குடி, செஞ்சுக்கள். இவர்கள் காட்டுப் பொருள்களைச் சேகரித்தும், வேட்டையாடியும், பிழைக்கின்றனர். இப்பொழுது படிப்படியாக விவசாயத்தை கைக்கொண்டுள்ளனர். இவர்கள்

தேனீக்கூடுப் போல் வட்டவடிவமும், உருளையின் முனையையும் கொண்ட வீடுகளைக் கட்டி அதில் வசிக்கின்றனர். நெருப்பை உண்டாக்க சக்கி முக்கி கற்களை உபயோகிக்கின்றனர். இவர்கள் பெரும்பாலான தென் இந்தியப் பழங்குடிகளைப்போல் உடலமைப்பில் ஆஸ்திரேலிய இனத்தைச் சேர்ந்தவர்கள். கருப்பு நிறமும், நீண்ட தலையும், தடித்த புருவமும், நடுத்தர உயரமும் கொண்டவர்கள். இவர்கள் ஏனாதியரையும் இருளரையும் உருவத்தில் ஒத்துள்ளனர். இவர்களின் பொருட்பண்பாட்டை விளக்கும் குடிசை மாதிரிகளும், கொத்து, கொடுவாள், வில், அம்புகள், நார் ஏணி, ஆடை, ஆபரணங்கள், பொருட்காட்சியில் காணலாம். நார் ஏணியைக் கொண்டு செங்குத்தான மலைகளிலும், உயர்ந்த மரங்களிலும் ஏறித் தேனைச் சேகரிப்பர். இவ்வாறு ஏறும்போது ஏணியை மைத்துனன் (மனைவியின் சகோதரன்) பிடித்து அவனை காக்க வேண்டுமென்னும் வழக்கு செஞ்சுக்களிடையேயும் இருளர்களிடையேயும் காணலாம்.

**லம்பாடிகள்.**—இவர்கள் நம் நாட்டிலுள்ள இரண்டு கோடி பழங்குடிகளில் மிகக் கவர்ச்சியானவர்கள். இவர்கள் பெரும்பாலும் மத்திய இந்தியாவில் இருந்தாலும், அதிகமாக ஆந்திர பிரதேசத்திலுள்ள தெலிங்கானாவில்தான் காணப்படுகின்றனர். இவர்களை பஞ்ஜிரர் என்றும், சுகாலிகள் என்றும் அழைப்பர். இவைகள் காரணப் பெயர்களாகக் கருதப்படுகிறது. உப்பு (லவணம்) விற்றவர்களாதலால் லம்பாடி என்றும், பசுமந்தை (சுக்வால) கொண்டிருந்ததால் சுகாலிகள் என்றும், வியாபாரிகளாக (பஞ்ஜிரர்) இருந்ததால் பஞ்ஜிரர் என்றும் அழைக்கப்பட்டனர். இவர்கள் உயர்ந்தும், அழகாகவும், நீண்ட மூக்குடன், முக்கியமாக நார்டிக் தோற்றத்துடன் காட்சியளிக்கின்றனர். இவர்கள் விவசாயத்திலும், கால்நடை அபிவிருத்தி செய்வதிலும் சிறந்தவர்கள். ஆங்கிலேய ஆட்சி நிலைப்பதற்கு முன்பு எருதுகளின்மீது உணவுப் பொருட்சுமைகளைக் கொண்டு வாணிபம் செய்துவந்தனர்.

லம்பாடி பெண்கள் தங்கள் இயற்கை அழகோடு பல வண்ணத் துணிகளால் ஆன ஆடைகளில் நகைக் கற்கள், மணிகள், சோழிகள் கண்ணாடித் துண்டுகள் முதலியவற்றை இணைத்தும், அதிகமான தந்த உலோக நகைகளையும் அணிந்து கொள்வர். இவர்களுடைய கண்ணாடித் துண்டுகள் இணைத்த துணி இன்று இந்தியா பூராவிலும் உள்ள மக்கள் அலங்காரப் பொருட்களாக வாங்கி உடுத்துக்கொள்ளும் பொருளாகி விட்டது. இவர்கள் நாட்டியத்திலும் சங்கீதத்திலும் தேர்ச்சிப் பெற்றிருக்கின்றனர். இவர்களுக்கு விருந்து, மதுபானம் மிகப் பிரியம். இவ்வாறு இருந்தபோதிலும் இவர்கள் சீரிய வாழ்க்கையும், உயர்ந்த ஒழுக்கமும் உடையவர்கள். உழவிலும், பண்ணைத் தொழிலிலும் மேம்பட்டவர்கள். கண்ணைக் கவரும் ஆடைகளுடனும், அணிகளுடனும் உள்ள ஓர் மாதிரி லம்பாடிப் பெண் காட்சியில் வைக்கப்பட்டுள்ளது.

**கதபர்.**—இவர்கள் கஞ்சம், விசாகப்பட்டிணம் மாவட்டங்களிலுள்ள விவசாய பழங்குடிகள். இவர்களின் எண்ணிக்கை சுமார் 30,000 ஆகும். இவர்கள் முதலில் பல்லக்கு சுமப்பவர்களாகவும், தோட்டத் தொழிலா

வர்களாகவும் பணிபுரிந்து வந்தனர். இவர்கள் பேசும் மொழி வட மொழியும் அல்ல, தென் மொழியும் அல்ல ; முந்தாரி (Munda ;i) எனப்படும் சவரர், முண்டர் ஒரான் முதலிய சில மத்திய பிரதேச பழங் குடிகளின் மொழியாகும். நிறம் கருப்பு, தோற்றம் மங்கோலியரை ஒத்தது, பெண்கள் இளம் தோற்றத்துடனும் அழகிய சிற்றுடையுடனும் அதிகமான ஆபரணங்களுடனும் காட்சியளிப்பர். எருக்கஞ்செடி, அத்தி மரம் முதலியவற்றின் பட்டையிலிருந்து எடுக்கப்பட்ட நாரில் செய்த ஆடைகளை அணிகின்றனர். இடுப்பில் ஒரு துண்டையும் மேலே ஒரு துண்டையுமே உடுக்கின்றனர். இத் துணிகளில் சிகப்பு, வெள்ளை நீல வண்ணங்களுள்ள அகலமானப் பட்டைகள் தீட்டப்பட்டுள்ளன. காதிற்கு பெரிய பித்தளை கம்பிச் சுருள்கள், கழுத்திற்கு வண்ண மணி மாலைகள், கைக்கு வளையல்கள், காலுக்கு காப்புகள், கை விரலுக்கு மோதிரங்கள், கால் விரலுக்கு மெட்டுகள் முதலிய அணிகளை இவர்கள் அதிகமான அளவில் அணிந்து கொள்கின்றனர். இவற்றுடன் கிளிஞ்சல்—சோழி மாலைகளும் கண்ணாடி மணிகளாலான தலை அணிகளையும் அணி கின்றனர்.

பெண்கள் எருக்கஞ் செடி, அத்திச் செடி முதலியவற்றிலிருந்து எடுக்கப்பட்ட நாரில் நூல் நூற்று, அந்நூலை ஜாப்ரா விதைகளைக்கொண்டு சிகப்பாகவும், அவுரியைக் கொண்டு நீலமாகவும், சாயம் தோய்த்து, பிறகு அந்நூலை தாங்களே செய்த சிறு கைத்தறியிலிட்டு ஆடை நெய்கின் றனர். கதபப்பெண் மேற்படி நூல் நூற்பதிலும், ஆடை நெய்வதிலும் தேர்ச்சியடைந்தால் அவள் திருமணத்திற்கு தகுதியானவள் எனக்கருது கின்றனர்.

கதபர்கள் தாங்கள் பிறந்த இடத்தை அதிகமாக விரும்புவதால், அவர்களின் வாழ்க்கை அவர்களின் கிராமத்தைச் சுற்றியே அமைந் துள்ளது. இவர்கள் தேனீக் கூடுகளை ஒத்த வட்டவடிவமான வீடுகளில் வசிக்கின்றனர். தங்கள் விவசாயத்துடன், வேட்டையாடுதல், மீன் பிடித்தல் போன்ற தொழில்களையும் செய்கின்றனர்.

கதபர்கள் தந்தை வழி மக்கள். இவர்கள் கோத்திர வெளிமணம் அனுஷ்டிக்கின்றனர். திருமணமாகாத ஆண்களுக்கும், பெண்களுக்கும் தனிவிடுதிகள் உண்டு.

இவர்கள் ஜனநாயக ஆட்சியைக்கொண்டுள்ளனர். கிராம சபை அல்லது பஞ்சாயத்து தலைவன், சோடர் எனனும் கல் ஆசனங்களின் மீது அமர்ந்து மற்ற பஞ்சாயத்தாருடன் நீதி வழங்குவது வழக்கம். இவர்கள் பங்குனி, சித்திரை மாதங்களில் வேட்டையாடும் ஓர் விழாவைக் கொண்டாடு வர். இவ்விழாவில் இந்து மதக் கடவுள்களை வணங்குவதோடு, கொத்தார் என்னும் எருமைமாட்டு பலியையும் கொடுப்பர். இறந்தவர்களை அடக்கம் செய்தபின், அவற்றின் மீது கல் நடும் பழக்கம் இவர்களிடம் உண்டு. கதபர்களின் பண்பாட்டை விளக்க ஒரு கதபப் பெண்ணின் மாதிரி உருவம் அவள் அணியும் ஆடை, ஆபரணங்களுடனும் மற்ற பண்பாட்டுப் பொருட் களுடனும் காட்சியில் வைக்கப்பட்டுள்ளன.

**கொண்டர்கள்.**—ஒரிஸ்ஸாவிலுள்ள கஞ்சம் மாவட்டத்தில் இவர்கள வேட்டையாடுதலேயும், புன விவசாயத்தையும் தொழிலாகக் கொண்டுள் ளனர். இவர்கள் 'குய்' என்னும் திராவிட மொழியை பேசுகின்றனர். இவர்கள் பூமாதேவி அல்லது ''தாரை பொண்ணு'' என்னும் தெய்வத் திற்கு நரபலிக் கொடுத்து வந்தனர். பலியிடப்படுபவன் மெரியா என அழைக்கப்படுவான். கஞ்சம் மாவட்டத்திலுள்ள பாலிகுடாவில் காணப் பட்ட ஒரே ஒரு நெடுமரம்தான் இப்பழக்கத்திற்கு அத்தாட்சியாக அமைந் துள்ளது. இந்த நெடுமரம் இங்கு காட்சிப் பொருளாக வைக்கப்பட்டுள்ளது. பலியாகும் மனிதன் சில சமயம் தானே அர்ப்பணித்து கொள்வான். அவ்வாறு யாரும் முன் வரவில்லே யென்றால், விலேக்கொடுத்து வாங்கப் படுவான், அல்லது ஊர் மக்களால் பிடித்துக் கொணரப்படுவான். இவனை எண்ணெய் மஞ்சள் கொண்டு நீராட்டி, பிறகு யானே உருக்கொண்டுள்ள குறுக்கு மரத்தில் கட்டிவிடுவர். இம்மரம், நெடுமரத்தைச் சுற்றி சுற்றி வர சுழற்றுவர். பலியாகும் மனிதனுக்குப் போதைப் பொருளைக் கொடுத்து விட்டு, ஆடவரும், பெண்டிரும், அவனைச் சுற்றிப் பண் இசைத்தும், நடனமாடியும் வருவர். பிறகு அவனை, அவன் உயிர் உடலே விட்டு நீங்கும்வரை அடித்துக் கொன்றுவிட்டு, அவ்வுடலே பல பாகங்களாக வெட்டிவிடுவர். ஒவ்வொரு கொண்டரும், பலியான அம்மனிதனின் உடலி லிருந்து ஒரு சதைத் துண்டை எடுத்துச் சென்று தங்கள் நிலங்களில் புதைத்துவிடுவர். அதனால் அவர்களின் நிலங்களிலுள்ள தீமைகள் ஒழிந்து, அதிக சாகுபடியாகும் என்பது அவர்களின் நம்பிக்கை. 1845-ல் இந்த நரபலி ஆங்கிலேய அரசாங்கத்தாரால் தடுக்கப்பட்டதால் இவர்கள் நரபலிக்குப் பதிலாக கோழி, பன்றி எருமை முதலிய பிராணிகளைப் பலி கொடுக்க ஆரம்பித்தனர்.

கொண்டர்கள் பித்தளையில் செய்த சடங்குப் பொருட்களில் நல்ல பாம்பு, ஆமை, புலி குறிப்பிடத்தக்கவை. இவை இவர்களின் பிரிவுகளைக் காட்டுகின்றன. பித்தளையில் செய்த அழகான மிருக பொம்மைகளையும், மனித உருவங்களையும் வணங்கி, திருமண ஊர்வலங்களில் முன்னதாக எடுத்துச் செல்வர். கொண்டர்களின் திருமணம் பலவகைப்படும். பெண் ணின் பெற்றோர்களுக்கு மணமகன் பணி புரிதல், இருவரும் ஒத்துபோதல், பெண்ணுடன் ஓடி மறைதல், பெண்ணை கவர்ந்துச் செல்லுதல் அல்லது தங்கதி—பாஸா என்னும் கன்னி மாடத்தில் பெண்ணைத் தேர்ந்தெடுத் துக் கொள்ளுதல். மேற்கண்ட முறைகளின் மூலம் திருமணங்கள் நடக் கின்றன. மற்ற பழங்குடி மக்களைப்போல் இவர்களிடத்தும் திருமண ரத்து விதவைத் திருமணம், அனுமதிக்கப்பட்டுள்ளன. விதவை, தன் கணவ னின் இளைய சகோதரனை மணக்கும் முறையும் இவர்களிடம் இருக்கிறது. இறந்தவர்கள் எரிக்கப்படுவதோடு, ஒரு விருந்தும் நடத்துகின்றனர். இவர் களில் ஒரு முக்கிய அம்சம், காட்டு எருமையை வேட்டையாடும் நடனமாகும். ஆண்கள் காட்டு எருமையின் கொம்புகளையும், மயில் தோகையையும் தலே யில் அணிந்துக் கொண்டு இருப்பதைக் காட்சியில் காணலாம். ஆண்கள் வேட்டையாடும் போது வில் அம்புகளையும், போர்க் கோடரிகளையும் உப யோகிக்கின்றனர். இவர்கள் அணியும் ஆடைகள் தழைகளாலும்,

மரப்பட்டை நார்களாலும் ஆனவை. ஆபரணங்கள், பளுவான பித்தளை வங்கிகள், காப்புகள், மோதிரங்கள், சீப்புகள் ஆகும். மேற்கண்ட ஆடை ஆபரணங்களைக் காட்சியில் காணலாம்.

**சோரர்கள்.**—இவர்கள் கஞ்சம், விசாகப்பட்டின மாவட்டங்களில் மூந்தாரி மொழி பேசும் பழங்குடிகள். இவர்களின் எண்ணிக்கை 200,000-க்கு மேல் ஆகும். இவர்கள் கருநிறமும், நடுத்தர உயரமும், தட்டையான மூக்கும், உயர்ந்த எலும்புள்ள கன்னங்களும், சாய்ந்தக் கண்களும் கொண்டவர்கள். பெண்களின் முகம், இருதயத்தின் உருவை ஒத்திருக்கும். ஆண்கள் திடகாத்திரமான தேகத்தைக் கொண்டவர்கள். கருநிறத்தோடு கூடிய மங்கோலிய அம்சங்களை இவர்களிடையே காணலாம்.

சோரர்கள் அன்னியருடன் தொடர்புக் கொள்ளாத் தனித் தன்மை கொண்ட பழங்குடி. இவர்கள் காடுகளில் நீண்டச் சதுரமான வீடுகளை வரிசையாகக் கட்டி வாழ்கின்றனர். சோரர்கள், மலைச்சரிவுகளிலும், சமவெளிகளிலும் பயிரிடுவதோடு காட்டுச் சாமான்களைச் சேகரித்தும் வாழ்கின்றனர். சில சமயங்களில் அஸ்ஸாமிலுள்ள தேயிலை தோட்டங்களுக்குக் குடியேறி தொழிலாளர்களாகப் பணிபுரிந்து வந்தனர். ஆண்கள் வேட்டைக்கு வில், அம்பு, தங்கி என்னும் போர்க் கோடரியையும் உபயோகிக்கின்றனர். இவர்கள் மிகுதியான ஆபரணங்களும் வாத்தியக் கருவிகளும் கொண்ட கலை ஆர்வமுள்ள மக்களாதலால், திருவிழாக் காலங்களில் குடியும், பாட்டும், கூத்தும் காணப்படுகின்றன. மண விழாவிற்கு முன்பு, மணப் பெண்ணை சடங்கு முறையில் கவர்ந்துச் செல்லும் வழக்கம் இன்றும் இருக்கிறது. இவர்களின் மதம் பெரும்பாலான பழங்குடிகளின் மதத்தை ஒத்துள்ளது. முக்கியப் பண்டிகை தினங்களில் பன்றிகள், கோழிகள், முதலியன பலியிடுவர். இறந்தவர்களை எரிப்பதுடன் அவர்களின் எலும்புகளை அடக்கம் செய்யுமிடத்தில் கல்லையும் நடுகின்றனர். இறந்தவர்களின் சடங்குகளிலும், விருந்துகளிலும், எருமையை பலியிடும் பழக்கம் இவர்களுக்கு இருக்கிறது.

சோரர்களின் பண்பாட்டை விளக்கும் பொருட்களில் இசைக் கருவிகளும் இடம் பெறுகின்றன. இவர்களின் கை வளையல்கள், கால் வளையங்கள், தலைப்பாகை, காது தொங்கட்டங்கள், சடை பில்லைகள், மூக்குத்திகள், மோதிரங்கள் முதலியவற்றையும் வில், அம்புகள், தங்கி என்னும் போர் கோடரி, கத்திகள், துளைக்கருவி, கூடைகள், புகைக் குழாய்கள், மரத்தினால் செய்த கிளி, குரங்கு, மனிதன் போன்ற சடங்குப் பொருள்கள் முதலியவற்றையும் காட்சியில் காணலாம். புகைக் குழாய்களை, ஆண்களும், பெண்களும் சாதாரணமாகத் தங்கள் கொண்டைகளில் சொருகிக்கொண்டுச் செல்வர். இவர்கள் வசிக்கும் செவ்வகமான மாதிரி குடிசை காட்சியில் வைக்கப்பட்டுள்ளது.

**கோயர்கள்.**—இவர்கள் கோண்டு (Gond) என்னும் மத்திய பிரதேச பழங்குடிகளின் ஒரு பிரிவு. இவர்கள் கோதாவரி, விசாகப்பட்டினம், ஸ்ரீகாகுளம் முதலிய மாவட்டங்களில் வசித்து வருகின்றனர். பெரும்பாலும்

தெலுங்கு மொழியே பேசுகின்றனர். இவர்களின் எண்ணிக்கை சுமார் 95,000 ஆகும். மலையில் பயிர் செய்பவர்களானாலும், பூமியை உழுது பயிரிடுகின்றனர். இவர்களில் பல தொழில் பிரிவுகள் உண்டு. அவை: கம்ப கோயர்கள் கூடை, பாய் முடைதலையும், கம்மர கோயர்கள் கருமான் தொழிலையும், முசர கோயர்கள் பித்தளைப் பாத்திரம் செய்தலையும் தொழிலாகக் கொண்டுள்ளனர். கோயர்களின் நாட்டாண்மைக்காரர்கள் குட்ட கோயர் அல்லது கொம்மு கோயர் என்னும் பிரிவிலிருந்து தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். இவை ஒரே பழங்குடியில் இருந்து இப்பிரிவுகள், சாதிகளாக எவ்வாறு மாறுதலடையலாம் என்பதை விளக்கும்.

கோயர்கள் ஒவ்வொரு அறுவடையையும் ஒரு திருவிழாவாகக் கொண்டாடுகின்றனர். வேட்டையாடுவதில் இவர்கள் வல்லவர்கள். திருவிழாக்களில் நாட்டியம், நடனம், மதுபானம் எப்பொழுதும் இருப்பதுடன் பிரசித்திப்பெற்ற எருமை நடனமும் இடம்பெறும். இவர்கள் ஜனநாயக பஞ்சாயத்து ஆட்சி அமைப்பை கொண்டுள்ளனர். பஞ்சாயத்துத் தலைவன் பஞ்சாயத்தாரோடு—ஒருமைப்பட்டு அவர்களிடையே ஏற்படும் சண்டை சச்சரவுகளை விசாரித்து நீதி வழங்குகிறான்.

திருமண விழாவிற்கு முன்பு பெண்ணை கவர்ந்து செல்லுவதும், மணமக்களின் தலைகளில் சுரைக் குடுவையில் கொணர்ந்த தண்ணீரை தாரை வார்ப்பதும் முக்கிய மணச்சடங்குகளாகும். கோயர்கள் இறந்தவர்களை எரிப்பதுடன், அவர்களின் எலும்புகளை அடக்கம் செய்த இடத்தில் ஓர் நடுகல் நடுகின்றனர். இவர்கள் தங்கள் மூதாதையர்களையும் இந்து மதக் கடவுட்களையும் வணங்குகின்றனர். கோயர்களின் பண்பாட்டை விளக்கும் பொருட்களான வில், அம்பு, எருமைக்கொம்பும், மயில்தோகையும் கொண்ட தலை அலங்காரமும், காட்டெருமை வேட்டை நாட்டியங்களில் உபயோகிக்கும் மேளம், பறவைப்பொறி, சுரைக்குடுவை முதலியனவும் காட்சியில் வைக்கப்பட்டுள்ளன.

## ஆஸ்திரேலிய பழங்குடிகளின் பண்பாடு

ஆஸ்திரேலிய பழங்குடிகள், தங்களைச் சுற்றியுள்ள வரண்ட பாலைவன பிரதேசத்தையும் பொருட்படுத்தாமல், வேடுவர்களாகவும், நாடோடிகளாகவும் வாழ்ந்து வருகின்றனர். இவர்கள் 20,000 ஆண்டுகட்கு முன்பு ஆசியாவிலிருந்து குடியேறினவர்கள் எனக் கூறப்படுகிறது. ஐரோப்பியரின் காலனி ஆதிக்கம் இங்கு தொடங்கி, அவர்களின் நாகரிகம் அங்கு தழைக்க ஆரம்பித்தபோதிலும், இப்பழங்குடிகள் ஐரோப்பிய நாகரிகத்தை விரும்பாமல், பாலைவனங்களின் மத்திக்கே சென்று, மிகக்கடினமான முறையில் தங்கள் வாழ்நாட்களைக் கழிக்கின்றனர். இவர்களின் எண்ணிக்கை தற்போது சுமார் 50,000 ஆகும். இவர்கள் ஒரு இடத்தில் நிலைக்காமல் தங்கள் உணவைத் தேடி திரிந்துக் கொண்டே இருப்பர். இவர்கள் பிராணிகளை மரக்கத்தி, வில்லெறிக்கொண்டு தாக்கியும், தினை, வரகு போன்ற சாதாரண தானியங்களை அரைத்து, நெருப்பிலிட்டு ரொட்டியாக்கி அவற்றை

உண்டும் காலம் கழிக்கின்றனர். இவர்கள் தங்களை குளிர்காற்றிலிருந்து காப்பாற்றிக்கொள்ள மலை அடிவாரங்களிலும், வெளி குடிசைகளிலும் அவ்வப்போது தங்கிக் கொள்ளுகின்றனர். அதிக குளிரான போதிலும் ஆண்களும், பெண்களும், சிறுவர்களும் ஆடை அணிவதில்லை. கங்காருவின் தோலை குழந்தைகளைப் பாதுகாக்கப் பயன்படுத்துகின்றனர்.

ஆஸ்திரேலிய பழங்குடிகளின் உருவம் தென் இந்திய பழங்குடிகளின் தோற்றத்தை ஒத்திருப்பதால், தென் இந்தியப் பழங்குடிகள் ஆஸ்திரேலியர் இனத்தைச் சேர்ந்தவர்களெனக் கூறுகின்றனர். இவர்கள் நல்ல உயரமும், திடகாத்திரமான உடலும், எடுப்பான புருவங்களும், பரந்த தட்டையான மூக்கும், தடித்த உதடும், கரிய நிறமுள்ள சுருண்ட கேசமும், ரோமம் அடர்ந்த உடலும் கொண்டவர்கள்.

இவர்களின் கருவிகள் வில்லெறி, ஈட்டி, தோண்டும் கழி, உணவு பாத்திரம், சில தோல்கள் ஆகும். இத்துடன் கல், பீங்கான், கண்ணாடி முதலியவற்றில் கத்தி, பிளேட் முதலியவற்றைச் செய்கின்றனர். இப் பழங்குடிகளின் புனிதமானதும், இரகசியமானதுமான சொத்து ஜூருங்கா எனப்படுவது. இதில்தான் இவர்கள் நடத்தும் உபநயன (Initiation) சடங்கின் மர்மம் அடங்கியுள்ளது. ஜூருங்கா மரத்திலும் கல்லிலும் செய்யப் பட்டிருக்கும். இவை முட்டை வடிவமான பொருட்கள். இவற்றின்மேல் பல வட்டமான கோடுகள் கீரப்பட்டிருக்கும். இக்கோடுகளில்தான் அப்பழங் குடிகளின் சரித்திரமே அடங்கியிருக்கிறது. இப்பழங்குடிகளின் கட்டுப்பாடும் திறமையும் இந்த ஜூருங்காவில்தான் அடங்கியுள்ளது. இவை மிக மறைவான இடங்களில் அதி ரகசியமாக வைக்கப்பட்டிருக்கும். அவ்விடங்கள் வயதிலும் அறிவிலும் முதிர்ந்த சான்றோர்களுக்குதான் தெரியும். மரத்தில் செய்த ஜூருங்காவிற்கு ஆங்கிலத்தில் "புல்ரோரர்" எனவும் காளையின் கர்ஜிப்பு என தமிழிலும் பெயராகும். இது இருபக்கமும் ஒழுங்காக செதுக்கப்பட்ட முட்டை வடிவம் கொண்ட ஒரு மரக்கட்டை. இவற்றின் ஒரு முனையிலுள்ள துவாரத்தில், நார் அல்லது உரோமம் கொண்டு பின்னப்பட்ட கயிற்றை கட்டிச் சுழற்றுவர். அப்போது அது தன்னைத் தானே வேகமாக சுழற்றிக்கொள்வதோடு, ஒருவித இரைச்சலை ஏற்படுத்தும். இந்த சப்தமே அவர்களின் தேவதைகளிடமிருந்து வரும் ஒலியெனக் கருதுகின்றனர். ஆண்களுக்கு உபநயன சடங்கு செய்யும் காலத்தில் ஜூருங்காவை உபயோகிப்பர். பெண்களும், உபநயன சடங்கு செய்துக் கொள்ளாத ஆண்களும் இந்த சடங்குகளின் அருகிலேயே அனுமதிக்கப்பட மாட்டார்கள். அதை மீறி வருபவர்களுக்கு மரண தண்டனை விதிக்கப்படும். இச்சடங்கை நடத்தும் முதியோர்கள், மிகக் கடுமையான முறைகளைக் கைக்கொள்வர். இப்பழங்குடி மக்களில் மிகத் திடகாத்திர சரீரம் படைத்தவர்கள் தங்கள் இரத்தத்தை அப்பையன்களின் மீது ஊற்றுவதன் மூலம் எதையும் தாங்கும் இதயத்தை அச்சிறுவர்களுக்கு அளிக்கின்றனர். இச் சடங்கின் மூலம் அச்சிறுவன் பெரியவர்களின் அந்தஸ்தை அடைகிறான். 'ஜூருங்கா' எழுப்பும் பயங்கர இரைச்சலின் நடுவில் அவ்வாலிபன் உலகத்தின் ஆக்கம், தன் இனத்தின் தொடக்கம், மதம், வாழ்க்கை முறை,

முதலியவற்றை அறிந்துகொள்ளுகிறான். பீதி உண்டாக்கும் ஒலியினூடே வலிதரும் விதத்தில் முன் பல்லைத்தட்டி எடுத்தவிடுதலும், உடலில் கற்கத்திகளைக் கொண்டு கீறி உண்டாக்கும் வடுக்களும், அவன் அவ்வினத்தைச் சேர்ந்தவன் என்பதை மனதில் பதியவைப்பதோடு, தான் தன் இனத்திற்கு செய்யவேண்டிய கடமைகளை நினைவூட்டுகிறது.

இவர்களின் வல்லெறி அல்லது வளைத்தடி இரண்டு வகைப்படும். பெரிய சண்டைகளிலும், போர்களிலும் உபயோகிக்கும் பெரிய வளைத்தடி திரும்பி வராத வகையையும், சிறிய பிராணிகளை வேட்டையாட உதவும் சிறிய வளைத்தடி திரும்பிவரும் வகையையும் சேர்ந்தது. தென் இந்தியாவிலுள்ள மரவர் இதேபோலுள்ள திரும்பிவரும் வல்லெறியை உபயோகிப்பதில் கைதேர்ந்தவர்கள். ஆஸ்திரேலிய பழங்குடிகள் போர்களில் உபயோகிக்கும் வல்லெறிகளில் ஒருவகை தனித்தன்மை கொண்டுள்ளது. இது தூண்டில் முள்போல வளைவைக்கொண்டுள்ளதால், வீசும்போது எதிரியை சிக்கவைத்துவிடும்.

ஆஸ்திரேலிய பழங்குடிகள் மிக வேகமாக ஈட்டி வீசுவதில் திறமை மிக்கவர்கள். சாதாரணமாக ஈட்டி எறிபவன் ஈட்டியை அதன் நடுவில் கையால் பிடித்து எறிவான். இதனால் ஈட்டி எட்டிய தூரம் வரையில் தான் பாயும். அதோடு அதன் குறியும் தவற நேரிடும். ஆனால் அவ் ஈட்டியை ஈட்டி எறியும் கருவியில் பதித்து எறிவதால், ஈட்டி எட்டும் தூரம் அதிகரிப்பதோடு, குறியும் தவறாமல் செல்லுகிறது. ஈட்டி குறி தவறாமல் செல்ல, ஈட்டி எறியும் கருவியின் மத்தியில் இருக்கும் குழைவு பயன்படுகிறது. ஈட்டி எறியும் கருவியின் உதவியால், ஈட்டியை மத்தியில் பிடிக்காமல் பின்பக்கத்தில் ஈட்டி எறியும் கருவியோடு சேர்த்து பிடித்து, ஓங்கும்போது, ஈட்டி மட்டும் வெளிப்படும். ஆஸ்திரேலிய பழங்குடிகளின் இச்செயல் இவர்களின் திறமையை நமக்கு எடுத்துக் காட்டுகிறது. இவ்வித ஈட்டி எறியும் கருவிகளை தொல்பொருள் வல்லுநர்கள் முதன்முதலில் புதைப்பொருட் ஆராய்ச்சியில் கண்டெடுத்தபோது, அவற்றை எதற்கு உபயோகித்தனர் என்பதை கண்டறிய இயலவில்லை. ஆனால் ஆஸ்திரேலிய பழங்குடிகள் இன்றளவும் இவற்றை உபயோகிப்பதிலிருந்து, அவற்றின் உபயோகம் புலனாகிறது. தற்காலத்தில் வாழும் பழங்குடிகளிடத்தில் கற்கால மனிதனின் பழக்கவழக்கங்களில் சில இன்றளவும் தொடர்ந்து நிலைத்து வருகிறது என்பதற்கு இது ஓர் சான்றாகும். புதைப்பொருள் ஆராய்ச்சியில் கண்டெடுக்கப்பட்ட சில பொருட்கள், அக்கால மனிதர்கள் எதற்காக, எவ்வாறு அவைகளை பயன்படுத்தினர் என்பதை அறிய, தற்கால பழங்குடிகளிடத்திலுள்ள அதே அமைப்புள்ள பொருட்கள், எஞ்சி, உபயோகத்தில் இருப்பதால் நமக்கு அதன் உபயோகம் தெரிகிறது. இவ்வித சந்தர்ப்பங்களில் தொல்பொருள் வல்லுநர்களுக்கு துணையாக நிற்பது மானிடவியலாகும்.

கற்கால மனிதன் உபயோகித்த கற்கருவிகளும் ஆயுதங்களும் உண்மையிலேயே அவன் செய்தவையா என்னும் ஐயம் அனேகரிடத்தில் சமீப காலம் வரை இருந்துவந்தது. ஆனால் இன்று ஆஸ்திரேலியாவில்

வசிக்கும் பழங்குடிகள் கற்கால மனிதனைப்போல் கற்கருவிகளைச் செய்து உபயோகித்து வருவதால், அப்பழங்குடிகளிடம் தற்காலத்திலும் கற்கால பண்பாடு எஞ்சியிருப்பதை காணலாம். இன்று ஆஸ்திரேலிய பழங்குடிகள் கற்கருவிகளை கற்களில் செய்வதோடு, பீங்கான், கண்ணாடி போன்ற நவீன பொருட்களிலும் செய்கின்றனர்.

## அமெரிக்க பழங்குடிகளின் பண்பாடு

எஸ்கிமோக்கள், மங்கோலியர் இனத்தைச் சேர்ந்தவர்கள். இவர்கள் குள்ளமாகவும், கட்டான உடலும், பழுப்பு நிறமும், பரட்டைத் தலையும், சாய்ந்த கண்களும் கொண்டவர்கள். இவர்களின் எண்ணிக்கை சுமார் 33,000 ஆகும். ஆர்ட்டிக் பிரதேசமாகிய கிரீன்லாந்திலும், வட அமெரிக்காவிலும், பேரிங் கடலின் ஆசிய கடற்கரைப் பகுதிகளிலும் இவர்கள் வசித்து வருகிறார்கள். மிகவும் வசதி குறைவான பிரதேசங்களில் வசித்து வருவதால். இங்கு கிடைக்கக்கூடிய பிராணிகளை உணவிற்கு வேட்டையாடியும், கிடைக்கக்கூடிய மரக்கட்டைகளைக் கொண்டு தங்கள் பாத்திரங்கள் செய்தும் தங்கள் வாழ்நாட்களைக் கழித்து வருகின்றனர்.

காட்சியில் வைக்கப்பட்டுள்ள எஸ்கிமோக்களின் பொருட்கள் : பறவைப் பொறி—6 வால்ரஸ் தந்த குண்டுகளை கயிற்றால் இணைத்து இக் கயிற்றின் மேல் இறகுகளை கட்டி பறவை கூட்டத்தில் வீசினால் பறவையின் கால்கள் இப்பொறியில் சிக்கிக்கொள்ளும். எஸ்கிமோ பெண்டிர் சாதாரணமாக உபயோகிக்கும் எலும்பு–தந்த பிடிகொண்ட ஒரு எஃகு கத்தி ; இரும்பு முனையும் எலும்பு பிடியும் கொண்ட ஒரு ஹார்பூன் அம்பு ; மரத்திலும் எலும்பிலும் செய்த ஈட்டி எறியும் கருவி ; பனிப்படலத்திலிருந்து கண்களை காப்பாற்றிக்கொள்ள நீண்ட சிறு துவாரம் விட்ட மரக்கண்ணாடிகள் (Goggles) ; செம்பு ஊசியும் அதை வைப்பதற்கு ஏற்ற ஓர் எலும்பு குழாயும்.

அமெரிக்க ஐக்கிய நாட்டில் வாழும் அமெரிக்க இந்தியரின் எண்ணிக்கை 4,00,000 ஆகும். இவர்கள் பெரும்பாலும் தனிமையான ஒதுக்கு புறங்களில் வாழ்கின்றனர். இவர்கள் வேட்டையாடுதல் மீன் பிடித்தல்போன்ற தொழிலோடு, காடுவெட்டி நிலம் திருத்தி விவசாயமும் செய்கின்றனர். ஒரு பழங்குடியோடு மற்றொரு பழங்குடி சண்டை போடுதலும், சச்சரவு கொள்ளுதலும் போர்புரிதலும் இவர்களிடத்தில் பழங்கதையாக போய்விட்டன. இவர்கள் கட்டிக்கொண்டிருக்கும் வீடு, இவர்களின் திறமையையும், கைவன்மையையும் எடுத்துக்காட்டுகின்றன. திபி (Tipi) என்னும் இவர்களின் கூடாரம் 3 கொம்புகளில் கூம்பு உருவில் அமைந்திருக்கிறது. இதன்மேல் மரப் பட்டை, பாய் போன்ற பொருட்களைக்கொண்டு மூடியுள்ளனர். விக்வாம் (Wigwam) என்னும் வீடு அரைகோள வடிவில் அமைந்திருக்கிறது. இதன் மேல் மரப்பட்டை அல்லது பாய்போன்ற பொருட்களைக்கொண்டு மூடியுள்ளனர். இராக்குவாய் (Iroquois) இந்தியரின் மரவீடுகள் முன்னேற்றம் அடைந்ததாகும். இவை 50 அடி முதல் 100 அடி வரை ஒரே நீளமாக கட்டப்பட்டிருக்கும். இதில் சுமார் 10 குடும்பங்கள் குடியிருக்க முடியும்.

இந்த நீளமான வரிசையில் ஒவ்வொரு வீடும் தங்கள் கோத்திர சின்னமாகிய பீவர், காக்கை போன்றவைகளால் அலங்கரிக்கப்பட்டிருக்கும். இக் கோத்திரச் சின்னங்கள் மரத்தில் குடைந்தெடுத்ததாகும். பல உருவங்களிலும், அளவுகளிலும் மிக நேர்த்தியாகச் செய்த பானைகள், கூடைகள், பைகள், துணிகள், அணிகள், இவர்களின் கலை ஆர்வத்தையும் திறமையையும் நமக்கு எடுத்துக்காட்டுகிறது. காட்சியில் வைக்கப்பட்டிருக்கும் தோல் பைகள், பைகள், தொட்டில் மூடும் தோல் முதலியன இவர்களின் கலைத்திறமையை எடுத்துக்காட்டும்.

அமெரிக்க இந்தியர்கள், மங்கோலிய இனத்தைச் சேர்ந்தவர்கள். இவர்கள் பழுப்பு நிறமும், கருப்பு கண்களும், உயர்ந்த கன்ன எலும்பும், நீண்ட மூக்கும் கொண்டவர்கள். இவர்கள் பரட்டைத் தலையும், கருமை ரோமமும் கொண்டிருந்தாலும், தங்கள் அகன்ற முகத்தை எப்பொழுதும் மழமழப்பாக வைத்துள்ளனர். ஒவ்வொரு பழங்குடியினிடத்திலும் சில வேறுபாடுகள் காணப்படுகின்றன. பழக்கத்திலும், வழக்கத்திலும். அமைப்பிலும் நீக்ரோக்களும், அமெரிக்க இந்தியர்களும், குடியேறிய வெள்ளையர்களும் தனித்து வாழ்வதுபோல் காணப்பட்டாலும், நாளடைவில் நாகரிகத்தாலும் இனக்கலப்பினாலும் ஒன்றுபட்டு புதிய அமெரிக்க பண்பாட்டை நிறுவியிருக்கிறார்கள்.

அமெரிக்க இந்தியரின் பகுதியில் வைக்கப்பட்டுள்ள பொருட்கள் பெரும்பாலும் வட அமெரிக்க இந்தியரைச் சேர்ந்தவை. வடமேற்கு கடற்கரையில் வசிக்கும் ஹைடா இந்தியரின் மரமுகமூடி இப்பொருட்களில் ஒன்றாகும். இவர்கள் தாங்கள் உழைத்து சேர்த்த விலையுயர்ந்த பொருட்களை (கம்பளங்கள், தாமிரத் தகடுகள்) வாரி வழங்குவதில் சிறந்தவர்கள். இவர்கள் தங்களின் உயர்வையும், மதிப்பையும் நிலை நிறுத்த ஒரு பெரிய 'போட்லாட்ச்' (Potlatch) என்னும் விருந்து வைத்து, அவ்விருந்தில் தாங்கள் சேர்த்து வைத்த பொருட்களை விருந்தினர்களுக்கு பரிசளிப்பர். இதனால் அச்சமயம் இவர்கள் ஏழ்மை நிலையை அடைந்தாலும், மற்றவர்கள் இதே போன்று செய்யும் போட்லாட்ச் விருந்தின் மூலம் இழந்த பொருட்களை பன்மடங்கு அதிகமாக பெறுகின்றனர். மிருதுவான தோலினாலான பணியில் உபயோகிக்கும் இரண்டு ஜோடி காலணிகளும், தோல்பையும் தொட்டிலை மூடும் தோலும் பல வண்ண மணிகளால் அலங்கரிக்கப்பட்டுள்ளன. இவைகள் சியூக்ஸ் (Sioux), செய்யன் (Cheyenne) இந்தியர்களின் பொருட்களாகும். வண்ண பீவர், காக்கை தீட்டப்பட்டிருக்கும் சோமரத்து குவளை குவாகியூடில் (Kwakiutl) இந்தியரது ஆகும். கருப்பு ரோமமும், தகர கண்களும் கொண்ட மரமுகமூடி இராக்குவாய் (Iroquois) இந்தியரது ஆகும். இவ்விந்தியர்கள் 5 தேசங்களின் கூட்டமைப்பினாலும் (Confederacy of five nations), லாங்ஃபெலோவின் (Longfellow) அமரகதை ஹையவாதாவில் வருவதினாலும், உலக முழுமையும் பிரசித்திபெற்றவர்களாக இருக்கிறார்கள்.

அமெரிக்காவின் வட மேற்கு கடற்கரையில் வசிக்கும் குவாகியூடில் (Kwakiutl) இந்தியரின் மீன தூண்டில் பார்ப்பதற்கு மிக வேடிக்கை

யானதும், அதே சமயத்தில் மிக முக்கியமானதுமாகும். இத் தூண்டில் ஆலிபட் (Halibut) என்னும் மீன் வகையைப் பிடிக்க பயன்படுத்துகின்றனர். இத்தூண்டிலின் மேல் மனிதனின் முகத்தை வரைந்திருப்பது குறிப்பிடத் தக்கது. இந்தியர்கள் மாட்டுக்கொம்பை சீப்பு, பொம்மைகள் முதலியன செய்ய பயன்படுத்துவதுபோல் அலாஸ்கா கடற்கரையில் வசிக்கும் ட்லின்ஜிட் (Tlingit) இந்தியர்கள் மாட்டுக் கொம்பை கரண்டி செய்ய உபயோகிக் கின்றனர்.

அமெரிக்க இந்தியர்களின் கோத்திர சின்னமும், கோத்திர வெளி மணமும் குறிப்பிடத்தக்கவை. இவர்கள் தாய்வழி மக்களாவர். நிலம் பழங்குடிக்குப் பொதுவான போதிலும், அதை உழுது பயிரிடும் குடும்பங் களுக்கும் அந்நிலத்தில் தனித்த உரிமையுண்டு.

பெண்ணுக்கு பரியம் இட்டு மணம் செய்விப்பது இவர்களின் வழக்கம். ஆணும் பெண்ணும் வயது வந்த காலத்தில் மிகக் கடினமான சடங்குகளை மேற்கொள்ளவேண்டும். இவர்களின் மதம் ஷாமனிசம் ஆகும். ஷாமன் என்னும் புரோகிதன் மானிடர் உலகத்திற்கும், இறந்தவர்கள் அல்லது தேவதைகளின் உலகத்திற்கும் தொடர்பு ஏற்படுத்துபவன் ஆவான். இவன் மூலமாகத்தான் மனிதர்கள், இறந்த மூதாதையர்களிடத்தோ அல்லது இறந்தவர்களின் ஆவி வாழ்பவரிடத்தோ பேச இயலும். அமெரிக்க இந்தியர்கள் இறந்தவர்களைப் புதைக்கும்போது, அவர்கள் உபயோகித்த பொருட்களையும் கூடவே புதைத்து விடுகின்றனர். ஏனெனில் அப் பொருட்கள் இறந்தவர்களின் கூடவே அடுத்த உலகத்திற்கும் செல்லும் என்பது அவர்களின் நம்பிக்கையாகும். ஆகவே இறந்தவர்களின் ஆவி மறு உலகத்தில் வாழ்கின்றது என்ற நம்பிக்கை இவர்களிடத்தில் இருக் கிறது.

## ஆப்பிரிக்க பழங்குடிகளின் பண்பாடு

பெரும்பான்மையான ஆப்பிரிக்க பழங்குடிகள் பலதரப்பட்ட வாழ்க்கையை மேற்கொண்டுள்ளனர். நீக்ரில்லோஸ் என்னும் காங்கோ குள்ளர்கள் வேடுவர்களாகவும், உணவு சேகரிப்பவர்களாகவும் வாழ்கின்றனர். மேலும் விவசாய பொருட்களை நீக்ரோக்களிடத்திலிருந்து பண்டம் மாற்றும் முறையில் பெறுகின்றனர். ஆயர்களும், உழவர்களும் தங்களின் முக்கிய தொழில்களோடு, உணவு சேகரித்தல், வேட்டையாடுதல், மீன் பிடித்தல் போன்ற சிறு தொழில்களை மேற்கொண்டுள்ளனர். தென் ஆப் பிரிக்காவின் பாண்டு (Bantu) பழங்குடிகள் கால்நடை வளர்த்தல், விவசாயம் செய்தல் போன்ற மிக முக்கியமான தொழில்களை மேற்கொண் டுள்ளனர். கால்நடைகள் இவர்களின் சமூக வாழ்விலும், சடங்குகளிலும் முக்கியத்வம் பெறுகின்றன. இவர்களின் சமூகத்தில் ஒரு மனிதனின் மதிப்பு அவன் வைத்திருக்கும் கால்நடைகளின் எண்ணிக்கைக்கு ஏற்றாற் போல் உயருகிறது. இங்கு கால்நடைகள் இல்லாதவன் நடைப்பிணம். இவன் சொல் அம்பலம் ஏறாது. இவனின் வாழ்நாள் வீணாகும். இந்தியாவில் முதலில் விவசாயமும், பிறகு கால்நடையும் முக்கியத்துவம் பெற்றிருப்பது போன்று, ஆப்பிரிக்காவில் முதலில் கால்நடையும் பிறகு விவசாயமும்

முக்கியத்துவம் பெற்றிருக்கின்றன. ஆப்பிரிக்காவில் கால்நடை பணமாக பயன்படுத்தப்படுகிறது. தலைவனுக்குத் தரப்படும் கப்பமும், விசாரணை சபைகளில் செலுத்தப்படும் அபராதமும், திருமணத்தில் பெண் பரிசமும் கால்நடை உருவில் செலுத்தப்படுகிறது. கிழக்கு ஆப்பிரிக்காவில் வாழும் அம்பா (Amba), அக்கோலி (Acholi), பண்டு (Bantu), டாமா (Dama), கண்டா (Ganda), ஹிமா (Hima), காரமோஜா (Karamoja) போன்ற பழங்குடிகள் உகாண்டாவின் பாலைவனப்பாங்கான பிரதேசத்தில் வாழ்கின்றனர். இவர்களின் முக்கிய தொழில் கால்நடை வளர்த்தல். அதோடு வேட்டையாடுதல், உணவு சேகரித்தல், விவசாயம் செய்தல் போன்ற தொழில்களையும் மேற்கொண்டுள்ளனர்.

கால்நடைகளை காத்து வளர்த்தல் இவ்வித ஆப்பிரிக்க பழங்குடிகளின் பண்பாடாகும். கால்நடைகள் ஆண்களுக்குச் சொந்தமானவை. ஒவ்வொரு ஆண்மகனுக்கும் சராசரியில் 100 அல்லது 200 கால்நடைகள் சொந்தமாக இருக்கும். ஆயினும் காரமோஜா பழங்குடியினிடத்தில் ஒரு ஆண் மகனுக்கு 5 முதல் 500 வரை கால்நடைகள் இருக்கலாம். இவ்வித பழங்குடிகளிடத்தில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் தொழில் பிரிவு உண்டு. ஆண்கள் கால்நடைகளை பராமரித்தும், பெண்கள் விவசாயம் செய்தும் வாழ்கின்றனர்.

ஆற்றங்கரை அருகிலுள்ள மலைச்சரிவுகளில் பெண்கள் புன விவசாயம் செய்வர். அவ்விடத்திலேயே அவர்கள் தங்களின் குடியிருப்பையும் அமைத்துக் கொள்ளுகின்றனர். இப்பெண்களே நிலத்தை பண்படுத்தி, உழுது, விதை விதைத்து அறுவடை செய்கின்றனர். இவர்களின் முக்கிய பயிர் சோளமாகும். மேலும் தங்களுக்கு வேண்டிய காய்கறிகளை தோட்டங்களில் பயிரிடுகின்றனர். நிலத்திலிருந்து விளையும் பொருட்கள் பெண்களுக்குச் சொந்தமாகும். இவர்கள் தங்கள் வீடுகளையும், வேலிகளையும் காட்டு மரங்களைக் கொண்டும், வீட்டின் கூரையை விழல் கொண்டும் அமைத்துக் கொள்ளுகின்றனர். இவர்கள் சோளத்தை மாவாக்கி காய்கறிகளுடன் சேர்த்து உணவாக சமைப்பதற்கும், தண்ணீரைக் கொண்டுவருவதற்கும் மண் பாண்டங்களை உபயோகிக்கின்றனர். சோள மாவிலிருந்து மதுபானம் தயாராக்குகின்றர்.

ஆண்கள் கால்நடைகளின் உணவைத் தேடிக் கொண்டு கால்நடைகளுடன் வீட்டிலிருந்து வெகுதூரம் சென்று தங்கள் பண்ணைகளை அமைத்துக் கொள்கின்றனர். இப்பண்ணைகள் ஒரே இடத்தில் பல நாட்கள் நிலைத்து நிற்காமல் கால்நடைகளுடன உணவிற்கு எறும்புபோல் பல இடங்களில் சிதறியும், அடிக்கடி இடம்விட்டு இடம்மாறிக் கொண்டும் இருக்கும். கோடைக்காலங்களில் இங்கு விவசாய வேலைகள் இல்லாமையால், பெண்கள் தங்கள் ஆண்கள் வசிக்கும் பண்ணைகளில் வந்து சில நாட்கள் தங்குவது வழக்கம். பண்ணைகளில் ஆண்களின் முக்கிய உணவு பால், தயிர், கால்நடைகளின் குருதியும் ஆகும். ஆண் பிள்ளைகள் பெண் பிள்ளைகளைப் போல் வீட்டில் தங்கி விவசாயம் செய்யாமல், கால்நடைகளுடன் போய்க்கொண்டே இருப்பர். பண்ணைகளில் இருக்கும்

பசுக்களை தினமும் பால் கறப்பதற்கும், எருதுகளை குருதி சேமிப்பதற்கும் பயன்படுத்துகின்றனர். ஆனால் குருதி சேமித்தலுக்கு நாளுக்கு ஒரு எருது வீதமே பயன்படுத்தப்படுகிறது.

நிரந்தர விவசாயம் செய்யும் பெண்கள் மட்பாண்டங்களையும், ஆனால் அடிக்கடி இடம் விட்டு இடம் மாறும் ஆண்கள் பண்ணைகளில் மட்பாண்டங்களுக்குப் பதிலாக மரக்கலங்களையும் உபயோகிக்கின்றனர். ஆண் பிள்ளைகள் தண்ணீர் கொணர மரக்கலங்களை பயன்படுத்துகின்றனர். பால் பாத்திரங்களை சுத்தம் செய்யவும், கைகளைக் கழுவிக் கொள்ளவும், பாலை தயிராக்கவும் கோமயத்தை மரத் தொட்டிகளில் சேகரித்து உபயோகப்படுத்துகின்றனர்.

ஒவ்வொரு பையனுக்கும் அவன் தந்தை ஒரு கன்றை பரிசளிப்பார். பையனும், கன்றும் ஒன்றாகச் சேர்ந்து வளர்கின்றனர். 'கன்றுக்கு தந்தை'யென அப்பையனை அழைக்கின்றனர். இப்பையன் பனங் கொட்டை அல்லது ஆமை ஓட்டில் மணியைச் செய்து அக்கன்றின் கழுத்தில் அணிவிப்பான்.

கால்நடைகள் இவர்களின் நாடி. இதை தங்கள் எதிரிகள் கவர்ந்து செல்லாமல் பாதுகாப்பது இவர்களின் முக்கிய கடமையாகும். கால்நடைகளை வேலியமைத்த பண்ணைகளில் இருத்திபதோடல்லாமல், தங்கள் ஈட்டிகளையும் கேடயங்களையும் அருகினில இருக்கும் மரங்களில் சாய்த்து வைத்து வெட்ட வெளிகளில் உறங்குவார்கள். எதிரிகளின் சலசலப்பு கேட்ட மாத்திரத்தில் எல்லோரும் விழித்துக் கொள்வதோடு, மரத்தில் சாய்த்துவைத்திருக்கும் ஆயுதங்களை எடுத்துக்கொண்டு போருக்குத் தயாராவார்கள்.

ஆப்பிரிக்க பழங்குடி பண்பாட்டின் ஓர் முக்கிய அம்சம், '**மரப்பலகை**' வழிபாடாகும். குடிமக்கள் ஒவ்வொருவரின் ஆன்மாவும் ஓர் மரப்பலகையில் குடியிருக்கிறது என்பது அவர்களின் நம்பிக்கை. ஒவ்வொரு ஆடவனும் தன்னுடைய போர்க் கருவிகளையும், மரப்பலகையையும் எப்பொழுதும் சுமந்து செல்வான். இவ்வித மரப்பலகைகளில், அஷாந்தி (Ashanti) பொற்பலகை (Golden stool) சரித்திரப் பிரசித்திப்பெற்றது. 19-ம் நூற்றாண்டின் இறுதியில் மேற்கு ஆப்பிரிக்காவில் குமாசி (Kumasi) என்ற இடத்தில் அஷாந்தி என்ற ஒரு பழங்குடியின் நாட்டை ஆங்கிலேயர்கள் கைப்பற்றினர். ஆங்கிலேய கவர்னர் அஷாந்தி பொற்பலகையை தமக்கு உரிமையான பீடம் எனத் தவறாக எண்ணி அதைக் கொடுத்து விடும்படி கட்டளை இட்டார். இதை எதிர்த்து ஆயிரக்கணக்கான அஷாந்தி மக்கள் போராடி உயிர்துறந்தனர். ராட்ரே (Rattray) என்னும் ஆங்கில மானிடவியலாளர் இப் பொற்பலகையின் கருத்தை ஆங்கிலேய அதிகாரிகளுக்கு விளக்கினார். அஷாந்தி குடிமக்கள் அனைவரின் திரண்ட ஆன்மா அப்பொற்பலகையில் குடியிருப்பதாக அவர்கள் எண்ணியதால் அதை இழந்தால் அவர்கள் அழிந்து போவார்கள் என்று கருதி அதற்காக போர்புரிந்தனர். இதை விளக்கியபிறகு ஆங்கிலேயர் அப்பொற்பலகையை குடிமக்களிடம் இருக்க அனுமதித்தனர். அப் பலகையின்மேல் எவரும் உட்காருவதில்லை. அதன் மகிமையினால் அதை குடிகள் தரையில் வைக்காமல் சதா காலமும் சுமந்து காத்து வருகின்றனர்.

அவர்களின் அரசர் பட்டம் ஏற்கும் விழாவின்போதே அதை மக்கள் காண்பார்கள். மேற்கூறிய அஷாந்தி மரப்பலகை தங்க கவசம் அணிந்தது. இப்பொருட்காட்சிச் சாலையிலுள்ள மரப்பலகை அச்சோலி (Acholi) குடிமக்களுடையது ஆகும்.

ஆப்பிரிக்க பழங்குடிகள் வழிபடும் மற்றொரு முக்கிய கருவி 'காளை கர்ஜனைப்பு' (Bull Roarer) ஆகும். இது ஆஸ்திரேலிய பழங்குடிகள் உபயோகப் படுத்துவதுபோல், வாலிபர்களின் உபநயனச் சடங்குகளில் உபயோகப்படுத்துகின்றனர். மேலும் இப் பழங் குடிகள் தங்களுடைய வழிபாட்டு விழாக்களில் நடத்தும் நடனங்களில் 'சன்சா' (Sansa) என்னும் இசைக் கருவியை உபயோகிக்கின்றனர். இக் கருவியின் கம்பிகள் ஓர் குடைந்தெடுத்த தட்டையான மரக் குடுவையின் மேற் புறத்தில் பொருத்தப்பட்டுள்ளன. இவ்விசைக்கருவி விரலால் வாசிக்கப் படுகிறது.

கிழக்கு ஆப்பிரிக்க பழங்குடிகள் செய்து உபயோகிக்கும் கீழ்க்கண்ட பொருட்கள் அவர்கள் கால்நடை பண்பாட்டை விளக்கும்:—

**பால்குடுவை.**—இதை ஹிமா பழங்குடியினர் மரத்தில் குடைந்தெடுக் கின்றனர். ஒரு சுரை குடுவையை ஒத்துள்ளதோடு, ஓர் நார் உரியில் பொருத் தப்பட்டுள்ளது.

**மரவுரி.**—மரவுரி தயாரிப்பது ஆண்களின் வேலையாகும். இங்கு காணப் படும் அழகிய பெரிய மரவுரி காண்டா பழங்குடி தயாரித்ததாகும். இவ்வுரி மரத்தின் உள்பட்டைகளை உரித்தும், மரத்தடிகளைக்கொண்டு அவற்றை அடித்தும் பதன் செய்யப்பட்டதாகும்.

**புகைக் குழாய்.**—இவைகள் காண்டா பழங்குடிகள் தயாரித்ததாகும். இப்புகைக் குழாயில் இரண்டு பாகங்கள் இருக்கின்றன. ஒன்று, புகையிலையை வைத்து நெருப்பு பற்றவைக்கும் பாத்திரம் (Container). இது சுட்ட களிமண்ணால் ஆனது. மற்றொன்று, புகையை இழுக்கும் குழாய், இது மரத்தினால் ஆனது.

**அம்பு முனைகள்.**—இவை இரும்பால் ஆனவை. அம்பா (Amba) பழங் குடிகள் இவற்றை உபயோகிக்கின்றனர்.

**சக்கரப் பொறிகள்.**—இப் பொறிகள் உள்ளே வரும் விரோதிகளையும், வெளியேறும் கால் நடைகளையும் சிக்க வைக்க அம்பா பழங்குடிகள் பயன் படுத்துகின்றனர். இச் சக்கரப் பொறி பண்ணைகளின் எல்லைப்புறங்களில் பொருத்தப்பட்டிருக்கும்.

**கால்நடையின் கழுத்து மணிகள்.**—இவைகளில் ஒன்று பனங்கொட்டை யிலும், மற்றொன்று ஆமை ஓட்டிலும் செய்யப்பட்டவை.

**ஆபரணங்கள்.**—இந்தியாவிலுள்ள கதபா பழங்குடி பெண்களைப் போல், இவ் ஆப்பிரிக்க பழங்குடி பெண்களும் உலோக வளையங்களை கழுத்திலும், காதிலும், கையிலும், காலிலும் அதிக அளவில் அணிகின்றனர்.

**உதட்டு அணி.**—காரமோஜா போன்ற ஆப்பிரிக்க பெண்கள் உதடுகளைத் துளைத்து, அத்துளையை நாளடைவில் பெருக்க வைத்து, உதட்டு அணிகளை அணிவது வழக்கம். இவ்வணிகள் உணவு உட்கொள்ளவும், பேசவும் தடங்கலாக இருப்பினும், அவர்களை அவ்வணியே அழகு படுத்துவதாகக் கருதி அணிந்து வந்தனர்.

இதுவரையில் கண்ட ஆஸ்திரேலிய பழங்குடிகள், எஸ்கிமோக்கள், அமெரிக்க இந்தியர்கள், ஆப்பிரிக்கப் பழங்குடிகள் முதலியவர்களின் வாழ்க்கை, இம்மக்கள் இன்றளவும் நாகரீக பண்பாட்டோடு தொடர்பு கொள்ளாமல் தனியான ஓர் பண்பாடு கொண்டு வாழ்ந்து வருகின்றனர் என்பதைத் தெரிவிக்கிறது. பழங்குடிகளை திடீரென நாகரிக மக்களாக மாற்ற எடுக்கும் ஒவ்வொரு முயற்சியும், விபரீத விளைவில் போய் நிற்கின்றன. ஆனால், இந்தியப் பழங்குடிகள் கொஞ்சம் கொஞ்சமாக தங்கள் பழம் பண்பாட்டை தாங்களே மாற்றிக்கொண்டு நாகரிக வாழ்க்கையை மேற்கொள்ளுவது மிக வரவேற்கத் தக்கதாக இருக்கிறது.

## பௌதிக மானிடவியல்

பௌதிக மானிடவியல் (மனித உயிரியல்) மனிதனின் பரிணாமத்தை அல்லது மனிதன் முற்காலத்தில் எவ்வாறு தோன்றினான் என்பதையும், இக்காலத்தில் உலகின் பல்வேறு இடங்களில் எவ்வாறு பரவியிருக்கிறான் என்பதையும் விளக்கும். மனிதனின் பரிணாமத்தையும், இப்பொழுது உயிரினங்களில் அவன் நிலைமையையும் ஆராயுமிடத்தில் அவன் பரிணாம விதிகளுக்குட்பட்டும் எல்லா உயிரினங்களுக்கும் படிப்படியான ஒற்றுமை, வேற்றுமைகளை உடையவனாயிருக்கிறான். மனிதனின் உடலமைப்பிலும், வளர்ச்சியிலும் இவ்வித ஒற்றுமை வேற்றுமைகள் காணப்படுகின்றன. மனிதனின் உடலமைப்பு கொரில்லா, சிம்ப்பன்சி, ஊராங் ஊட்டான் போன்ற மனிதக் குரங்குகளின் (Anthropoid Apes) அமைப்பை அதிகமாக ஒத்திருக்கிறது. மனிதனுக்கும், மனிதக் குரங்குகளுக்கும் உள்ள வேற்றுமைகளுக்குத் தொடர்புள்ளன என்பதை தென் ஆப்பிரிக்காவில் கிடைத்த ஆஸ்ட்ரேலோபிதிகஸ் (Australopithecus) என்னும் பாசில் மனிதக் குரங்குகளும், ஆப்பிரிக்கா, ஜாவா, சீனா, ஐரோப்பாவில் கிடைத்த ரோடேசியன் மனிதன், பிதிக்காந்திரோப்பஸ், சீனாந்த்ரோப்பஸ், நியாண்டேர்தல் மனிதன் முதலியவையும் நிரூபிக்கின்றன. இவ்விதம் மனிதனுக்கு உடலமைப்பில் நெருங்கிய குரங்குகளும், தற்போது உயிர்வாழும் மனிதக் குரங்குகள், குரங்குகள், லீமர், லாரிசு, டார்சியர் முதலிய விலங்குகளும் மனிதப் பரிணாமத்தை விளக்குகின்றன.

மானிட வருக்கத்தின் இனவகைகள் அவர்களுடைய உடலுறுப்புகளின் ஒற்றுமை வேற்றுமைகளை அடிப்படையாகக் கொண்டு பிரிக்கப்பட்டிருக்கின்றன. இனம் என்னும் சொல் பற்பல பொருள்களோடு வழங்கப்பட்டு

வருகிறது. இனம் என்பது உயிரியல் பிரிவாகக் கருதப்பட வேண்டும். இந்தச் சொல்லை மொழி, நாடு, சமயம், ச தி, பண்பு இவைகளைக் குறிக்கும் சொல்லாகக் கருதக்கூடாது. மானிட வருக்கத்தின் இன வகைகளை உடலுறுப்புக்களின் தோற்றத்தையும், அளவையும் அறிந்து பிரிக்கும்போது, அவர்களின் உயரம், தலை, தோல், தலைமயிர், கண், மூக்கு, காது, உதடு, கன்னம் இவைகளின் அமைப்பு, அளவு, நிறம் முதலியவைகளை அடிப்படையாகக் கொள்ளவேண்டும். இவைகளைக் கொண்டு காகேசியர், மங்கோலியர், நீக்கிரோவர், ஆஸ்திரேலியர் என்ற பிரிவுகளை மானிடவியலாளர் வகுத்தனர். காகேசியர் (வெள்ளையர்) பிரிவை மேலும் நார்டிக், ஆல்பைன், மத்தியதரையினர் என மூன்று பகுதிகளாகப் பிரித்தனர். இவர்கள் முறையே ஐரோப்பாவின் வடக்கு, மத்திய, தென் பாகங்களில் வசிக்கின்றனர். இந்தியாவில் வாழும் மக்களையும் மேற்கண்டவாறு மூன்று பிரிவுகளாகப் பிரிக்கின்றனர். வடக்கே நார்டிக் இனத்தவரும், மத்திய மேற்கு கிழக்கு பகுதிகளில் ஆல்பைன் இனத்தவரும், தெற்கில் மத்திய தரையினரும் உள்ளனர்.

இனி, ஒவ்வொரு மனித இனத்தின் ஒற்றுமை வேற்றுமைகளை காண்போம் :

**நார்டிக் (Nordics)** இனத்தவர் நல்ல உயரமான உருவமும் சிவந்த மயிரும், நீலக் கண்களும், நேரான ஒடுக்கமான மூக்கும், நீண்ட தலையும், வெண்ணிறம் அல்லது செந்நிற உடலும் உடையவர்கள். இவர்கள் பெரும்பாலும் வட ஐரோப்பாவில் நார்வே, சுவீடன், ஐஸ்லாந்து, டென்மார்க், பெல்ஜியத்தின் சில பாகங்கள், வடமேற்கு ஜெர்மனி, பின்லாந்தின் சில பகுதிகள், பால்டிக் இராச்சியங்களின் சில பகுதிகள் ஆகிய இடங்களில் உள்ளனர்.

**ஆல்ப்பைன் (Alpines)** இனத்தவர் மத்திய ஐரோப்பாவைச் சார்ந்தவர்கள். நடுத்தர உயரமும், திண்மையான உடலும், மாநிற மயிரும், சாம்பல் நிற கண்களும், பழுப்பு நிற உடலும், அகன்ற மூக்கும், உருண்ட தலையும், அடர்த்தியான மயிரும் உடையவர்கள். இவர்கள் மத்திய தென் மேற்குப் பிரான்ஸ், பெல்ஜியத்தின் சில பாகங்கள், சுவிட்ஸர்லாந்து, தென் ஜெர்மனி, ஆஸ்திரியா, ஹங்கேரி, செக்கோஸ்லோவாக்கியா, வட இத்தாலி ஆகிய நாடுகளில் உள்ளனர். பிரான்சும் ஜெர்மனியும் பெரும்பாலும் ஆல்ப்பைன் நாடுகள்.

**மத்திய தரையினர் (Mediterraneans)** மாநிற இனத்தவர்கள். கருநிறக் கண்களும், கருமயிரும், நீண்ட அல்லது வளைந்த மூக்கும், நீண்ட தலையும், குட்டை உருவமும், மெல்லிய உடலும் உடையவர்கள். இவர்களில் பெருதியாக மாற்றுவகையினர் உள்ளனர். இவர்கள் மத்திய தரைக்கடலை அடுத்த வட ஆப்பிரிக்காவின் எல்லைகளிலும், தென் ஐரோப்பா முழுவதிலும் காணப்படுகின்றனர். ஸ்பெயின், போர்ச்சுக்கல், சிசிலி, தென் இத்தாலி, பிரிட்டன், அயர்லாந்து ஆகிய நாடுகளில் பரவியுள்ளனர்.

**மங்கோலியர் (Mongoloids)** குட்டை உருவமும், கட்டான உடலும் மஞ்சள் - பழுப்பு மேனியும், பரட்டைத் தலையும், சாய்ந்த கண்களும் கொண்டவர்கள். இவர்கள் கிரீன்லாந்து, வட அமெரிக்கா, பேரிங்கடலின் ஆசிய கடற்கரை பகுதிகள், சீனு, திபத், லாப்ஸ் முதலிய இடங்களில் பரவியுள்ளனர்.

**நீக்கிரோவர் (Negroes)** சாதாரணமாக நல்ல உயரமாக இருப்பர். ஆனால் இவ்வினம் பல கிளை பிரிவுகளைக் கொண்டிருப்பதால் குட்டை உயரம் உடையவர்களும் உள்ளனர். உலகத்தில் உயரமாக உள்ளவர்கள் நிலோடிக் நீக்கிரோவர் (Nilotic Negroes). மிகவும் குட்டையாக இருப்பவர்கள் காங்கோ குள்ளர்கள் (Congo pygmies) எனப்படும் ஒருவகை நீக்கிரோக்கள். நீக்கிரோவர் கருத்த உடலும், நீண்ட தலையும். பரந்த மூக்கும் கொண்டவர்கள். இவ்வினத்தவர் ஆப்பிரிக்காவில் மட்டுமின்றி, ஓசியானிக், மிலனேசியா முதலிய இடங்களிலும் வாழ்கின்றனர்.

**ஆஸ்திரேலியர் (Austroloids)** நல்ல உயரமும், திடகாத்திரமான உடலும், எடுப்பான புருவங்களும், பரந்த தட்டையான மூக்கும், தடித்த உதடும், கரிய மேனியும், சுருண்ட மயிரும், ரோமம் அடர்ந்த உடலும் கொண்டவர்கள்.

இவ்வித இனப் பிரிவுகள் நிரந்தரமானவை அல்லவென்றும், மனித வருக்கத்தின் இனங்கள் தாவரங்கள், விலங்குகள் போன்று தனித்தவை அல்லவென்றும், நாகரிகம் தோன்றிய காலத்திலேயே மனித வருகத்தின் இனங்கள் ஒன்றோடொன்று கலந்தும் பிரிந்தும் கலப்பினங்கள் ஏற்பட்டு விட்டமையாலும், இன வேற்றுகள் எல்லாம் அமைப்பில் மட்டுமே அல்லாமல் அறிவு, திறமை, கலை, பண்பாடு இவைகளைத் தாக்குவதில்லை என்றும், உடலமைப்பு மானிடவியலாளர்கள் கொள்கின்றனர்.

பொருட்காட்சியில் மானிட உயிரியல் இனப் பிரிவுகளை விளக்க பழங்கால மனிதனின் எஞ்சிய பாகங்களிலிருந்து திரட்டி சீரமைத்த மூளை, மண்டை ஓடு இவைகளின் வகைகளும், தற்காலத்திலுள்ள மானிட இன வகைகளின் மண்டை ஓடுகளும், இவைகளை விளக்கும் புகைப்படங்களும் வைக்கப்பட்டிருக்கின்றன. சீரமைத்த உருவங்களில் பிதிகாந்திராபஸ் (ஜாவா மனிதன்), நியாண்டர்தல் மனிதன், சைனந்திராபஸ் (பெகிங் மனிதன்), க்ரோ மாக்னன் மனிதனும், தற்கால மனிதனின் இனங்களை விளக்க ஆஸ்திரேலிய பழங்குடி, நீக்கிரோ, மங்கோலியன், மத்திய தரை இனத் தென் இந்திய மனிதனின் மண்டை ஓடுகளும் உருவப் படங்களும் வைக்கப்பட்டுள்ளன.



கொண்டர்கள்—காட்டு எருமை நடனம்.



கதகளி உருவங்கள்—பச்சை, கத்தி, ஸ்த்ரீ, தாடி.




இராமர்—சயாமப் பாவைக்கூத்து.




சீதை—ஆந்திர தோல் பொம்மை.



கோயப் பெண்.
கோதாவரி மாவட்டப் பழங்குடி.




காடர் பெண்.
ஆனைமலைப் பழங்குடி.




மெரியா பலிபீடம்

கொண்டர்கள் நரபலி கொடுத்துவந்த நெடுமரம். கஞ்சம் மாவட்டத்தில் பாலிகுடாவில் கிடைத்தது.



புதிய கற்கால கற்கருவிகள்.



பழங்கற்கால கற்கருவிகள்.



எட்கார் தர்ஸ்டன்.
மானிடவியலாளர்.



இராபர்ட் புரூஸ் புட்.
தொல்பொருளியலாளர்.



சோர சாலியன்—ஆந்திர பழங்குடி.




மலை வேடன்—கேரளப் பழங்குடி.




தண்டா புலையப்பெண்—கேரளப் பழங்குடி



கதபப்பெண்—ஒரிஸ்ஸா பழங்குடி



சவுண் என்னும் பர்மிய யாழ்.




பஞ்சமுக வாத்தியம்.




எருதிகள் துளைக்கும் முறையில் தீ உண்டாக்குதல்.



பணியர்கள் உராயும் முறையில் தீ உண்டாக்குதல்.



ரூலெட் என்னும் இத்தாலிய பானை—அரிக்கமேட்டில் கிடைத்தது.



ஆம்போரா என்னும் இரு கைப்பிடியுள்ள ஜாடி. இவ்வித பாத்திரங்களில் ரோமானியர் தென் இந்தியாவிற்கு மது கொண்டுவந்து வாணிபம் செய்தனர்



ஒரிஸ்ஸா பழங்குடிகள் கொண்டர்கள்—அம்பைக்கொண்டு வைத்தியம் செய்தல்.



இருளர் தேன் சேகரித்தல்.



*நீலகிரி—தொதுவர்களின் இருப்பிடங்கள்.*



தெலிங்கானம்—லம்பாடிகளின் இருப்பிடங்கள்.



ஆஸ்திரேலியப் பழங்குடிகள்.



அமெரிக்க இந்தியப் பழங்குடி.



லம்பாடிப் பெண்கள்.



சோரப் பெண்கள்.



கதபப்பெண் கைத்தறியில் நார் ஆடை நெய்தல்.



நீலகிரி கோடர்கள் பானை செய்யும் முறை.



கேரளப் பழங்குடி—உல்லாடன் வேட்டையாடுதல்.



ஆந்திரப் பழங்குடி—செஞ்சுக்கள் வேட்டையாடுதல்.